www.tamilarangam.net


# ஈழநாதத்தில்... 

விவசாயச் சிறப்பிதழ் உள்ளே...

திருவள்ளுவர் ஆண்டு 2026 மேழம் 7 (21.04.95) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வருஞ்செய்தித்தாள் அன்பளிப்பு: 40p










# பேச்சுவார்த்தையில் ஏமாற்றம்

யாழ்ப்பாணத்தில் 10.04.95 அன்று நடைபெற்ற நான்காம் கட்டப் பேச்சுவார்த்தையில் எதுவித முன்னேற்றமும் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. கட்டங்கட்டமாக நகரும் பேச்சுவார்த்தைத் தொடரின் நான்காம் கட்டம் "தொடரும்" என்ற முடிப்புரையுடன் முடிவுற்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. மேற்படி பேச்சுக்கள் "ஏமாற்றம் தருவதாகவே அமைகின்றது" எனத் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற் பிரிவுப்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் பத்திரிகையாளர் மாநாட்டிற்கூறியுள்ளார்.

அரசு தமிழ்மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்க எடுக்கும் தமது நிலைப்பாட்டில் மாற்றம் எதையும் செய்யாமற் போனதே பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் அடைய முடியாமற் போனதற்கு காரணமாகும்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற 4ஆம் கட்டப் பேச்சுவார்த்தையில், புலிகள் தரப்பில் அரசியற்றுறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், தமிழீழ நிர்வாகப்பொறுப்பாளர்திரு.டொமினிக், அரசியற்றுறைத் துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர்திரு.ரவிஆகியோரும்சிறீலங்கா அரச தரப்பில் பலபத்த பெண்டி, பேராயர் கெனத் பெர்னாண்டோ, உயாங்கொட, அபயசேகர, பீரிஸ், ராஜரட்ணா ஆகியோரும்கலந்துகொண்டனர்.

தரப்பட்ட உறுதிமொழிகளை நிறைவேற்றத்தலைவர்பிரபாகரன்கொடுத்த காலக்கெடுவிற்குள் முடியாதென

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்...

சந்திரிகாவின் கடிதத்திற்கு விடுதலைப்புலிகளின் விளக்கம் உள்ளே

பலாலியில் இராணுவத்தை தாக்கியதான குற்றச்சாட்டிற்கு

## "புலிகள் மறுப்பு"

பலாலியில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக, சிறீலங்கா அரசுகூறும் சம்பவத்திற்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லையென விடுதலைப்புலிகள்தெரிவித்துள்ளனர்.

இடைக்காட்டுப் பகுதியில் உள்ள இராணுவ காவலரண்கள்மீது 8.4.95 அன்று நண்பகல் 1.40 மணியளவில் தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும் இதில் சிறீலங்கா இராணுவத்தினர் இருவர் உயிர் இழந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சுத் தலைமைச் செயலகம்கூறியுள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கையில், தொண்டமனாற்றுப் பகுதியில் இருந்து ஊடுருவி வந்தவர்கள் தாக்குதலை நடாத்தியதாகவும் இராணுவத்தினர்திருப்பித் தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இச்சம்பவங்களுக்குவிடுதலைப்புலிகள்மறுப்புத் தெரிவித்துள்ளனர். மேற்படி சம்பவத்திற்கும் தமக்கும் எதுவித தொடர்புமில்லையெனவும், இது விடுதலைப் புலிகளுக்கு எதிரான, திட்டமிடப்பட்ட விசமப் பிரச்சாரம் எனவுங் குறிப்பிட்டனர்.

குர்திஷ்மக்கள் நெதர்லாந்து "ஹேக்" நகரில் அமைக்கும் பாராளுமன்றத்தில்

## விடுதலைப்புலிகளின் மத்தியகுழு உறுப்பினர் உரை




நெதர்லாந்து 'ஹேக்' நகரில், 12.04.95 இல் குர்திஷ்ரான் 'தற்காலிக பாராளுமன்றம்' தொடக்க விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு பல்வேறு நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் விருந்தினராக வரவழைக்கப்பட்டு இருந்தனர். விடுதலைஅமைப்புக்களின்பேரில், தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமே விசேடமாக அழைக்கப்பட்டிருந்தனர். விடுதலைப் புலிகளின் சார்பில், அதன் மத்தியகுழு உறுப்பினர்திரு.லோறன்ஸ் திலகர் அவர் கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். வெளிநாடுகளில் வாழுகின்ற குர்திஷ் மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட இப்பாராளுமன்றம், குர்திஷ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தைச் சனநாயக ரீதியாக, உலகின் பார்வையில் வைப்பதையும், உலக நாடுகளில் அதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதையும்நோக்காகக்கொண்டது. காலங்காலமாகக் குர்திஷ் மக்கள் ஒடுக்கப்பட்டதும், மேற்குலகினால் பயன்படுத்தப்பட்டதும் உலக மக்கள் அறிந்ததே. ஆனால், அந்த அடக்குமுறையின் மத்தியிலும் அவர்கள் போராடுவதும் தம்மைத் தனியான ஓரினமாக அடையாளங்காட்டமுனைவதும், அதன் ஓர் அங்கமாகத் தமக்கான பாராளுமன்றம் ஒன்றினை நெதர்லாந்து 'ஹேக்' நகரில் அமைத்துள்ளார்கள். மேற்படி தொடக்கவிழாவிற் கலந்து கொண்டபின் விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர் திலகர் அவர்கள், செய்தியாளர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு பேசும்போது, தமிழ் மக்களது போராட்டமும், குர்திஷ் மக்களின் போராட்டமும் ஒன்றே. விடுதலைக்காக இருசாராரும் இணைந்து ஆற்ற வேண்டிய பணி பாரியது என்றும் குறிப்பிட்டார்.

## அன்னை பூபதி நினைவு ஊர்வலத்தில் பொலிசார் அட்டூழியம்

இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்புக்கு எதிராக சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து, தமிழீழத்தின் ஈகச்சுடராகிவிட்ட அன்னை பூபதியின் ஏழாம் ஆண்டு நினைவு நாள் 19.03.1995 தொடக்கம் 19.04.1995 வரை தமிழீழமெங்கும் மிகவும் சிறப்பாகவும், எழுச்சியாகவும்கொண்டாடப்பட்டது. இந்நாட்களில் அன்னையின் நினைவாக அடையாள உண்ணாவிரதங்களும், சிரமதானப்பணிகளும்,

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்...

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொருண்மிய முடக்கமும் போர்த் தொடக்கமும்

சித்திரை 19 ஆம் திகதியிலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்தும் போர் நிறுத்தநடவடிக்கையிலிருந்தும் விலகியதைத்தொடர்ந்து, சிறீலங்கா அரசு தமிழீழ மக்கள் மீதான பொருண்மியத்தடையினை உக்கிரமாக்கியுள்ளதாக பிபிசி செய்தி தெரிவிக்கின்றது. எரிபொருள், உரம், இலத்திரனியற் பொருட்கள், என்பனவற்றை உள்ளடக்கிய தடையினை வன்மையாக்கும் சிறீலங்கா அரசு, தனது கடற்படைப் படகுகள் புலிகளினால் தாக்கப்பட்டதாகவும் இத்தாக்குதல் சமாதானப் பேச்சுவார்த்தைக்கும் போர்நிறுத்த நடவடிக்கைக்கும் எதிரான செயலாகுமெனவும் புலிகள்மீது குற்றம் சாட்டியுள்ளதாக இச்செய்தி மேலுங் கூறுகிறது, இதேவேளை சிறீலங்காவின் இனப்பிரச்சனைக்குரிய தீர்வு நோக்கி, "தான் முயல்வதாகவும்" சிறீலங்கா அரசு இப்போதும் கூறுகிறதாம்.(??)

இது பொருண்மிய முடக்கமா? இல்லை போர்த் தொடக்கமா? என எண்ணத்தூண்டுகிறது.

## பேச்சுக்களில்ஏமாற்றம்

(முதலாம்பக்கத்தொடர்ச்சி...)

தெரிவித்த அவர்கள், மீன்பிடித்தடையைமுற்றாக விலக்க முடியாதெனவும் சில பகுதிகளில் இதைத் தளர்த்த மட்டுமே முடியு மெனத் தெரிவித்தனர். மேலும் பூநகரிப் பாதையை விட்டு 500 மீற்றர்விலகிநிற்கமட்டுமேமுடியுமென தெரிவித்த அவர்கள், கிழக்கில் புலிகள் ஆயுதங்க ளுடன் நடமாட இராணுவம் ஒப்புக் கொள்ளாது என்றும் தெரிவித்தனர். இப்படியாக உறுதியளித்த வாக்குகளை நடைமுறைப்படுத்த இயலாத காரணத்தாலும், மற்ற முடிவுகளில் மாற்றம் எதையும் செய்ய முடியாததாலும் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் காணமுடியாமல் போனது எனத் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். கடந்த ஆறுமாத காலமாக கொடுத்த ஒரே பதில்களை மீண்டும் தருவதாலும், மற்றஉறுதிமொழிகளைநடைமுறைப்படுத்துவதில் ஆக்கபூர்வமான முடிவுகள் எதையும் எடுப்பதில் இணக்கம் காணப்படவில்லை எனவுந் தெரிவித்தார். செய்தியாளர் மாநாட்டில் எழுப்பபட்ட சில கேள்வி, பதில்கள் பின்வருமாறு:

கேள்வி: நான்காம் கட்ட பேச்சுக்கள் குறித்துத்தங்கள்கருத்துக்கள்என்ன?

பதில்: இந்தப் பேச்சுவார்த்தை கடந்த காலங்களில் நடந்த பேச்சுவார்த்தை போலவே எந்த ஒரு முடிவுகளையும் எடுக்கக் கூடிய நிலையில் இருக்கவில்லை.வழமைபோலவேவாக்குறுதிகளாகவும், உறுதிமொழிகளாகவும் இருந்தனவே தவிர, உடனடியாக அமுல்படுத்தவோ,மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு உடன் தீர்வு காணப்படக் கூடியதாகவோ இருக்கவில்லை. இப்பேச்சுவார்த்தை மூலம் நாமும்எமதுமக்களும்எதிர்பார்க்கின்ற எதுவும் கிடைக்கவில்லை. இது எமக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்துள்ளதுஎன்றேகூறலாம்.

கேள்வி:பேச்சுக்களின்போதுஉங்களது கருத்துக்களைமுன்வைத்தீர்களா?

பதில்:ஆம்.நாம்எமது கருத்துக்களை மிகவும் தெட்டத் தெளிவாகவும் உறுதியாகவும் வெளிப்படுத்தினோம். குறிப்பாக பொருண்மியத்தடை நீக்கம் குறித்த விடயத்தில் அரசு பழைய நிலைப்பாட்டையே கொண்டுள்ளது. அரசு முன்னர் தடைநீக்கம் செய்ததாக கூறிய பொருட்களை அனுப்பி வைக்கவே தயக்கம் காட்டுகின்றது. இது அரசின் காலம் கடத்தும் தந்திரம் என்று அவர்களுக்கு சுட்டிக் காட்டினோம்.

கேள்வி: 4ஆம் கட்டப் பேச்சுக்களில் கலந்துகொண்ட அரச தரப்பு பிரதிநிதிகளின் நிலைப்பாடு எதுவாக இருந்தது?

பதில்: அரச தரப்பு பிரதிநிதிகளாக இருந்ததினால் அரசினதும், இராணுவத்தினதும் இறுக்கமான நிலைப்பாட்டை நியாயப்படுத்துவதாகவே இருந்தது. அவர்கள் எமது மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை நேரடியாகக் கண்டுகொண்டபோதிலும் அதனைக் கரிசனையிற் கொள்ளாமல் தமது முடிவுகளை நியாயப்படுத்துவதாகவே இருந்தனர். இது எமக்கு பலத்த ஏமாற்றத்தைத் தந்தது. இவ்வாறு திரு. தமிழ்ச்செல்வன் அம் மாநாட்டில் தெரிவித்தார்.

மேலும் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு கொழும்பு திரும்பிய அரச தரப்பு பிரதிநிதிகள் புலிகளின் நிலைப்பாடு குறித்துத் தமது அரசிற்கு விளக்கம் அளித்துள்ளனர். இதனைத் தொடர்ந்துசிறீலங்காஅரசுஉயர்ட்டத்தில்தீவிர மந்திராலோசனையை மேற்கொண்டது. இதேவேளை, தமது அரசின் பதில் கிடைக்குமென யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த சிறீலங்கா தரப்புக் குழுவினர் பதிலேதும் கிடைக்காத நிலையில்மாலை மூன்றுமணியளவில் உலங்கு வானூர்தி மூலம் கொழும்பு திரும்பினர்.

# தப்பிய இராணுவத்தினரின் தப்பிதச் செயல்கள்

வடக்கு கிழக்கின் போர்முனையில் இருந்து இரகசியமாக ஒளிந்து ஓடித்தப்பிய சிறீலங்கா இராணுவத்தினர் தர்மசிறி அகலகட, பியதர்மவர்தன ஆகிய இருவரும் 60 கிலோ எடையுள்ள கஞ்சாவைக் கடத்தியது, கேமகமவில் வீடொன்றை கைக்குண்டு வீசித் தாக்கி சேதப்படு த்தியது, பந்துல தருமசிறி, எச். எம் பத்மசிறி என்பவர்களை சுட்டுக்கொல்ல முயறது போன்ற குற்றச் செயல்களுக்காக சிறீலங்காப் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். சிறீலங்கா, வடக்கு கிழக்கிற்கு அனுப்பும் படைவீரர்களின் தார்மீக ஆற்றல் அவர்கள் எங்கு சென்றாலும்தொடர்கிறது.

## வர்க்கப்போராட்டமாகக்காட்டும் முயற்சியில் 'சிங்களப் புத்திஜீவிகள்

தமிழ் சிங்களத் தேசிய இனங்களுக்கிடையேயான பிரச்சினையை வர்க்கப்போராட்டமாகக் காட்டும் பழைய முயற்சிக்கு புதிய உத்வேகம் கொடுக்கும் முயற்சிகள் சிங்களப் புத்திஜீவிகள் சிலரிடை மீண்டும் தலைதூக்கியுள்ளது. கலாநிதி ரோகண லஷ்மண பியதாச இப் போராட்டம் இருஇனங்களிடையேயான ஒருபோராட்டம் அல்ல. அதிகார வர்க்கங்களிடையேயான போராட்டம் எனத் தமிழீழப்போராட்டத்தை 'இணைப்போம் கரங்கள்' புத்தக வெளியீட்டு விழாவில் வர்ணித்துள்ளார்.

# பௌத்தத்திற்கே முதலிடம்

## □ சிறீலங்கா அரசியல் விவகார அமைச்சர்

சிறீலங்காவின் நீதி அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் அவர்களே, சிறீலங்காவின் சந்திரிகா அரசு செய்யவுள்ள அரசியலமைப்பு மாற்றங்களுக்கானநகல்வரைவுகளை தயாரிக்கின்றார். இவர் சமீபத்தில் அஸ்கிரிய மடாதிபதி பலியான சிறீ சந்தானந்ததேரோ,மல்வத்தமகாநாயக்க தேரோ, இறம்புக்வெல சிறீ வித்தாச்சி ஆகியோரைச் சந்தித்து உயர்நீதிமன்ற அரசியல்அமைப்பு திருத்த சட்டத்தின் 13 ஆவது சரத்தின் கீழ் பௌத்தம் பாதுகாக்கப்படக் கூடியவகையில் உரிய நடவடிக்கை அனைத்தும் மேற்கொள்ளப்படுமென வாக்குறுதி அளித்துள்ளார். பௌத்த மதத்திற்கு வழங்கப்படும் விசேட இடம், தேசியக் கொடியின் இன்றைய நிலை என்பன தொடர்ந்தும் பேணப்படக்கூடிய வகையிலேயே புதியதிருத்தங்கள் மேற் கொள்ளப்படும்எனவுந்தெரிவித்தார்.

# இலங்கைத்தீவு முழுதும் சிறீலங்காக்கொடி பறக்க வேண்டும்

### – அஸ்கிரியப் பீடாதிபதி வற்புறுத்தல்

'சிறீலங்காவின் தேசியக் கொடி இலங்கைத்தீவு முழுவதற்கும் உரியதாகும். சிறீலங்காக் குடியரசின் தேசிய நிர்வாகம் 25 மாவட்டங்களுக்கும் நிறைவாக நடைபெற வேண்டும். அதேபோன்று இலங்கை முழுவதும் பௌத்த மதத்திற்கும் தேசிய கீதத்திற்கும் முதலிடம் வழங்கப்பட வேண்டும்'.

இவ்வாறு சிறீலங்காவின் நீதி அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிசிடம், அஸ்கிரிய பீடாதிபதி பலிபானே சிறீ சந்தானந்த தேரோ வற்புறுத்தியுள்ளார்.

'இவை தொடர்பாக மக்கள் எம்மிடம் வினவுகின்றார்கள்.இது குறித்து அரசு தெளிவுபடுத்த வேண்டும்.' என வலியுறுத்தியுள்ளார்.

# யுத்த மூலமே தீர்வென்போர் முடிந்தால் யாழ் சென்று வாருங்கள்

## □ வை.பி.டி.சில்வா

'இலங்கைத் தீவில் சமாதானம் தேவையில்லை. போர் மூலம் பிரச்சினையைத் தீர்ப்போம் என்று கூறுபவர்கள் இயலுமானால் யாழ் நகருக்கு சென்று வரும்படி நான் கேட்கிறேன்'.

இவ்வாறு சிறீலங்காப் பாராளுமன்ற உறுப்பினர் வைபிடி சில்வா, நுவரெலியாவில் வைத்துப் பகிரங்கச் சவால் ஒன்றை விடுத்துள்ளார். மூன்று தடவை யாழ் சென்று வந்துள்ளதாக கூறிய இவர், காலஞ்சென்ற விஜேகுமாரதுங்காவுடன் முதற் தடவையாகத் தான் யாழ் சென்றதாகவும் பின்னர் சென்ற சிறீலங்காத் தேர்தல் நேரத்திலும்கடந்தபெப்ரவரி16ஆம்நாள் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பொழுதும்தான்யாழ்சென்றுவந்ததாகவும் கூறினார். கடந்த பன்னிரண்டு ஆண்டுக்கும் மேலாக இந்நாட்டில் போர் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்தப் போரினால் இந்நாட்டில் வாழும் மக்கள் தான் இறந்து போகின்றார்கள். ஆனால் எவரும் வெற்றி பெற்றது கிடையாது.இங்கு பொருண்மியத்தையும் வளத்தையும் பெருக்க வேண்டுமானால் உடன் அமைதி தேவைஎனஅவர்மேலுங்கூறினார்.

# பூநகரியை அகற்றினால் புரட்சி வெடிக்குமாம்

'யாழ் குடாநாட்டிற்குப் பாதை திறந்து விடுவதற்காகப் பூநகரி இராணுவ முகாமை அகற்றினால் இராணுவப் புரட்சி ஏற்படும், இப்புரட்சியைத் தொடர்ந்து நாட்டில் இராணுவ ஆட்சி ஏற்பட்டுவிடும். இதனாலேயே பூநகரி முகாமைஅரசினால்அகற்றமுடியாமல் உள்ளது' இவ்வாறு ஆங்கிலத் திருச்சபையின் ஆயர் கென்னத் பெர்னாண்டோதெரிவித்தார்.

யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினருடனான கலந்துரையாடலின்போது, பூநகரி முகாம் குறித்து கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதேமேற்கண்டவாறுதெரிவித்தார்.

'பூநகரிஇராணுவமுகாமைமூடிவிட்டு, பாதுகாப்பான பாதை ஒன்றைத் திறக்கும் விடயத்தில் அரசு இராணுவ தரப்பினரை மீறி ஒரு முடிவை எடுக்க முடியாமல்உள்ளது.அவ்வாறுமுடிவு எடுத்தால் அரசு மீதான இராணுவத்தினரது எதிர்ப்புணர்வு அதிகமாகி இவ்எதிர்ப்புணர்வு உச்சக்கட்டத்தை அடைந்து புரட்சிக்கு வழிவகுக்கும்.' எனவும் தெரிவித்தார்.

# அன்னை பூபதி நினைவு...

(முதலாம்பக்கத்தொடர்ச்சி.....)

எழுச்சிக் கூட்டங்களும், எழுச்சி ஊர்வலங்களும்நடைபெற்றுள்ளன.

மட்டக்களப்பில், பொதுமக்களால் நடாத்தப்பட்ட எழுச்சிஊர்வலத்தை சிறீலங்காப் பொலிசார் குழப்பியுள்ளனர். பொது மக்கள் ஊர்வலமாகச் சென்றவேளை, சிறீலங்காப் பொலிசார் அவர்களை வழிமறித்துத் தாக்கியதுடன், கண்ணீர்ப் புகைக்குண்டுகளையும்வீசியுள்ளனர். அதேவேளை, தலைக்குமேலாக கண் மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர் என அறியப்படுகின்றது.

சிறீலங்காப் பொலிசாரின் இத்தகைய அடாவடித்தனம் தொடர்பாக விடுதலைப் புலிகள், சிறீலங்கா அரசிற்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர். இதுபோன்ற சம்பவங்கள் கிழக்கில் ஆங்காங்கே நடந்திருப்பதாகவும்அறியப்படுகின்றது.

காயமடைந்தபோராளி

# வீரமரணம்

18.2.1995 அன்றுயாழ்மாவட்டத்தில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில், காயமடைந்த விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் யாழ் மருத்துவமனையில் வீரச்சாவடைந்தார். லெப்ரினன் சந்திரமாறன் (வேலுப்பிள்ளைகிருஸ்ணகுமார்) எனும் போராளியே வீரச்சாவடைந்தவராவார்.

# படையினர் ஒத்திகை

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளிப்பகுதியில்சிறீலங்காப்படையினர் பகிரங்க ஒத்திகை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். 40 ஆம் கிராமப் பகுதியில் இவ் ஒத்திகை இடம்பெற்றுவருகிறது. இதனால் இப் பகுதி மக்கள் பெரும் பீதி அடைந்துள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## சாணேற...?

நடைபெற்ற நான்காங்கட்டப் பேச்சுவார்த்தையானது, எதுவித முன்னேற்றமுமின்றிமுடிவடைந்துள்ளது.சிறீலங்காஅரசுதனது முன்னைய நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் செய்யாமையே, இப்பேச்சுவார்த்தை அர்த்தமற்று முடிவடைந்தமைக்குக் காரண மாகும். தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல் சிறீலங்கா அரசின் செயற்பாட்டிலேயே தங்கியிருந்தது என்பது முன்னரே தெரிந்தவிடயம். ஆகையால் முன்னேற்றம் இல்லாததில்ஆச்சரியம்எதுவும்இல்லை.ஆனால்முன்னேற்றம் இல்லை என்பது மட்டுமல்ல, முன்வைத்த காலைச் சிறீலங்கா அரசுபின்வைத்துள்ளதுஎன்பதேமுக்கியவிடயமாகும்.

கடந்தமாதம் 24 ஆம் நாள் சனாதிபதி சந்திரிகா எழுதியுள்ள கடிதத்தில் எரிபொருள் தடையுட்பட, பொருண்மியத்தடை முற்றாக நீக்கப்படும் எனவும் தெரிவித்திருந்தார். உறுதியளித்த இவ்விடயங்களை நிறைவேற்றுவதற்கு வசதியாகவே விடுதலைப் புலிகளின் காலஅவகாசம் சித்திரை 19 வரை நீடிக்கப்பட்டது. ஆனால் பேச்சுக்களின்போது, தடைகள் தொடர்ந்து இருக்குமென தெரிவித்த அரசுத் தரப்பினர், மீன்பிடித்தடையையும் முற்றாக அகற்றமுடியாது எனவும் குறிப்பிட்ட பிரதேசங்களில் மீன்பிடிக்க அனுமதி இல்லையெனவும் கூறியதுடன், மீன்பிடிக்கும் தூரங்களில் வேறுபாட்டுடன்கூடிய கட்டுப்பாடுகளை விதிக்கவும் முற்பட்டனர். கிழக்கில் புலிகளின் நடமாட்டம், பூநகரிப் பாதைத் திறத்தல் ஆகிய விடயங்களில் முன்னேற்றம் இல்லாதுபோனதுடன், பொருண்மியத்தடை, மீன்பிடித்தடை ஆகியவற்றில் கொடுக்கப்பட்ட உறுதிகளில் பின்னடிப்பும் இடம்பெற்றுள்ளது. மேலும் தமிழ் மக்களின் அன்றாடப்பிரச்சினைகளுக்குக்கூட, கொடுக்கப்பட்ட காலக் கெடுவிற்குள் எதுவித முன்னேற்றமும் ஏற்படாமல் பேச்சுக்கள் முறிவடையக்கூடியநிலையும்ஏற்படலாம்.

அதாவது நான்காங்கட்டப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றவந்த சிறீலங்கா அரசுத் தரப்பினர், பேச்சுக்களை முன்னோக்கி நடத்தக்கூடிய எதுவித ஆலோசனையையும் கொண்டுவரவில்லை மட்டுமல்ல, இருந்த சூழ்நிலையைப் பேணக்கூடிய நிலையிற்கூட வரவில்லை என்றே கூறலாம். இது தமிழீழ அரசியற்றுறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கூறியதுபோல், பெரும் ஏமாற்றமானதொன்றே ஆகும். ஆனால் சிறீலங்கா அரசு இதனைத் திட்டமிட்டே செய்துள்ளது.. எரிபொருள் உட்படப் பொருண்மியத்தடை நீக்கத்தை அமுல்படுத்த, சிறீலங்கா அரசதரப்புக்கூறிய காரணமே இதனை விளக்குவதாகவுள்ளது. விடுதலைப் புலிகள் வழங்கிய காலக்கெடுவிற்குள் நடைமுறைப்படுத்த விரும்பாத சிறீலங்கா அரசு, தமது அதிகாரிகள் புத்தாண்டு விடுமுறையில் சென்றுவிடுவார்களாகையால் சித்திரை 19 ஆம் நாளுக்கு முன்னர் அமுலாக்கல் சிரமம் என்றே சாட்டுப்போக்குக் கூறியுள்ளது. அதாவது நாட்டின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடிய விடயத்திற்கு அரச அதிகாரிகள் விடுமுறையில் செல்வதினால் அமுலாக்கம் செய்ய முடியாதென்பதேஉண்மையானகாரணம்என்பதைவிட,அரசின் திட்டமிட்ட இழுத்தடிப்பேஇதுஎன்பதுதெளிவு.

இந்த நிலையில் அரசு நான்காங்கட்டப் பேச்சுவார்த்தையைத் தொடங்கியது என்பது, சமாதான முயற்சிகளில் தாம் அக்கறையாக உள்ளோம் என வெளியுலகிற்குக் காட்டவே அன்றி, சமாதானத்தின் மீதுகொண்டுள்ள விருப்பமாக அல்ல என்பதையே நாம் புரிந்துகொள்ள வேண்டும். எனினும் பேச்சுவார்த்தையில் அரசு உண்மையாகப் பாடுபடுகின்றது என்று எண்ணுபவர்களின் மனதில், அரசின் உண்மைநிலையை இந்த நடவடிக்கை வெளிச்சம் போட்டுக்காட்டியிருக்கும் என்பதில்ஐயமில்லை.

# காலாவதியாகிவிட்ட "காலக்கெடு"

## பேச்சுக்களிலிருந்து ஒதுங்குவதாய்ப் புலிகள் அறிவிப்பு

*தலைவர் பிரபாகரன் சந்திரிகாவிற்குக் கடிதம். பேச்சிலிருந்தும், மோதல் தவிர்ப்பில் இருந்தும் விலகுவதாக விடுதலைப் புலிகள் அறிவிப்பு. காலக்கெடுவிற்குள் கோரிக்கை களை நிறைவேற்ற அரசாங்கம் தவறிவிட்டது.*



சமாதானப் பேச்சுக்களில் இருந்தும் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டில் இருந்தும் விடுதலைப் புலிகள் இயக்கம் இன்றிலிருந்து (19.04.95) விலகிக்கொள்வதாக தேசியத் தலைவர் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு நேற்றுக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார். விடுதலைப் புலிகள் முன்வைத்த கோரிக்கைகள்சம்பந்தப்பட்டமட்டில்அரசாங்கத்தின்பதில்கள் மழுப்பல்களாகவும் நழுவல்களாகவும் இருந்த காரணத்தாலும் புலிகளின் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் திட்டமிட்ட முறையில் அரசால் காலம் தாழ்த்தப்பட்டமையுமே விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுக்களில் இருந்தும் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டிலிருந்தும் விலகிக்கொள்வதற்கும் காரணம் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

கடிதத்தின்விபரம்பின்வருமாறு:

தலைமைச்செயலகம்
விடுதலைப்புலிகள்
யாழ்ப்பாணம்.

18ஏப்பிரல்1995
கனம்சந்திரிகாபண்டாரநாயக்காகுமாரதுங்கா
சிறீலங்காஜனாதிபதி
ஜனாதிபதிசெயலகம்
கொழும்பு.

உங்களது12ஏப்பிரல்1995திகதியிடப்பட்ட கடிதம்கிடைத்தது. நன்றி. உங்களது கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை மிகவும் கவனமாகவும் ஆழமாகவும் பரிசீலனை செய்தோம். நாம் எழுப்பிய முக்கிய பிரச்சினைகள் சம்பந்தமாக நீங்கள் தெரிவித்த பதிலுரைகள் எமது எதிர்பார்ப்புக்களை நிறைவுசெய்யத் தவறியமையால், நாம் மிகவும் அதிருப்தி அடைந்துள்ளோம். கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக நிகழ்ந்த கருத்துப் பரிமாற்றம் மூலம் உங்களுக்குஉண்மைநிலையைஎடுத்துரைத்தோம்.

அதன் பலாபலனாக பொருளாதாரத்தடை நீக்கம் என்ற ஆக்கபூர்வமான முடிவை மட்டும் உங்களிடமிருந்து நாம் பெறமுடிந்தது. இந்த முடிவானது 24 மார்ச் 1995 திகதியிடப்பட்ட உங்களது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டபோதும் அதை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் திட்டமிட்ட முறையில் காலம் தாழ்த்தப்பட்டது. நாம் விதித்த காலக்கெடுவை முறியடிக்கும் நோக்கிலேயே இந்தத் திட்டமிட்ட இழுத்தடிப்புநேர்ந்திருக்கின்றது.

நாம் முன்வைத்த மற்றைய பிரச்சினைகள் சம்பந்தப்பட்டமட்டில் உங்களது பதிலுரைகள் மழுப்பல்களாகவும் நழுவல்களாகவும் எதிர்காலப் பேச்சுக்களில் முடிவெடுக்கவேண்டியவையாகவும் அமையப்பெற்றுள்ளன.

மீன்பிடி சம்பந்தப்பட்ட மட்டில் ஒருசில தளர்வுகள் மட்டும் செய்யப்பட்டுள்ளன. ஆயினும் பெரும்பகுதிக் கடற்பரப்பில் மீன்பிடிப்பிற்குதடைகள்தொடர்ந்துஇருக்கவேசெய்கின்றன.

24மார்ச்1995திகதியிடப்பட்ட உங்களது கடிதத்தில்மீன்பிடி மீதான சகல தடைகளும் நீக்கப்படுமென நீங்கள் உறுதியளித்தும்தடைகள்முற்றாகநீக்கப்படவில்லை.

பூநகரி இராணுவ முகாமை அகற்றி, யாழ்ப்பாணத்திற்குப் பாதையைத் திறந்துவிடுதல், கிழக்கு மாகாணத்தில் எமது ஆயுதப் போராளிகள் நடமாட்டம் ஆகிய அதிமுக்கிய பிரச்சினைகள்சம்பந்தப்பட்ட மட்டில்உங்களது முடிவுகள் எமக்கு ஏற்புடையதாக இல்லை. எதிர்காலப் பேச்சுக்களின்போது இவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என சொல்லப்படுவதை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது.

இந்த முக்கிய பிரச்சனைகளை ஓரந்தட்டிவிட முனையும் எத்தனிப்பு ஒன்றை இது தெளிவாகக் காட்டுகின்றது. அதாவது உண்மையான சமாதானத்தையும், இயல்பு நிலையையும் தோற்றுவிக்கும் நோக்கம் எதுவும் உங்களது அரசிடம்இருப்பதாகத் தெரியவில்லை.பதிலாக இராணுவத்தின் நலனைப் பேணுவதிலேயே நீங்கள் அதிக அக்கறைகாட்டுகிறீர்கள்.

அதுமட்டுமன்றி மோதல் தவிர்ப்பு ஒப்பந்த சூழ்நிலையை உங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஆயுதப்படையினரின் பலத்தைக் கட்டியெழுப்புவதில்தான் அரசு கவனம் செலுத்துகிறது என்பதை நாம் ஐயமின்றிக் காணக்கூடியதாக இருக்கின்றது. இருதரப்பினரும் இராணுவ சமாதானத்தைப் பேணவேண்டுமென்ற மோதல் தவிர்ப்பு ஒப்பந்த விதியை இந்த நடவடிக்கை மீறியதாக அமைகிறதுஎன்பதைநாம்சுட்டிக்காட்டவிரும்புகிறோம்.

19 ஏப்பிரல் 1995 என்று நாம் விதித்த காலக்கெடுவிற்குள், அந்தக் கால அவகாசத்தில் மேற்குறிப்பிட்ட எமது கோரிக்கைகள் எதையும் நீங்கள் நிறைவுசெய்யத் தவறியமையால், நாம் ஏற்கனவே தெரிவித்ததுபோல் இத்திகதியில் இருந்து சமாதானப் பேச்சுக்களிலிருந்தும் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டில் இருந்தும் விலகிக்கொள்வது என்ற வேதனைக்குரிய முடிவை எடுத்துள்ளோம்.இந்த முடிவை எடுப்பதைத்தவிர எமக்கு மாற்றுவழி எதையும்நீங்கள் விட்டுவைக்கவில்லை.இந்த துர்அதிஸ்டமான சூழ்நிலை குறித்தும் நாம் மிகவும் வருந்துகிறோம்.

உங்கள்உண்மையுள்ள,
திரு.வேபிரபாகரன்
தலைவர்,தமிழீழவிடுதலைப்புலிகள்.

# சிறீலங்கா அரசின் உள்நோக்கின் வெளிப்பாடு

புலிகள் விதித்த காலக்கெடு 19 ஆம் திகதியுடன் முடிவடைந்தது.சிறீலங்கா அரசு புலிகளின் நல்லெண்ணத்தை நிராகரித்த அதேவேளை, தமிழீழப் பகுதிகளில் ஆக்கிரமித்திருக்கும்சிறீலங்காப்படையினர்,சிறீலங்காஅரசின் பணிப்பின் பேரில் உசார்ப்படுத்தப்பட்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள்கூறுகின்றன.

விடுதலைப்புலிகள் அனுப்பிய பதிற்கடிதம் பெறப்படாத நிலையிலேயே மேற்படி உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.ஒருபுறம்அமைதிக்கான ஆயத்தப்பணியில் ஆர்வமுடையோராகக் காட்டும் சிறீலங்கா அரசு,மறுபுறத்தில் போராயுத்தங்களைமேற்கொள்கிறது.

**அனுருத்தரத்வத்தஇந்தியாவிஜயம்**

படைகள் உசார்ப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை சிறீலங்காவின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த இந்தியாவுக்குத் திடீர் விஜயமொன்றை




மேற்கொண்டுள்ளதாக அறியப்படுகிறது. இவ்விஜயத்தின்போது இராணுவக்கூட்டு, இராணுவஉதவிகள் பெறுவது சம்பந்தமாகவும் பேசப்பட்டதாகக் கொழும்புச் செய்திகள்தெரிவிக்கின்றன.

இதற்கிடையே ஜேர்மனியால் வடக்கு கிழக்குக்கென புனர்வாழ்வுக்காக வழங்கப்பட்ட நிதியுதவிகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலிகள் பிரசுரம்

இனப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கானசமாதானமுயற்சிகளை துரிதப்படுத்துமாறு சிறீலங்கா அரசை நிர்ப்பந்திக்கவேண்டும்என டென்மார்க் தலைநகர் கோப்பன்ஹேகனில் நடைபெற்ற சமூக அபிவிருத்தி தொடர்பான உச்சிமாநாட்டில் கலந்து கொண்ட உலகத் தலைவர்களிடம் விடுதலைப்புலிகள்வேண்டுகோள்விடுத்தனர்.

இலங்கை இனப்பிரச்சினையின் வரலாற்றுப்பின்னணியையும்தற்போதைய நிலவரங்களையும் விளக்கி இந்த உச்சிமாநாட்டிற்குவந்திருந்த பிரதிநிதிகள் மத்தியில் விடுதலைப்புலிகளால் விநியோகிக்கப்பட்ட பிரசுரத்திலேயே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

"சமூக அபிவிருத்தியும் இலங்கை நெருக்கடியும்" என்ற தலைப்பிலான இந்த அறிக்கையில் விடுதலைப்புலிகளின் மத்தியகுழு உறுப்பினர் லோரன்ஸ்திலகர்கைச்சாத்திட்டுள்ளார்.

சுயநிர்ணய உரிமைக்கும் சுயாட்சிக்குமான தமிழரின் கோரிக்கை நீண்ட வரலாற்றுப் பின்னணியைக்கொண்டது.

"அரை நூற்றாண்டுகாலசமூகமாற்றம், அரசியல் அலட்சியம், இனப்பாகுபாடு, அரசியல் ஒடுக்குமுறை, அரச பயங்கரவாதம் ஆகியவற்றின் இறுதி விளைவே இப்போராட்டமாகும். 40 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்களைப் பலிகொண்டுவிட்ட 12 வருடகாலப் போரின்பின் வட-கிழக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் ஒரு சுயாட்சி அமைப்புகளைக் கொண்டிருக்கும் நிலையைத் தமிழர்கள் அடைந்துள்ளார்கள். இத்தகைய தொருயதார்த்த நிலையிலேயே விடுதலைப்புலிகளுடன்பேசச்சிறீலங்காஅரசு நிர்ப்பந்தத்திற்குள்ளானது.

தமிழர்களுக்கெனத் தனிநாடு நிறுவுவது புலிகளின் இலட்சியமாக இருக்கின்ற போதிலும், ஜனாதிபதி சந்திரிகா முன்னெடுத்த சமாதான முயற்சிகளுக்கு சாதகமான முறையில் விடுதலைப் புலிகள் நடந்துகொண்டனர். சமாதான முயற்சிகளைத் துரிதப்படுத்துமாறுசிறீலங்காஅரசைச் சர்வதேசச்சமூகம் நிர்ப்பந்திக்க வேண்டும்" என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்கக் கட்டுப்பாடுகளை ஏற்க இந்தியா மறுப்பு!

"அமைதிப் பணிக்கு அணுசக்தியைத் தொடர்ந்து பயன்படுத்துவோம், அமெரிக்காஇதுவிடயத்தில்விதிக்கும் கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது" இவ்வாறு இந்திய அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய அரசின் வெளிநாட்டு இலாகா அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், "அணுக்குண்டு தயாரிக்கப் பயன்படும் முக்கிய அணுக்கதிர்களை இந்தியா இன்னமும் தயாரிக்கவில்லை, அப்படியிருக்கும் போது அமெரிக்கா விதிக்கும் கட்டுப்பாடுகளை ஒருபோதும்ஏற்கமுடியாது.

அணுக்குண்டுகளைத் தயாரிக்கப் பயன்படும் அணுக்கதிர்களை சில நாடுகள் தொடர்ந்து உற்பத்தி செய்து வருகின்றன. முதலில் அவற்றுக்குக்கட்டுப்பாடு விதிக்க வேண்டும். இந்தக்கட்டுப்பாடு சர்வதேச அளவில்தான் இருக்க வேண்டும். சில நாடுகள் மட்டும் அணுக்குண்டுகளைத் தயாரிக்க மாட்டோம் என்று தாம் ஒப்பந்தம் செய்வதில் எந்தப் பலனும் இல்லை" எனவுங்குறிப்பிட்டார்.

# விடுதியிலுள்ளோர் விபரம் சேகரிப்பு

கொழும்பு நகரில் தமிழர்கள் தங்கி இருக்கும் விடுதிகள், வீடுகள், கடைகள் ஆகியவற்றில் சிறீலங்கா படையினரின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் அடிக்கடி சென்று, தங்கி நிற்பவர்கள் தொடர்பான முழுத் தகவல்களையும் அந்தந்த உரிமையாளர்களிடம் இருந்து இரகசியமாகப் பெற்றுவருகின்றனர்என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்தோடு சிறீலங்கா பொலிசாரும் தமிழர்கள் தங்கி நிற்கும் இடங்களில் வாரத்தில் ஒரு தடவையாயினும் சோதனையை நடாத்தி வருகின்றனர். இந்த நிலையில் கொழும்பில் வீடுகளில் உள்ள தமிழர்கள், தமது நெருங்கிய உறவினர்களைக் கூட தம்முடன் வீடுகளில் தங்கவைக்கப் பின்நிற்கின்றனர். ஏனெனில் சிறீலங்கா புலனாய்வுப்பிரிவினரின்இரகசியதகவல் திரட்டும் முறையினால் அங்குள்ள தமிழர்கள் அச்சமடைந்துள்ளனர். விடுதிகளிற்கு வரும் சிறீலங்கா புலனாய்வுப் பிரிவினர், தமது அடையாள அட்டை மூலம் தம்மை அடையாளப்படுத்திவிட்டுத் தகவல்களைத் திரட்டிச் செல்கின்றனர் என அத்தகவல்மேலும்தெரிவிக்கின்றது.

கொழும்பில்,

## வெளிநாடுகட்குச் செல்லவிருப்போரைச் செய்தித்தாளர்கள் விடுதிகளில் பேட்டி

வெளிநாடுகளிற்கு அகதிகளாகச் செல்வதற்காகக்கொழும்புவிடுதிகளில் தங்கியிருக்குந்தமிழர்களை ஐரோப்பிய நாடுகளிலிருந்து கொழும்பிற்கு வரும் செய்தித்தாளர்களும் ஒளிபரப்பு நிறுவனங்களைச் சேர்ந்த ஒளிப்பதிவாளர்களும் செவ்விகண்டு வருகின்றனர். அத்துடன், தமிழர்களின் கொழும்பு இருப்பிட வசதிகளையும் ஒளிப்பதிவுசெய்து, தமது நாடுகளிற்கு இவர்கள் பொருண்மிய மேம்பாட்டிற்காகவே வருவதாகக் காட்டுவதற்கு இந்த வெளிநாட்டவர், இவ்வாறு நடவடிக்கை எடுத்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. நோர்வே,சுவிசு நாட்டுச் செய்தியாளர்களே இந்நடவடிக்கைகளிலீடுபடுவதாய்ச்செய்திகள்தெரிவிக்கின்றன.

# சிறந்த தந்திரோபாயங்களைக் கைக்கொள்ளும் கட்டுக்கோப்பான விடுதலை இயக்கம்

சிறந்த தந்திரோபாயங்களைக் கொள்ளும் கட்டுக்கோப்பான விடுதலை இயக்கம் புலிகள்இயக்கமென புலிகள் குறித்து அவுஸ்திரேலிய செய்தித்தாளர் அபிப்பிராயம்தெரிவித்துள்ளார்.

உலகில் உள்ள பல்வேறு விடுதலைப் போராட்ட அமைப்புகளுடன் ஒப்பிடும் பொழுது தமிழீழ விடுதலைப்புலிகள் தலைசிறந்த தந்திரோபாயங்களைக் கையாளுகின்ற கட்டுக்கோப்பான விடுதலைஇயக்கமாகத்திகழ்கின்றது.

இவ்வாறு அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த செய்தியாளர் திரு. நோமன் அஸ்பெற்தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் போராட்ட அணுகுமுறைகளும், தந்திரோபாயங்களும் அவர்களைத் திறமையுள்ள போராட்ட இயக்கமாக வெளி உலகுக்குக் காட்டிக் கொண்டிருக்கிறது.இதனால்தான்இன்றுஉலகமே விடுதலைப்புலிகளின் பக்கம் தனது பார்வையைச் செலுத்திக்கொண்டிருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

ஆசிய நாடுகளுக்குப் பொறுப்பாகக் கடமையாற்றும் மேற்படி செய்தியாளர், யாழ் குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் சென்றுபலரையும்சந்தித்தார்.

விடுதலைப்புலிகளின் செயற்பாடு குறித்தசெய்திகளுக்குத்தமதுநாட்டில் பெரும் வரவேற்பு இருப்பதாகவும் அவர்மேலும்தெரிவித்தார்.

# ஆசிரியைக்கு கோபம் மாணவனுக்கு காயம்

வாங்கை மாணவன் விழுத்தியதால் ஆத்திரமடைந்த ஆசிரியை ஒருவர், கதிரைச் சட்டத்தினால் மாணவனின் தலையில் தாக்கியதால், மாணவன் படுகாயத்துக்குள்ளானார்.

யாழ். நகரப்பகுதிப் பாடசாலையொன்றில் இடம்பெற்ற இச்சம்பவத்தின்போது, எட்டாம் ஆண்டு மாணவனான பிரிட்டோ டக்ளஸ் (வயது 12) என்பவரே ஆசிரியையின் தாக்குதலுக்குள்ளானதில் தலையில் படுகாயத்துக்குள்ளானவராவார்.

இதேவேளைவிளையாட்டுப் போட்டிக்கு மாணவர்களைத் தயார்படுத்திக்கொண்டிருந்த விளையாட்டுப் பயிற்றுனர் மாணவனைத் தாக்கியதில், மாணவன் உடல் பாதிப்புக்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

சுண்ணாகம் பகுதியில் நடைபெற்ற இச்சம்பவத்தின்போது, லோகலிங்கம் வில்வராஜ் (வயது 10) என்ற மாணவனே தாக்குதலுக்குள்ளானவராவர்.

இச்சம்பவம்பற்றித்தெரியவருகையில், வீதியால் சென்றுகொண்டிருந்த தயாரைக்கண்ட மாணவன் தாயிடம் ஓடிச்சென்றதாகவும் பின்னர் விளையாட்டுப்பயிற்றுனர்அம்மாணவனைக் கூட்டிச்சென்று தரையில் போட்டுத்தாக்கியதாகவும்மாணவனின் கூக்குரல் கேட்டு, வீதியால் சென்றவர்கள் ஓடிச்சென்று தாக்குதலிலிருந்து மாணவனை விடுவித்ததாகவும்தெரியவந்துள்ளது.

# சங்கிலி திருடியவர் காவல் துறையால் கைது

வாடகைக்குக் குடியிருந்த வீட்டிலேயேசங்கிலியைத் திருடியவர், காவல் துறையினரால்கைதுசெய்யப்பட்டார்.

திருநெல்வேலிப் பகுதியில் உள்ள தம்பிஐயா கனகம்மா என்பவருடைய வீட்டிலிருந்து மார்ச்மாதம் 6 ஆம் நாள் நாலரைப்பவுணிலான சங்கிலியொன்று திருட்டுப்போனதாகவும், இதையடுத்து கொடுக்கப்பட்ட முறைப்பாட்டின்படி ஐயத்தின்பேரில் அவ்வீட்டில் வாடகைக்குக் குடியிருந்த நபரை அழைத்து விசாரித்தபோது, அவரே சங்கிலியைத் திருடியிருந்தமை தெரியவந்துள்ளதாகவும், தற்போது இவரிடமிருந்து சங்கிலி மீட்கப்பட்டுள்ளதாகவும் யாழ். காவல் பணிமனையினர்தெரிவித்துள்ளனர்.

## தொழிலாளர் உரிமை சிறக்க நாட்டில் அமைதி வேண்டும்

சர்வதேசத் தொழிற்சங்கப் பிரமுகர் அனிவென்வெசல்

உலகின் முக்கிய தொழிலாளர் அமைப்புக்களில் ஒன்றான நெதர்லாந்து தொழிற்சங்க கூட்டுச் சம்மேளனத்தின் அனைத்துலக விவகார ஆலோசகர்திருமதி அனிவென்வெசல் "நாட்டில் அமைதியும் உறுதிப்பாடும் இருந்தால் மட்டுமே தொழிலாளர் உரிமை குறித்துக் கூடுதல் அக்கறை செலுத்த முடியும். அமைதியின்மை, போர் சூழ்நிலைகள் நிலவும் நாட்டில் தொழிலாளர் உரிமைகளைச் சிறந்த முறையில் பேணிப் பாதுகாக்க முடியாது. எனவே தொழிலாளர் உரிமை சிறக்க நாட்டில் அமைதி வேண்டும்" என கொழும்பு 'கொலிடே இன்' னில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் வலியுறுத்திக் கூறியுள்ளார்.


அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க

மீண்டும்

பாரிஸ் வெண்திரையில்...

தமிழீழத்தில்,தமிழீழக் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட
அற்புதமான இரு உணர்ச்சிக் காவியங்கள்.

விடுதலைப் புலிகளின் அசைக்கமுடியாத வெற்றிகளுக்குப் பின்னால்
இழையோடி நிற்கின்ற வீரம், விவேகம், அற்புதமான தியாக உணர்வு
இவற்றைத் தாங்கியும்...
மேஜர் கிண்ணியின் வீரவரலாற்றை மையக்கருவாய்கொண்டு
தயாரிக்கப்பட்ட...

இன்னும் ஒரு நாடு

உறவுகளின் அன்புப் பிணைப்பில் உருகிக் கிடந்தவன் –
கடற்காற்றில் கலந்த கரும்புலியானான்... எப்படி?
விடை சொல்லும் உன்னதமான உணர்ச்சிக் காவியம்

உயிர்ப்பூ

காலம்: 29-4-1995
நேரம்: மாலை 7.30
தொடர்புகட்கு: 43-58-11-42

இது விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தினதும் நிதர்சனத்தினதும்
கூட்டுத் தயாரிப்பு.

www.tamilarangam.net



# காலக்கெடுவிற்குள் தீர்வின்றேல் பேச்சிலிருந்து ஒதுங்க முடிவு

## அரசியற்றுறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்

### சந்திரிகாவின் கடிதத்திற்கு விடுதலைப்புலிகளின் விளக்கம்

சிறீலங்கா அரசின் சனாதிபதி சந்திரிகா, 12.04.95 இல் அனுப்பிய பதில் கடிதத்திற்கு செய்தியாளர் மத்தியில் விளக்கமளித்த தமிழீழ அரசியற்றுறைப் பொறுப்பாளர் தமிழ்செல்வன், "இது விடயத்தில் அவர்கள் தமது பழைய நிலைப்பாட்டிலேயே இன்றும் உள்ளனர். அதாவது ஒரு முகாம் முற்றாக அகற்றப்பட்டு எமது மக்களுக்கான ஒரு போக்குவரத்துப் பாதை அவசியமாகத் திறக்கப்பட வேண்டும் என்பதை நாம் தெளிவுபடுத்தி இதுபற்றி எமது இறுதியான, உறுதியான முடிவை அவர்களுக்குக் கூறினோம். வடக்கு–கிழக்கில் 200க்கு மேற்பட்ட முகாம்கள் உள்ளன.இவற்றில்ஒருமுகாமைமுடி எமதுமக்களின்போக்குவரத்தை அரசு அனுமதிக்க முடியாது என்பது எமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. முன்னைய அரசின் பூநகரி முகாம் அமைப்பு எமது மக்களைச் சிறைப்படுத்தியது. இத்தகைய நிலையினையே இன்றைய அரசும் மேற்கொள்ள முனைகின்றது. மக்கள் சிறைப்பட்ட நிலையில் நாம் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பது, சாத்தியமற்றதாகவே உள்ளது என்பதைமிகவும்தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம்"என்றார்.

இராணுவப் பொருட்கள் தவிர மீதியான பொருட்கள் மீதுள்ள தடையை நீக்க அரசு உறுதியளித்தபோதும், அவற்றை குறித்த காலக்கெடுவிற்குள் அமுல்படுத்த அவர்கள் தயக்கம் காட்டினர்.பொருண்மியத்தடைபற்றிய அரசநிலைப்பாடுபற்றிக்கேட்டகேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த திரு. தமிழ்ச்செல்வன், "இராணுவப் பொருட்களைத் தவிர மீதிப் பொருட்களுக்கு உள்ள தடையை நீக்குவதாக அவர்கள்உறுதியளித்தார்கள்.ஆனால் 'யூரியா' போன்ற விவசாயப் பொருட்கள் மீதுள்ள தடையை நீக்க மறுத்து விட்டனர்.இத்தடையால்எமதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அவர்களுக்கு நாம் தெளிவுபடுத்தினோம். தடைநீக்கப்பட்ட பொருட்களை புத்தாண்டுக்கு முன் இங்கு அனுப்புமாறும் கேட்டுக் கொண்டோம். அதற்குக் கூட அவர்கள் தயக்கம் காட்டினர். அன்றைய தினம் அதிகாரிகள் விடுமுறையில் செல்வதால் அமுல்படுத்த முடியாது என்று காட்ட முயன்றனர். இது பொருண்மியத்தடை நீக்கப்படுவதாகக் கூறிக்கொண்டு, எல்லோரையும் ஏமாற்றிக் காலம் கடத்தும் அவர்களின் திட்டத்தையே தெளிவுபடுத்தும்" என்றார். "கிழக்கில் போராளிகள்ஆயுதங்களுடன்நடமாடக் கூடாது என அரசு உறுதியாகக் கூறியுள்ளது.இவ்விடயத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. கிழக்கில் எமது போராளிகள் ஆயுதமின்றி நடமாடுவது அவர்களின் உயிருக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்பதை நாங்கள் நன்கு தெளிவுபடுத்தினோம்" எனவும்கூறினார்.

"மீன்பிடித்தடையை நீக்கும் விடயத்தில்கூட, எம்மால் ஒரு முடிவை



எட்டமுடியவில்லை. பெரும்பாலான இராணுவ முகாம்கள் கரையோரப் பிரதேசத்தில் அமைந்துள்ளன. இந்த முகாம்களைச் சுற்றி 2 கடல் மைல்கள் பிரதேசத்திற்குள்மீன்பிடிக்க மீனவர்கள் செல்லக்கூடாது எனவும், விடத்தல் தீவில் இருந்து கேரதீவு வரையாக உள்ள கடல்பிரதேசத்தில் 5 கடல்மைல்களுக்கு அப்பால் சென்று மீன் பிடிக்கக்கூடாது எனவும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. இவ்வகையான கட்டுப்பாடு எமது மீனவர்களுக்கு ஏற்புடையதல்ல என்றும்சுட்டிக்காட்டினோம்"என்றார்.

"சிறீலங்கா அரசின் அடக்குமுறையினாலும், பொருண்மியத் தடையினாலும் போக்குவரத்துத் தடையினாலும் மக்கள் படும் இன்னல்களை நேரில் கண்டுகொண்ட ஆன்மீகத் தலைவரான ஆயர் கென்னத் பெர்னாண்டோ, நான்காம் கட்டப்பேச்சு வார்த்தையின் போது அரசின் நடவடிக்கைகளை நியாயப்படுத்திய செயல் எமக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ளது" எனவும் தமிழ்ச்செல்வன் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். மேலும் இவர், "கடந்த காலத்தில் பலமுறை தென்பகுதியில் இருந்து கிளாலிப் பாதையூடாக வடபகுதிக்கு வந்து, சிறீலங்கா அரசின் அடக்குமுறை, பொருண்மியத்தடை, போக்குவரத்துத் தடை ஆகியவையினால் மக்கள் படும் துன்பங்களை நேரில் கண்டு கொண்டவர். ஆன்மீகக் கண்ணோட்டத்துடன் செயற்பட வேண்டிய இவர், இப்பேச்சு வார்த்தையில் சிறீலங்கா அரசின் நடவடிக்கைகளை நியாயப்படுத்திப் பேசியது எமக்கு பெரும்அதிர்ச்சியைத் தந்தது. ஆயருடன் கூட வந்த பேராசிரியர்கள்ஜெயதேவ உயாங்கொட, அபயசேகர ஆகியோரும் கடந்த காலத்தில் வடபகுதிக்கு விஜயம் செய்தவேளை, சிறீலங்காவின் அத்தடைகளால் மக்கள் படும் துன்பங்களை நேரில் கண்டவர்கள். ஆனால்இப்பேச்சின்போது இவர்களும் சிறீலங்கா அரசின் நடவடிக்கைகளை நியாயப்படுத்தி உள்ளனர்" எனவும் விளக்கினார்.

"எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்க, தேசியத் தலைவரினால் விதிக்கப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள்(19.04.95க்குமுன்) அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து நடைமுறைப்படுத்துமானால்தான் நாம் அரசியல் பேச்சுக்களில் ஈடுபட முடியுமாக இருக்கும். மேற்படி தினத்திற்குள் அரசு பிரச்சினைகளைத் தீர்க்காதுவிடின், நாம் அரசின்மீது நம்பிக்கையற்ற ஓர் நிலையில் அரசுடனான பேச்சுவார்த்தையில் இருந்து ஒதுங்கிக் கொள்வதாக அரசு தரப்பினருக்கு எடுத்துக் கூறியுள்ளோம்" என்றும்திரு.தமிழ்ச்செல்வன் கூறியுள்ளார்.

**வடக்கு-கிழக்கில் 200க்கு மேற்பட்ட முகாம்கள் உள்ளன. இவற்றில் ஒரு முகாமை முடி எமது மக்களின் போக்குவரத்தை அரசு அனுமதிக்க முடியாது என்பது எமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. முன்னைய அரசின் பூநகரி முகாம் அமைப்புஎமதுமக்களைச் சிறைப்படுத்தியது.இத்தகைய நிலையினையே இன்றையஅரசும்மேற்கொள்ளமுனைகின்றது.மக்கள்சிறைப்பட்டநிலையில்நாம் பேச்சுவார்த்தை முன்னெடுப்பது,சாத்தியமற்றதாகவே உள்ளது என்பதை மிகவும் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம்.**

அரசதரப்புப்பிரதிநிதிகளின் இறுதி முடிவு எதுவாக இருந்தது என்று கேட்டதற்கு, "நாம் எமது நான்கு கோரிக்கைகளையும் உடன் அமுல் படுத்துமாறு அவர்களுக்கு உறுதியாக எடுத்துக்கூறி, அவற்றில் உள்ள பிரச்சினைகளையும் எடுத்துக் காட்டினோம். அவர்கள் நேற்றைய தினமே (10.04.95) கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்று சனாதிபதியுடன் இது குறித்து ஆராய்ந்து இன்று காலை (11.04.95) 10 மணிக்கு எமக்குத் தெரிவிப்பதாக உறுதியளித்துச் சென்றுள்ளனர். கடந்த ஆறுமாத காலமாக அரசு இழுத்தடிப்புச் செய்துவருகின்றது. இந்த இழுத்தடிப்பின் நம்பிக்கையீனமே எம்மை இந்தக் காலக் கெடுவிற்குள் உள்ளாக்கியது. இந்த நான்கு பிரச்சினைகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவையாக இருப்பதால், இவற்றைத் தனித்தனியே பிரித்துப் பார்க்கக் கூடியதாக இல்லை. ஆனபடியால் இவை முழுமையாகத் தீர்க்கப்பட வேண்டியவையே. இதனைக் கருத்தில் கொண்டே 19.04.95க்கு முன் அரசு செயற்பட வேண்டும் எனவும் அம்மாநாட்டில் மேலுங்கூறினார்.

# திருட்டுக் கும்பல் பிடிபட்டது

## —காவற்றுறை நடவடிக்கை

பருத்தித்துறைக் காவல் துறைப்பிரதேசத்தில் பயங்கர கொள்ளைகள். துவிச்சக்கர வண்டித் திருட்டுக்கள், வீடுடைத்துத் திருட்டுக்கள், ஆலயத்திருட்டுக்கள், மோட்டார்ச்சைக்கிள் திருட்டுக்கள், நீர் இறைக்கும் இயந்திரத்திருட்டுக்கள் ஆகியவற்றில் ஈடுபட்டுத் தலைமறைவாகியிருந்த கொள்ளைக் கூட்டமொன்றை பருத்தித்துறைக் காவற்றுறையினர் கிளிநொச்சியில் மடக்கிப் பிடித்து, அக்கொள்ளையர் கூட்டத்திடமிருந்து தங்க நகைகள், துவிச்சக்கர வண்டிகள், மோட்டர் சைக்கிள்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள் உட்பட வீட்டுப்பாவனைப் பொருட்களைக் கைப்பற்றியுள்ளனர்.

இச் சம்பவத்தின் போது 35 கொள்ளைகள், திருட்டுக்களின் பொருட்கள்மீட்கப்பட்டுள்ளன. எட்டுப் பேரடங்கிய கொள்ளைக் கூட்டமே இவ்வாறான கொள்ளைகள், திருட்டுக்களில்ஈடுபட்டுத் தலைமறைவாகிகிளிநொச்சியில்மறைந்திருந்தது.

பருத்தித்துறைப் பிரதேசத்தில் நடைபெற்று வந்த இக்கொள்ளைகள் திருட்டுக்கள் பற்றிப் புலன் விசாரணைகளில் ஈடுபட்ட பருத்தித்துறை காவல் துறையினருக்குக் கிடைத்த இரகசியத்தகவல்களையடுத்துகிளிநொச்சிக்கு விரைந்த பருத்தித்துறைக்காவல் துறையினரைக் கொண்டகுழு, இக்கொள்ளையர்களைகிளிநொச்சியில் மடக்கிப் பிடித்துக் கொண்டது. 10.7.94இல் வல்லிபுர ஆழ்வார் ஆலயதரிசனத்திற்கு அதிகாலை சென்ற பக்தர்கள்பலர், துன்னாலை மிலுள்ள பனங்காட்டுப் பகுதியில் வைத்து பயங்கர ஆயுதங்கள் சகிதம் முகமூடியணிந்த கொள்ளைக் கூட்டத்தினரால்தாக்கப்பட்டுத்தங்கநகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான சகல தங்கநகைகள், பல வீடுகள் உடைக்கப்பட்டுத் திருடப்பட்ட பொருட்கள், 20 துவிச்சக்கர வண்டிகள், 3 நீர் இறைக்கும் இயந்திரங்கள், மோட்டார் வண்டிகள், ஆலய உண்டியல்கள், சுவர் மணிக்கூடுகள் என்பன காவல்துறையினரின் முயற்சியால்மீட்கப்பட்டுள்ளன. இக்கொள்ளைக் கூட்டத்தினர் துன்னாலை, வரணி, கிளிநொச்சிப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று காவல் துறையினரின் விசாரணைகளில்தெரியவந்துள்ளது.

இக்கொள்ளைக்கூட்டத்தினரின்விசாரணைகளிலிருந்து மேலும் பல கொள்ளைச்சம்பவங்கள்வெளிவரலாம் என்றும்எதிர்பார்க்கப்படுகிறது.


# கவின் கலைக்கல்லூரிக் கலை வெளிப்பாட்டு விழா

கிளிநொச்சி கவின்கலைக் கல்லூரியின் ஐந்தாம்ஆண்டுநிறைவை முன்னிட்டு 'கலைவெளிப்பாட்டு விழா' அண்மையில் இடம் பெற்றது. வன்னி மாவட்டத் தளபதி ஈஸ்வரன் தேசியக்கொடியை ஏற்றி வைக்க மங்கல விளக்கைப் போராளிகள் நலன்காப்பகப் பொறுப்பாளர் ராஜன் ஏற்றிவைக்கக் கவின்கலைக்கல்லூரியின் புதிய கட்டடத்தை வன்னி மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் நிருபன் திறந்து வைத்தார். தமிழீழ கலைபண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர், வன்னி மாவட்ட கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் உட்படப் பலர்கலந்துகொண்டு நிகழ்ச்சிகளைச் சிறப்பித்தனர். இங்கு கலை நிகழ்ச்சிகளும்இடம்பெற்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# பூநகரித் தளம் அகற்றப்பட வேண்டும்

வட தமிழீழ மக்களுக்கான போக்குவரத்துப்பாதை மட்டுமல்ல அரசு–புலிகள் பேச்சு வார்த்தைப் பயணமும்பூநகரி இராணுவ முகாமால் தடைப்பட்டிருக்கின்றது.

பூநகரி முகாமை முழுமையாகவே அகற்றினாற்றான், மேற்குறித்த இரு விடயங்களும் தங்குதடையின்றி நடைபெறும் என்பதே இன்றைய யதார்த்தமாகும்.

பூநகரி முகாம் அகற்றப்பட்டே தீரவேண்டும்என்பதில்புலிகள்இயக்கம் விடாப்பிடியாகவும்–உறுதியாகவும் இருப்பதற்கு, தமிழீழத் தேசியத்தின் நோக்கு நிலையிலிருந்து, வலுவான காரணிகள் இருக்கின்றன.அதே போல, அகற்றப்படக்கூடாது என்பதிற்சிங்கள இராணுவத்தலைமை உறுதியாக நிற்பதற்கும்சிலகாரணிகள்உண்டு.

வடதமிழீழம்மீதான இராணுவ வெற்றி பற்றிய கனவுக்கு, அல்லது இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால், குடாநாட்டை ஏப்பம் விடத் துடிக்கும் சிங்கள இராணுவவாதிகளின் பேராசைக்குப்பூநகரிமுகாம்இன்றியமையாதது. தமிழ் மக்களை இராணுவபலம் கொண்டு அடக்கியாளும் பேரினவாத சித்தாந்தமே இது என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல. இந்தப் பேரினவாத நிலைப்பாட்டைப், பேச்சு வார்த்தை நடைபெறும் இந்தச் சூழலிலாவது விட்டுக்கொடுக்கச் சந்திரிகா அரசு தயாராக இல்லாமல் இருப்பதுதான்தமிழினத்திற்குஏமாற்றத்தைஅளித்துள்ளது.

எழுந்தமான அரசியற் பார்வையுடன் பூநகரிப் பாதை விடயத்தை அலசிப்பார்க்க முனையும் ஒருவருக்கு, சந்திரிகா அரசின் நிலைப்பாடு நியாயமாகத் தென்படலாம். பாதையிலிருந்து 600 மீற்றர் தூரத்திற்கு இராணுவம் தள்ளி நிற்பதுடன், பிரயாணிகளைச் சோதனையிடவும் மாட்டாது என்ற அரசின் நிலைப்பாடு, ஒரு நடுநிலையான அல்லது நேர்மையான விட்டுக்கொடுப்பாகத் தென்படலாம். ஆனால் பாதை விடயத்தை இராணுவ பரிமாணத்தில் வைத்துப்பார்க்கும்பொழுது, சிங்கள அரசின் நோக்கத்தையும்– அது தமிழினத்திற்குஎத்தகையஆபத்தைக் கொடுக்கும் என்பதையும் காண முடியும். ஈழத்தமிழினத்தின் பாதுகாப்பையும் அதன் அரசியல் எதிர்காலத்தையும் கருத்திற் கொள்ளும் எவரும், ஒரு போரியற் பார்வை இல்லாமல் அவற்றை எடைபோடமுடியாது. எடை போடவும் கூடாது. இந்த அளவுகோல் இன்றைக்கு மட்டுமல்ல, தமிழினத்திற்கு என்றைக்குமே தேவையானது.


இரண்டாம் ஈழப்போரில் வடக்கு–கிழக்கு என்று இருவேறு நிலப்பரப்பில்– சிங்களப்படைத் தலைமை இருவேறு போர்முறைத் திட்டங்களை அமுற்படுத்திப் போராட்டத்தை நசுக்க முயன்றது. கிழக்கை முற்றாக இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து, படுகொலைகள்–பாலியல் வன்முறைகள்–பொருண்மிய நாசங்கள் மூலம், இனப்படுகொலை செய்து கிழக்கைச் சிங்கள மயப்படுத்துவது ஒரு போர்முறைத்திட்டம். அடுத்தது, முற்றுகைப் போர் ஒன்றின் மூலம் வடதமிழீழத்தை ஆக்கிரமிப்பது. இதில் குடாநாடு மீதான இராணுவ, பொருண்மிய முற்றுகை முக்கிய இடத்தை வகிக்கிறது. குடாநாட்டிற்கான சகல தரைப்பாதைகளையும் மூடி இராணுவ முற்றுகைக்குள் அதை வைத்துப் பின்னர் ஆக்கிரமித்து வெற்றி கொள்வதுதான்அத்திட்டம்.

**கடலோடு ஆறு சங்கமிக்கும் கழிமுகப்பகுதியில்ஒருதடுப்புச் சுவரைக் கட்டிவிட்டு, ஆற்றைக் கலக்கி அங்குள்ள மீன்கள் எல்லாவற்றையும் கோலி அள்ளும்ஒருநாசகாரத்திட்டம் அது.அந்த வகையில், வன்னிப் பெரும் நிலப்பரப்புடன் குடாநாட்டை இணைத்து வைத்திருக்கும்வாசல்களை(கொம்படி, பூநகரி) இழுத்து மூடிவிட்டுக் குடாநாட்டைக் கலக்கிப் புலி பிடிப்பதுதான் வடதமிழீழம் மீதான போர்முறைத் திட்டத்தின் மைய இலக்கு. எனினும், சிங்களப்படை நடாத்திய குடாநாடு மீதான முற்றுகைப் போரை புலிப்படைமுறியடித்துவிட்டது. ஆயினும், தமது முன்னைய முற்றுகைப் போர்முறைத் திட்டத்தைச் சிங்களப்படைத் தலைமை இன்னமும் கைவிடவில்லை:**

**அதை மீண்டும் முயற்சித்துப் பார்ப்பதற்கான தருணத்தை அது எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. அதற்காகத்தான் பூநகரி முகாமைக் கைவிடப் படைத்தலைமை விரும்பவில்லை. எனவேதான் வருமுன் காக்கும்நோக்கத்துடன்,பூநகரி முகாமை அகற்றிவிடுவதில் புலிகள் இயக்கம் உறுதியாக இருக்கிறது.**

பாதையிலிருந்து 600 மீற்றர் உள்ளே இராணுவம்தள்ளிநிற்பதால்பிரயாணம் தங்கு தடையின்றி நடைபெறும், என மக்கள்எண்ணக்கூடும்.ஆனால்ஏதோ ஒரு காரணத்தைக் கூறிக் கொண்டு அரசு மீண்டும் போரைத் தொடங்கும்போது, 600 மீற்றர் முன்னே வந்து மீண்டும் பாதையைப் பிடிக்க, இராணுவத்திற்கு 6 வினாடிகளே போதுமானது. அப்படி ஒரு நிலைவந்தால், 'பழைய குருடி கதவைத் திறவடி' என்பதுபோல, மீண்டும் எமது மக்கள் ஒல்லித் தேங்காய்களுடனும், வெற்றுக் 'கான்களுடனும் கிளாலிக் கடலூடாகத்தான் மாரடிக்கவேண்டிவரும்! இது எமக்குத் தேவையா? ஆகவே, குடாநாட்டு மக்களுக்கு ஒரு நிரந்தரப் பாதை கிடைக்கவேண் டுமாயின், அதற்குப் பூநகரி இராணுவ முகாம் அகற்றப்பட்டேதீரவேண்டும்.

**"யாராவது ஒரு பகுதி விட்டுக்கொடுத்தாற்றானே சமாதானப் பேச்சு முன்னோக்கிச் செல்ல முடியும்? நீங்கள் (புலிகள்) கொஞ்சம் விட்டுக்கொடுத்தால் என்ன?" என்று கேட்க விரும்புபவர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகின்றோம். விட்டுக்கொடுப்பு என்பது சமரச முயற்சிக்குக் கட்டாயம் தேவை என்பதில்கருத்துவேறுபாட்டிற்கு இடமில்லை. ஆனால், எதில் விட்டுக்கொடுப்பைச் செய்வது என்பதில் அவதானமாக இருக்க வேண்டும். தமிழினத்தின் பாதுகாப்புச்சம்பந்தப்பட்ட விடயத்தில் எந்த விட்டுக்கொடுப்பையும் செய்ய முடியாது. அது எமது கழுத்தை நாமே திருகுவதற்கு ஒப்பாகும்.**




பூநகரிப் பாதை வடதமிழீழ மக்களின் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டது – அவர்களின் அன்றாட வாழ்வுடன் சம்பந்தப்பட்டது. உனது தொண்டையில் எதிரிவைத்த கையை 'இருந்துவிட்டுப் போகட்டுமன்' என்று விட்டு வைத்தால் உன் உயிருக்குத்தான்ஆபத்தாகமுடியும்!

'அப்படியாயின், யூ. என். எச். சி. ஆர். உடனான சம்பாசணையின்போது பூநகரி முகாம் அகற்றப்படாமலேயே பாதையைத் திறக்கப் புலிகள் இயக்கம் உடன்பட்டிருந்ததே, அது ஏன்?' என்ற கேள்வியும் இந்த இடத்தில் எழுவது நியாயமே.




அப்படிக் கேட்டும் அப்போதைய அரசு அதை ஏற்றுக் கொள்ளவில்லை. என்பதை, எமது மக்கள் கவனத்தில் எடுக்க வேண்டும். அதேவேளை, அப்போதைய புறச்சூழலையும் சமாதானப்பேச்சுக்கு அரசு உடன்பட்ட இப்போதைய புறச்சூழலையும் கருத்தில் எடுத்தால், இக்கேள்விக்கு விடைதேடுவதுஎளிதாகஇருக்கும்.

குடாநாட்டைச் சூழ ஒரு இராணுவ, பொருண்மிய–உணவு–மருத்துவ முற்றுகையை இட்டுவிட்டு, வான் வழியே வந்து அழிவுகளைத் தூவிக்கொண்டு இருந்த காலம்அது. இன்றிருப்பவர் நாளை இருப்பாரா என்று உறுதி கூறமுடியாத காலம் அது. நாகதேவன்துறையில் நிலை கொண்டிருந்த கடற்படைப் பூதம், எஞ்சியிருந்த ஒரேயொரு பாதையால் பயணம்சென்றுகொண்டிருந்தபடகுப் பயணிகளை விழுங்கி ஏப்பம் விட்டுக்கொண்டிருந்த சோக காலம் அது. உணவும் இன்றி... எதுவும்இன்றி... குடாநாட்டு மக்கள் ஏங்கிய அந்த வேளையில், இராணுவம் இருக்கக்கூடியதாகவே பூநகரிப் பாதைத்திறப்பைப் புலிகள் சாதகமாகப் பரிசீலனை செய்தார்கள் என்பதும் உண்மையே. மக்களின் அவலம் கருதி–அவர்களின் அவசிய தேவை கருதி–புலிகள்இயக்கம்எடுத்தமுடிவு அது. தமிழ்மக்கள் அனுபவித்த அந்த அவலநிலையிலும்கூட அரசு பாதை திறப்புக்கு இணங்கவில்லை. ஏனென்றால், குடாநாட்டை இராணுவம் கைப்பற்றிய பின்பு எசமானர்கள் (இராணுவம்)பாதையில்நிமிர்ந்துநிற்க, அடிமைகள் (தமிழர்கள்) தலை குனிந்தபடி பயணம் போகும் காட்சியைக்காணஅரசுகாத்திருந்தது.

அதேவேளை, கொலைக் கடலாக அன்று காட்சி தந்த கிளாலிக் கடலில் கடற்புலிகள் ஆதிக்கம் பெற்று, மக்களின் படகுப் பயணத்திற்குத் துணையாகநிமிரத் தொடங்கியபோது, கிளாலி இறங்குதுறையைப் பிடித்து (ஒப்பறேசன் யாழ்தேவி) கடற்பயணத்தையும் நிறுத்த இராணுவத்தலைமைமுயன்றது. ஆயினும், பூநகரித் தளத்தினுள் 'தவளை' புகுந்து அரைவாசிப் படைத்தளத்தை அழித்தொழித்ததுடன், படையினரின் சாவுச் செய்திகளைச் சிங்கள தேசத்திற்குக் கொடுத்துத் தமிழர் சேனையின் பலத்தை நிரூபித்த பின்னர்தான், சிங்கள மக்களிடம் மனமாற்றம் ஏற்படத் தொடங்கியது. அந்த மாற்றத்தின் அலையில் உயர்ந்தவர்தான் இன்றைய சனாதிபதி.

இந்த வரலாற்றை மனதிற் கொண்டு, எமது மக்கள் ஒரு கேள்வியைத் தம்முள் கேட்டுப்பார்க்க வேண்டும். அதாவது, அன்று படையினர் இருக்கக்கூடியதாகவே பூநகரிப் பாதையைத் திறக்கச் சம்மதிக்காத படைத் தலைமை, இன்று திறக்கச் சம்மதிப்பது ஏன்...? அது குடாநாட்டு மக்களின் நன்மைக்காகப் புதிய அரசு செய்யமுனையும் ஒரு நல்லெண்ண முயற்சிஎன்றுபதிலளிப்பீர்களேயானால், சிங்கள ஆளும் வர்க்கத்தின் சூட்சும அரசியலை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை என்றுதான் அர்த்தமாகும்.

அன்றுகுடாநாட்டிற்குவேறுஎந்தவித பாதையும்இல்லாத நிலையில், கிளாலிப் பாதை ஒரு மரணப் பொறியாகவே இருந்தது.ஆனால்,இன்றுநிலைமை அப்படியல்ல. பணச்செலவு அதிகமாக இருந்தாலும்கூட, உயிர்ப் பயமில்லாத ஒரு சாதாரண போக்குவரத்துப் பாதையாகக் கிளாலிக் கடல் மாறிவிட்டது.

இந்த நிலையில் சிங்கள இராணுவத்தைப் பொறுத்தவரையில், இராணுவம் நிற்கத் தக்கதாக பூநகரிப் பாதையைத் திறப்பதும் ஒன்றுதான், கிளாலிக் கடல் நீரேரியூடாக மக்கள் பயணம் செய்வதும் ஒன்றுதான். எனவேதான்பூநகரிப்பாதையால்மக்கள் பயணம்செய்யத் தான் அனுமதிப்பதாக அரசு கூறுகின்றது. இதன்மூலம், 'மக்களுக்காகப் பாதை திறந்த புண்ணியவாளன்' என்ற நல்ல பெயரை உலக நாடுகளிடமிருந்து பெற்றுவிடலாம் என்றும் அரசு எண்ணுகின்றது. அதே நேரம், உளவியல் ரீதியாக வடதமிழீழ மக்கள் பெற்றுவரும் உறுதிநிலையை வளரவிடாமல் தடுக்கும் ஒரு கைங்கரியத்தையும் சிங்கள ஆளும் வர்க்கம் செய்ய விரும்புகின்றது. அதாவது, அரசுப்படைகளுடன் சவால்விட்டபடிநடைபெறும்கிளாலிப் பயணம், சாதாரண மக்களுக்கு ஒரு மனவலுவையும் தங்கு நிலையற்ற தன்மையையும் ஊட்டிவருகின்றது.

தொடர்ச்சி 19 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விவசாயச் சிறப்பிதழ்

பொருண்மியத்தடை எமது மக்களின் வாழ்நிலையில் என்றுமில்லாத பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது என்பது உண்மை. போர் அனர்த்தங்களுடன், பொருண்மிய அழுத்தங்களுமாக எமது மக்கள் தாங்கொணாச் சுமைகளைத் தாங்கிநிற்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். எனினும் இந்தப் பெரும் பளுவின் விளைவாக எமது மக்கள் மத்தியில் ஒரு புதிய விழிப்புணர்வும் ஏற்படத் தவறவில்லை. தடைகளால் விளைந்த பாதிப்பும், அதனால் எழுந்த பற்றாக்குறையும் அந்தப் பற்றாக்குறையால் பிறந்த தேவைகளுமாக ஒட்டுமொத்தத்தில் சுயசார்புப் பொருளாதாரத்தின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் எமது மக்களுக்கு நன்கு உணர்த்தியது.

*தமிழீழத் தேசியத் தலைவர்*

*திரு. வே. பிரபாகரன்*

## போராட்ட வளர்ச்சியூடு பொருண்மிய வளர்ச்சி கண்டேன்

போரிடல்,படைநடத்தல்,
போர்க்களத்தலைமையேற்றல்
பொருண்மியவளம்பெருக்கிப்
புதுயுகஎழுச்சிகாணல்
போகின்றநாட்டிலெல்லாம்
போராட்டவலிமைசேர்த்தல்
சாகின்றவரையிற்'கிட்டு'
சாதித்துவென்றுபோனான்!

போராடும்ஈழமண்ணிற்
பொருண்மியத்துறைவளர்த்து
வேரோடவிட்டஎங்கள்
வீரனே!இந்நிலத்தில்
ஆறோடவில்லையென்னும்,
ஆதங்கம்இருந்தபோதும்,
ஏரோடப்பயிர்குவித்து
என்றென்றும்வளம்பெருக்கி

ஊரோடுவாழ்ந்துவரும்
உழைப்போர்கள்மிகுந்துள்ளார்!
வெளிநாட்டுப்பயிரினத்தின்
விதைகளைஅனுப்பியெங்கள்
உள்நாட்டுப்பொருள்வளத்தை
உவப்போடுபெருகவைத்தும்
பிறநாட்டுக்கருத்தரங்கிற்
பிறந்தமண்ணின்வளமுரைத்தும்

திறமானபுலமையினாற்
திக்கெட்டும்புகழ்குவித்தும்
தரமானபணிசெய்த
இயக்கத்தின்மூத்ததளபதிநீ!
போராட்டவளர்ச்சியோடு
பொருண்மியவளர்ச்சிதன்னை
நீரோட்டமாகஎங்கும்
நிதம்உயரவைத்தவன்நீ!

-ஜெ.கி.ஜெயசீலன்



இனத்தின் சிறப்பம்சங்களாகும். நட்டு மூன்றாம் மாதத்தில் பூக்கள் உருவாகி எட்டு மாதப் பருவத்தில் பழம் கிடைக்கும். இந்த நல்லினம் கேணல் கிட்டு அவர்களினால் வெளிநாட்டில் இருந்து அனுப்பட்டதாகும். இந்த மூத்த தளபதியின் ஞாபகார்த்தமாகவும் தமிழீழ பொருண்மியப் மேம்பாட்டில் அவர் கொண்டிருந்த ஆர்வத்தைப் பிரதிபலிக்கும் முகமாகவும் இந்தப்பப்பாசி இனம் எதிர்காலத்தில் தமிழீழ மக்களுக்கு பொருண்மிய நலன்களைத் தரும்ஒருஇனமாகவும்இருக்கும்என்பதுஎமது நம்பிக்கையாகும்.

## தமிழீழத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய இனப் பப்பாசி

குட்டையான,மிகப்பெரியபழங்களைத் தரக்கூடிய ஒரு புதிய இனப் பாப்பாசி மேஜர் பிரதாப்செட்டி மாதிரிப் பண்ணையில்பயிரிடப்பட்டுள்ளது. நிலத்திலிருந்து1.5அடிஉயரத்திலேயே காய்கள் இருப்பதும் 5 –6 கிலோகிராம் பழங்களைத் தருவதும்இப்பப்பாசி



## எதிரி திணித்த பொருண்மியத்தடை எமதுதேசத்தை முடக்கிவிடவில்லை முடுக்கிவிட்டுள்ளது



பொன்விளைவித்த வேளாண்மன்னர்களிலொருவர் தேசியத்தலைவரால் கெளரவிக்கப்படுகிறார்

'தமிழீழத்தின் தன்னிறைவான பொருண்மியத்தைக் கட்டியெழுப்பல்' என்ற தமிழீழத் தேசியத் தலைவரின் கொள்கையின் அடிப்படையில்,தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவனத்தால் வடதமிழீழத்தில், 'வேளாண் மன்னர்களைத் தெரிவதற்கான போட்டி' ஒன்று ஆண்டுதோறும் நடாத்தப்பட்டு உழவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். கால போகத்தில் செய்கை பண்ணப்படும் நெல்லின் அறுவடை மதிப்பீடுகளைக் கொண்டு இதற்கான இறுதித்தேர்வு நடைபெறுகின்றது. விவசாயப் போதனாசிரியர்கள், பெரும்போக உத்தியோகத்தர்கள்,புள்ளிவிபரப்பிரதிநிதிகள்,உற்பத்திக்குழுப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவால், முதலில் வட்டரீதியாகத் தேர்வு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அறுவடை மதிப்பீடுகள் செய்யப்பட்டதும் இக்குழுவால் மாவட்ட ரீதியாக வேளாண்மன்னர்கள்தெரிவு செய்யப்படுவர்.

தெரிவு செய்யப்பட்ட வேளாண்மன்னர்களுக்குத் தமிழீழத் தேசியத் தலைவரால் விருதும், தங்கப் பதக்கமும் வழங்கப்படுகின்றது. கடந்த ஆண்டு கால போகத்தின் போது 6 உழவர்கள் வேளாண் மன்னர்களாகத் தெரிவு செய்யப்பட்டு, இவ்வாறு தலைவரால் பாராட்டிக் கெளரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 06.05.1994 அன்று நடந்த இந்தக் கெளரவிப்பு நிகழ்வில் தேசியத் தலைவர் ஆற்றிய உரையே இங்குமுழுமையாகத் தரப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...



## வதிவிட வேளாண்மை

தமிழீழ விடுதலைப் போராட்டமானது, அந்நிய ஒடுக்கு முறைகளிலிருந்து எம்மக்களை விடுவிப்பதோடு மட்டும் நிற்கவில்லை. அது சார்ந்துநிற்கும் பொருண்மிய நிலையிலிருந்து தமிழ்மக்களைவிடுடச்செய்து,எமது சொந்த மண்ணில் சொந்தக்கால்களில் தங்கிநிற்கும் தன்னிறைவான பொருண்மிய வாழ்வைக் கட்டி எழுப்புவதற்கு வழிவகுத்துள்ளது. இப்பணியில் செயற்பட்டுவரும் தமிழீழ மேம்பாட்டு நிறுவனம் தமிழீழ மக்கள் அனைவருமே இன்று எதிர்கொண்டுள்ளபாரியபொருண்மியச் சுமையினின்றும் விடுபடப் பல்வேறு செயற்திட்டங்களை அறிமுகப்படுத்திச் செயற்படுத்தி வருகின்றது. அவற்றுள் வதிவிட வேளாண்மைப் போட்டியும் ஒன்றாகும்.

மேற்படி நிறுவனம், வதிவிட வேளாண்மையில் ஈடுபட்டுள்ள யாழ் குடாநாட்டு மக்களை உற்பத்தியில் ஊக்குவிக்கும் முகமாக, 1991–1992 காலப்பகுதியிலிருந்து இப்போட்டியை நடாத்தி வெற்றி பெற்றோருக்குப் பரிசில்களையும் வழங்கி வருகிறது. 1994–1995 காலப்பகுதிக்கான நான்காவது வதிவிட வேளாண்மைப் போட்டியை 20–01–95 தொடக்கம் 15–03–95 வரை மூன்று கட்டமாக நடாத்தியுள்ளது. இதன்மூலம் குடியிருப்பாளர் பலரும் காய்கறிச் செய்கை, பழச்செய்கை, கால்நடை வளர்ப்பு, தேனீ வளர்ப்பு ஆகியவற்றில் கூடுதலான உற்சாகத்துடன் ஈடுபட ஊக்குவிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# வளமிகு பயிர் சூரியகாந்தி

சூரியனை நோக்கித் தன் தலை சாய்கும் அழகு மலரான சூரியகாந்தி உலகின் எண்ணெய்த் தேவையைப்பூர்த்தி செய்யும்மிகமுக்கியபயிராகும்உலகெங்கும்ஏறத்தாள15 மில்லியன் கெக்ரேயர் நிலப்பரப்பில் இப்பயிர் பயிரிடப்படுகின்றது. ஓர் பூரணபயன்பாடுடைய இதன் பிறப்பிடம் தென்னமெரிக்க 'பேரு' நாடு. இதனை அதிகளவில்ஆஜன்ரீனா,ருமேனியா,பல்கேரியாஆகியன உற்பத்திசெய்கின்றன.

சூரியகாந்தி உயர்தர எண்ணெய்ப் பெறுமானமுடையதுடன் இதன் எண்ணெய் விரும்பத்தக்க மணமுடைய அதிக காலம் சேமிக்கக்கூடிய இயல்புடையது. ஒலிக் அமிலம், லினோலிக் அமிலம், பாமிற்றிக் அமிலம் என்பவற்றின் கிளிசரைடுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. கொலஸ்ரோல் அறவே அற்றது. இதனால் இருதய நோயாளர்களால் விரும்பிப் பாவிக்கப்படுகிறது. இந்தியாவில் சமையல் எண்ணெய்யாகப் பெருமளவில் சூரியகாந்தியே பாவிக்கப்படுகிறது. இதில் உயிர்ச்சத்து ஏ, டி, ஈ என்பன காணப்படுகின்றன.

இதன் எண்ணெயில் இருந்து மாஜரின் தயாரிக்கப்படுகிறது. மேலைத்தேசங்களில், சமையல் எண்ணெய்யாகப் பயன்படுத்தப்படுவதுடன், இதிலிருந்து செய்யப்படும் மாஜரின் பாவனை அதிகரித்தும் வருகின்றது. சவர்க்காரம் செய்யவும் இது உகந்ததொரு எண்ணெய்யாகும். மேலும் வர்ணங்கள்

> சூரியகாந்தி உயர்தர எண்ணெய்ப் பெறுமானமுடையதுடன், இதன் எண்ணெய் விரும்பத்தக்க மணமுடைய அதிக காலம் சேமிக்கக்கூடிய இயல்புடையது. ஒலிக் அமிலம், லினோலிக் அமிலம், பாமிற்றிக் அமிலம் என்பவற்றின் கிளிசரைடுகள் அதிகமாகக்காணப்படுகின்றது.கொலெஸ்ரோல் அறவே அற்றது. இதனால் இருதய நோயாளர்களால் விரும்பிப் பாவிக்கப்படுகிறது. இந்தியாவில் சமையல் எண்ணெய்யாகப் பெருமளவில் சூரியகாந்தியே பாவிக்கப்படுகிறது.இதில் உயிர்ச்சத்து ஏ,டி,ஈ என்பன காணப்படுகின்றன.

(பெயின்ற்) வாணிஸ், வசமாக்கி போன்றவற்றைத் தயாரிக்க மூலப் பொருளாவதுடன் விளக்கு எரிக்கவும் வாகனங்களிற்குஎஞ்சின்ஒயிலாகவும்பயன்படுகிறது.

சூரியகாந்திப் பிண்ணாக்கில் 35 வீதம் புரதம் காணப்படுகிறது. இப்பிண்ணாக்கு சிறந்த கால்நடைத் தீவனமாவதுடன்சிறந்தகோழித்தீவனமுமாகும்.

எஞ்சும்ஏனையபொருட்களைப்பசுந்தாட்பசளையாகப் பயன்படுத்தலாம்.

இப்பயிரானது பின்வரும் கவரத்தக்க தன்மைகளைக் கொண்டிருக்கிறது.

1.நல்லவிளைச்சல்தரக்கூடியது.
2.விரைவிலேமுதிர்ச்சியடையும்.
3.கோதுக்கும்பருப்புக்கும்இடையேயானஇடைவெளி குறைவு.
4.பூக்களின்சீரானமுதிரும்தன்மை.
5.கூடியஎண்ணெய்வீதம்.
6.அதிகளவுநோய்பீடைஎதிர்ப்புத்தன்மையுடையது.

அமிலத்தன்மையற்ற மணல், இருவாட்டித் தரைகளில் செழிப்பாக வளரும். மானா வாரியாகப் பயிரிடுவதற்குச் சிறந்த பயிராகும். எனினும் அறுவடைக்காலம் வறட்சியானதாக இருக்க வேண்டும். இதில் பல்வேறு சிறந்த இனங்கள் காணப்படுகின்றன. (யாழ்ப்பாணத்திற்கு) எமது பிரதேசத்திற்கு உகந்ததாக 'ஸ்பெயின்' இனம் கூறப்படுகிறது. ஏனைய சிறந்த இனங்களாவன, துருக்கி 170430, துருக்கி 251993, யு.எஸ்.எஸ்.ஆர்25510,எஸ்எச்510,சிஓ–2பெருட்டோறிக் என்பனவாகும்.

ஒருதடவைகொத்திச்சாறிப்பண்படுத்தியமண்ணில்2.5 செ.மீ ஆழத்தில் வரிசைகளிற்கிடையில் 60 செ.மீ உம் கன்றுகளிற்கிடையில் 25 செ.மீ இடைவெளியில் நடப்படும். வித்து முளைக்கும் வரை கூடிய ஈரலிப்புத் தேவை. (சிறிது நாட்களின் பின்) வாரமொரு முறை நீர்ப்பாசனம் செய்தல் போதுமானது. அடிக்கட்டுப் பசளையாக ஏக்கருக்கு 10 தொன் மாட்டெரு, குப்பை போன்றவைஇடப்படும்.

ஒரு பூவிலேயே ஏராளமான சிறு பூக்கள் காணப்படும். இவற்றிக்கு 'அயன்' மகரந்தச் சேர்க்கையே வேண்டப்படுவதால் தேனீக்கள் முக்கியமானவையாகும். 2 ஏக்கர் பயிர்ச்செய்கைப் பரப்பிற்குஒருதேனீப்பெட்டி எனும்வீதத்தில்வளர்த்தால் விவசாயி மாதமொன்றுக்கு இரண்டு போத்தல் தேனையும்பெறலாம்.

சூரியகாந்தியின் விளைவை அதிகரிக்கப் பின்வரும் முறைகள்பின்பற்றப்படுகின்றன.

1.காலை9மணிதொடக்கம்11மணிவரையான நேரத்தில் துணியொன்றினால் பூக்களைத் தடவுவதனால் சீரான மகரந்தச் சேர்க்கை ஏற்பட்டு விளைவு 30 வீதத்தினால் அதிகரிக்கப்படுகிறது.

2.விளைவிற்கானஊக்கிகளைவிசிறல்.

அ. நப்தலின் அசற்றிக் அமிலம் 10 பி.பி.எம், விதை நாட்டப்பட்டு45–60 ஆம்நாளில் விசிறப்படின் விளைவு 35வீதத்தால்அதிகரிக்கும்.

ஆ. இன்டோல் அசற்றிக் அமிலம் 10 பி.பி.எம், நாற்று நாட்டப்பட்டு 45 ஆம் நாள் விசிறப்படின் விளைவு 30 வீதத்தால்அதிகரிக்கும்.

பூவானது 3–20 அங்குல விட்டமுடையதாகவிருக்கும். இதன் நடுவில் உள்ள சிறுபூக்கள்கையால்அகற்றக்கூடியளவிற்கு இறுக்கம் தளர்ந்திருத்தல் அவை அறுவடைக்குத் தயாராக இருப்பதன் அறிகுறியாகும். முதிர்ந்த விதையிலேயே எண்ணெய் பெறக்கூடியதாக இருப்பதால் இது கட்டாயம்கவனிக்கப்படவேண்டியதாகும்.

அறுவடை செய்த பூக்களைக் காயவைத்து, கையால் உதிர்த்து வித்தைச் சேகரிக்கலாம். நீர்ப்பாசனத்தின் கீழ் எனில் கெக்ரேயர் ஒன்றிக்கு 1500 கி.கிராமும் மானாவாரி நிலமாயின்கெக்ரேயருக்கு1000கி.கிராமும்கிடைக்கும்.

சூரியகாந்தியானது இனிப்புக்காகவும் பயிரிடப்படுகிறது. இவ்வாறு பயிரிடப்படும் போது பயிரிற்கு இடையேயான இடைத்தூரம் அதிகமாகக் காணப்படும். இதில் இருந்து கிடைக்கும் விதைகள் அளவில் பெரியதாகவிருக்கும். பிலிப்பைன்சில் இவ்வகை விதைகள் நிலக்கடலை போன்று உண்ணப்படுகிறது.விதைப்பருப்பினை மாவாக்கியும் உணவுதயாரிக்கலாம்.

கிராமப் புறங்களில் இலுப்பை, வேம்பு, எள்ளு போன்ற விதைகளில்இருந்துஎண்ணெய்யைப்பிரித்தெடுக்கும் விதத்தில் சூரியகாந்தி விதையில் இருந்தும் எண்ணெய்யைப் பெறலாம். இதனைவிட மின்சாரம் அல்லது இயந்திரம் மூலம் (செயற்படுத்தப்படும்) இயக்கப்படும்சிறுபிழிகருவிமூலமும்எண்ணெய்யைப் பெறலாம்.கீழேசிலமுறைகள்தரப்படுகின்றன.

1.கிட்டிமுறை:–
விதையை இடித்து ஒரு சீலைக்குள் கட்டி இரு பொல்லுகளுக்கிடையில் வைத்துப் பிழிதல். இதற்கமைவாக இரு பொல்லுகளும் நடுப்பகுதியில் கயிற்றினால்பிணைக்கப்பட்டிருக்கவேண்டும்.

2.கெடுப்புமுறை:–
இரண்டு பலகைகளை இரு முனைகளிலும் தாங்கச் செய்து ஒரு தடியினை நெம்பு கோலாகப் பாவித்து இரண்டு பலகைக்கும் நடுவிலிருக்கும் விதையைப் பிழிதல்.

3.புரியுள்ளசூத்திரம்:–
சுதேச மருத்துவர்கள், மூலிகைகளைப் பிழிய உபயோகிக்கும்கருவிமூலம்பிழிதல்.

4.செக்குஊத்துப்பெட்டிமுறை:–
மின்சாரத்தால் அல்லது டீசலினால் இயக்கப்படும் சிறு இயந்திரம். இத்தகைய பிழிகருவிகளை இந்தியா விற்பனை செய்கிறது.இக்கருவிகளுக்குக்கூடுதலான பணம் செலவழிக்கப்பட்டாலும் இதன் பயன் அதிகம். இதனால் விதையிலிருந்து கூடிய வீதம் எண்ணெய் பெறலாம்.

5.இரசாயனமுறை:–
ஈதர், மதுசாரம் போன்ற இரசாயனங்களைக் கொண்டு எண்ணெய் வடித்தல். விதையிலுள்ள எண்ணெய்யை ஏறத்தாள முழுவதுமாகப் பிழிந்தெடுக்கஇம்முறைஉதவுகிறது.

### தமிழீழத்திற்கானஇதன்தேவை

தமிழீழத்தின் மண்வளமும், சுவாத்திய நிலையும் சூரியகாந்தியை, பண்ணை அடிப்படையில் உற்பத்தி செய்யவும் பொருத்தமாகவுள்ளன. இதற்கான ஆய்வுகளும், பரிசோதனைகளும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சூரியகாந்தியிலிருந்து பெறப்படும் உற்பத்திகளினது (சமையல் எண்ணெய், மாஜரின், எஞ்சின் ஒயில், சவர்க்காரம்) தேவையும் அதிகமுண்டு. ஏனெனில் இத்தேவைகளுக்காகநாம்சிறீலங்காவிலேயேதங்கியிருக்கின்றோம். சிறீலங்காவின் பொருண்மியத்தடை, தமிழீழத்தில் சமையல் எண்ணெய் (தேங்காய் எண்ணெய்), சவர்க்காரம் ஆகியவற்றில் பெரும்தட்டுப்பாட்டையும், விலை உயர்வையும் ஏற்படுத்தியது. பொருண்மியத்தடைக்குச் சவாலாக உடனடியாக அல்லது குறுகிய காலத்தில் தெங்குப் பொருட்களின் உற்பத்தியைக் கூட்ட முடியாது. ஏனெனில் தமிழீழத்தின் தேங்காய் உற்பத்தி சுயதேவைக்கும் மிகக் குறைவாகவேயுள்ளது. இந்நிலையில் சூரியகாந்தி உற்பத்திக்கு முன்னுரிமை கொடுத்து, பெரும்பண்ணை முறையில் உற்பத்தியை மேற்கொள்வோமாயின், சமையல் எண்ணெய்க்கான பற்றாக்குறையைக் குறைக்கலாம் அல்லது நீக்கலாம். அத்துடன் மாஜரின், சவர்க்காரம், எஞ்சின் ஒயில் போன்றவற்றையும் உற்பத்தி செய்யலாம்.இவ்வுற்பத்திகள்விவசாயக்கைத்தொழில்உற்பத்திகளாக இருப்பதனால் விவசாய உற்பத்தி என்ற வகையில் மட்டுமல்ல, விவசாயக்கைத்தொழில் என்ற வகையிலும் வேலைவாய்ப்புக்களைப் பெறமுடியும். மேலும் சூரியகாந்தி உற்பத்தியோடு தொடர்பாக, தேனீ வளர்ப்பையும்ஊக்குவிக்கலாம்.

# அரசியலமைப்பு...

இதற்காக, இதற்கு மூன்று சட்டதிட்டங்களில் மீறல்கள் நிகழவில்லை என்பதல்ல. குறிப்பாக தமிழர்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் எப்பொழுதும் மீறல்கள் நிகழ்ந்து வந்துள்ளன. முதன்முதலாக 29ஆவது சரத்தை மீறி 1956ல் தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

தற்போதைய பொதுத்தேர்தலில் கூட, 3ஆம், 4ஆம் சரத்துக்களை மீறி தமிழ் மண்ணில் தேர்தல் நிகழ்கிறது.

81ஆம் ஆண்டு தேர்தல் சட்டத்தின் 24ஆம் விதி2ஆம் உட்பிரிவின்படி தேர்தல் சாவடிகளை ஒருங்கிணைக்க ஏற்பாடுள்ளது. ஆனால் உண்மையில் அந்த ஏற்பாடு ஏன் செய்யப்பட்டது என்றால் தேர்தல் காலத்தில் வெள்ளப் பெருக்குப் போன்ற எதிர்பாராத காரணங்களால் ஒரு சில இடங்களில் தேர்தல் சாவடிகளை நிறுவ முடியாத நிலையில் அச்சாவடிகளை அருகில் உள்ள வேறுசாவடிகளுடன் இணைத்து மக்களை அங்கு வாக்களிக்கக் கூடிய வகையில் தேர்தல் ஆணையாளர் வகை செய்ய அது இடங்கொடுக்கிறது. ஆனால் தமிழ் மண்ணின் நிலை அப்படியல்ல. இங்கு 400 சாவடிகளை ஒருங்கிணைக்கிறார்கள். எத்தனை சாவடிகளை இணைக்கலாம் என மேற்படி தேர்தல் சட்டத்தில் வரையறையில்லாததால் இங்கு 400 சாவடிகளையும் கூட இணைப்பதற்கு அவர்கள் முற்படுகிறார்கள். ஆனால் யதார்த்தத்தின்படியும் சட்டத்தின் உண்மையான சரத்தின்படியும் அரசியலமைப்பு திட்ட விதியின் மேலாண்மையின் படியும் இங்கு தேர்தல்களை நடாத்த முடியாது. சிங்கள சட்ட நீதிமன்றம் என்ற வகையில் அது சரத்தை மீறி சட்டவிதிக்கு விளக்கமளித்து சட்டவிதியின்படி தேர்தலை அனுமதித்துள்ளது.

இப்படியாக அரசியல் சரத்துக்களையெல்லாம் தமிழரை மையமாகக் கொண்டு மீற சிங்கள அதிகாரிகள் பழக்கப்பட்டு விட்டார்கள். இவ்வாறு சாதாரணமான சரத்துக்களை மீறிப் பழக்கப்பட்ட இவர்கள் மொத்தத்தில் ஒரு அரசியலமைப்பையே மீற மாட்டார்கள் என்று சொல்வதற்கில்லை. எப்படியோ, அரசியலமைப்பைமீறினாலே தவிர அரசியல் நடாத்த முடியாது என்ற நிலையே இன்று இலங்கைத்தீவின் அரசியலாகிவிட்டது.

குறிப்பு
(1)ஜே. ஆர். மேலாடையின்றி அரை ஆடை அணிந்து சேற்றில் கால்பதித்து ஏர்பிடித்து உழும் உழவனாய் 1978ஆம் ஆண்டு பண்டுவஸ்நுவரவில் ஏர்பூட்டு விழா நடாத்தினார். இதைக் கண்டு தனது மின்னேரியாத் தெய்வமே நேரில் வந்ததுபோல சிங்களப் பாமரமக்கள் சொக்கி நின்றனர்.

- முற்றும்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**விவசாயச் சிறப்பிதழ்**

# தமிழீழப் பொருண்மியத்தில் விவசாயம்

## — இன்றும் நாளையும்

கடந்த காலங்களில் சிறீலங்காவினது ஆட்சிகள் மாறிய போதெல்லாம் பொருண்மியக் கொள்கைகளும் மாற்றம் கண்டன. உணவுற்பத்தியில் குறிப்பாக நெல்லுற்பத்தியில் தன்னிறைவு காணவேண்டும் என்ற நோக்கோடு விவசாயத்துறைவழிநடத்தப்பட்டது. அதேவேளை, எமது தமிழீழத்தின் வளமான நிலப்பரப்புக்களை முடிந்தளவிற்கு குடியேற்றம் என்ற போர்வையில் அபரித்தும் கொண்டது. அத்தோடு தொழிற்சாலைகள், இராணுவத்தளம், விமானத்தளம் என்பவற்றை அமைப்பதைக் காரணம் காட்டியும் எமது விளைநிலங்கள் பறிபோயின. மட்டக்களப்பு,வவுனியா, திருமலை, பலாலி விமானத்தளங்களும் கல்லோயா, வெலிஓயா, மகாவலி குடியேற்றத் திட்டங்களும் அம்பாறையில் உருவாக்கப்பட்ட புதியபூமித் திட்டமும்எமது வளமான விளைநில அபகரிப்புக்கான திட்டங்களே!

பொருளாதாரத்தின் அடிப்படைக் காரணிகளில் ஒன்றான இந்த நிலம்தான் விவசாயத்துறைக்கும் அடிப்படையாக அமைகின்றது. தமிழீழத்திற்குத் தேவையான உணவிலும் பார்க்கக் கூடிய உணவு உற்பத்தி செய்யக் கூடியவாறு வடக்கு– கிழக்கு மாகாணங்கள் இருந்தால் அது தமிழர்களால்முன்னெடுக்கப்படும்எந்த உரிமைப்போராட்டத்திற்கும் உத்வேகம் அளிப்பதாக அமையும், என்பதை உளர்ந்த சிறீலங்கா அரசின் முன்னுணர்வின் செயற்பாடே திட்டமிட்ட இந்நடவடிக்கைகள் ஆகும்.

எமது பொருண்மியமும் தமிழீழ மக்களும் பாதுகாக்கப்பட்டு வளர்ச்சிப் பாதையில் செல்வதற்கு தமிழீழ தேசிய பாதுகாப்பு அவசியமானது.இன்றுள்ள எமது தமிழீழ தேசத்தின் நிலவளமே, எமது மக்களுக்கு ஆண்டுதோறும் போசாக்கான உணவினை வழங்கவும் பிறதேவைகளை நிறைவேற்றவும் போதுமானதாகும்.

எனவே எமது தேசத்தில் தற்போதுள்ள வளங்கள் யாவும் சரியான முறையில் (உரிய பயிர்களுக்கென) அடையாளம் காணப்பட்டு பொருத்தமான திட்டமிடலின் கீழ்ப் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும். நில, நீர் வளம் காப்பாற்றக் கூடியவாறான சிறந்த முகாமைத்துவ முறைகளின்படி பயன்படுத்தப்படுமாயின் எமது உணவுத்தேவையின் முழுமையினையும்நாமேஉற்பத்தி செய்யமுடியும்.

> யாழ் மாவட்டத்தில் ஏறத்தாள ஒன்பது இலட்சம் பேர், ஒரு இலட்சம் ஹெக்டர் நிலப்பரப்பில், நெருக்கமாக வாழும்போது யாழ் மாவட்டச் சனத்தொகையில் சரி அரைவாசியான , நாலரை இலட்சம் பேர் வாழும் வன்னிவள நாட்டில் ஏறத்தாள எட்டு இலட்சம் ஹெக்டர் நிலப்பரப்பு உள்ளது.இதனால்,வன்னியில் எமது மண்வளம், மந்தாகவும், தரிசாகவும் வீணே பயன்பாடற்று உள்ளது.இந்த வளத்தை, வளம்படுத்த நாம் முன்னேற, நாடு முன்னேற, வன்னியில் குடியேறுவதே இன்றுள்ள ஒரே ஒரு மாற்று வழியாகும்.

இன்றைய தேவைக்கேற்ப பாரம்பரிய முறைகளுடன்
திருத்தியமுறைகளையும்இணைத்து—
மனித நாகரிகம் வளர வளரத் தொழில்நுட்பமும் வளர்ந்து அதன் ஊடாக உற்பத்திகள் அதிகரிக்கும். ஆயினும் தமிழீழ விவசாயத்துறையைப் பொறுத்தவரை தலைகீழானநிலையேகாணப்படுகின்றது.

> பொருளாதாரத்தடையும், உணவுத் தட்டுப்பாடும் உள்ள இன்றைய போராட்ட காலத்தில், தரிசாகக் காணிகளை விடுவதும், இந்த மண்ணில், இந்தப் பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்கள், பயிரிடக் காணி இல்லையென அலைவதும், எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. இதனால்த்தான் தரிசுக் காணிகளைப் பகிர்ந்தளிக்கும் திட்டத்தை த.பொ.மே நிறுவனம் முனைப்புடன் செயற்படுத்துகின்றது.

சந்தை திறந்து இருக்கையில் உள்ளீடுகளும், தொழில்நுட்பங்களும் பல பகுதிகளிலும் உள்வருவது இயற்கை. இன்று தமிழீழ பொருண்மியமானது வெளியிடங்களுடன் கொண்டிருந்த தொடர்புகள் யாவும் இறுக மூடப்பட்டுள்ளன. உற்பத்திகளுக்கான மூலப்பொருட்கள் உள்வரமுடியாதநிலை. அப்படிவரினும் அவற்றின் பணப்பெறுமதி பல மடங்குஅதிகமானது.

இந்த நிலையில் பாரம்பரிய முறைகளிற்கு நாம் திரும்புவது தவிர்க்க முடியாதது. பாரம்பரிய முறைகள், கிடைக்கக்கூடிய தொழில்நுட்பங்களோடு திருத்தி அமைக்கப்படுகையில் அவை எமது தேவைகளை ஓரளவிற்காவது தீர்க்கக்கூடியதாகஅமைகின்றன.

மாட்டெருவும், ஏத்தும், துலாவும், பட்டையும், எருதுமாடுகளும், ஏர்க்கலப்பையும் எமது மண்ணில் நிலைத்துவிட்ட பாரம்பரிய தொழில் நுட்பங்களுடன் திருத்தியமைத்து உற்பத்தி முயற்சிகளில் பயன்படுத்தும்போது எமக்குரிய உணவுத் தேவையை நாம் எட்டிவிட முடியும். உள்ளீடுகளின் ஒழுங்கற்ற கிடைப்பனவால் ஏக்கருக்கான விளைவுக் குறைவு தவிர்க்க முடியாதது. இந்நிலையில் தான் உற்பத்தியின் நிலப்பரப்பை கூட்டவேண்டிய தேவை ஏற்படுகின்றது.

இன்று வதிவிட வேளாண்மை என்ற வகையில் விவசாயம் விரிவுபடுத்தல் அவசியமானதாகும். விவசாயமானது விவசாயிகளிடம் மட்டும் இருக்காது சாத்தியமான மக்கள் அனைவரிடையேயும் பங்கிடப்படவேண்டும். கிராமப்புறங்களில் மட்டுமே நிலைகொண்டுள்ள விவசாயத்தை நகரப்புறங்களுக்குள்ளும் கொண்டுவரவேண்டும்.

ஒவ்வொரு தமிழீழக் குடிமகனும் தனது உணவுத்தேவையில் ஒரு பகுதியை உற்பத்தி செய்தால்இவர்களிற்கானஉணவுற்பத்தியைச் செய்யும் விவசாயியும், விவசாய நிலத்தின் ஒரு பகுதியும்நேரடி நுகர்வுப்பொருட்களைஉற்பத்தி செய்யப் பயன்படுத்தாமல் மூலப்பொருட்களை உற்பத்திசெய்வதற்குப் பயன்படுத்தப்படலாம். உதாரணமாக மரக்கறிச் செய்கையில் நகரவாசிகளும் ஈடுபடும்போது மரக்கறிக்கான தேவைகுறைவுபட, மரக்கறி உற்பத்திசெய்த விவசாயி சணலையோ அல்லது எமக்குத் தேவையான ஒரு எண்ணெய்வித்தையோ பயிரிட வாய்ப்புஏற்படும்.

விவசாயமானது அனைத்து மக்களிடமும் பங்கிடப்படுகையில் அது நுகர்வுநிலையிலிருந்து கைத்தொழில் மட்டத்திற்கு உயர்த்தப்படுகிறது. இதன்மூலம் விவசாயினது தொழிலிற்குப்பாதுகாப்புஏற்படுவதுடன்தமிழீழப் பொருண்மியமும்உறுதிபெறத்தொடங்குகிறது.

### இன்றைய தேவை அனைவர்க்கும்உணவு.

இராணுவ ஆக்கிரமிப்புக்களாலும் திட்டமிட்ட அழிவு நடவடிக்கைகளாலும் தமிழீழ மக்களில் பல்லாயிரக்கணக்கான கர்ப்பிணித் தாய்மாரும் இளம்சிறார்களும்போசாக்கின்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எமது இன்றையசந்ததியினர் திடகாத்திரமானவர்களாக, புத்திசாலிகளாக வளர்த்தெடுக்கப்பட்டால் மட்டுமே, நாளைய எமது பொருண்மியம் சிறப்பான முறையில் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். அதற்கேற்ற வகையில் இன்று எமது விவசாய வளங்கள் பயன்படுத்தப்படவேண்டும்.

அதாவது தமிழீழ மக்கள் அனைவருக்கும் தேவையான உணவினை உற்பத்தி செய்வதே இன்று எமக்கு முன்னுள்ள உடனடித் தேவை ஆகும். அத்துடன் குறைந்த நிலப்பரப்பை மட்டுமே நம்பித் தனது குடும்பத்திற்கான வருவாயைத் தேடிநிற்கும் ஏழை விவசாயியின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படலும் அவசியமானதாகும்.

### சாத்தியமான ஊக்குவிப்புக்களும், பாதுகாப்பானசந்தையும்.

பருவகால மாறுதல்களோடு பின்னிப்பிணைந்துள்ளஎமதுவிவசாய உற்பத்திகள் சுயதேவைப் பூர்த்தி என்ற நிலையினையும் கடந்து அடுத்த கட்டத்திற்கு நகர்த்தப்பட வேண்டும். இதற்குத் தேவையான திருத்திய விதைகள், நோய்ப்பீடை நாசினிகள் போன்ற உள்ளீடுகளுடன் ஏனைய சேவைகளும் உரிய காலத்தில் கிடைக்கவேண்டும்.

அத்துடன், அறுவடைக்காலங்களில் கணிசமான இலாபத்தை உள்ளடக்கிய விலைகளில் விளை பொருட்களை விற்பனை செய்யக்கூடியதான பாதுகாப்புச் சந்தையும் இருப்பதாக, தமிழீழ விவசாயி உணர்வாராயின் அவர் தனது முழு இயலளவையும் பாவித்துப் பொருட்களை உற்பத்தி செய்யத்தயங்கமாட்டார்.

இதுதனிஒருவரினாலோஅல்லது தனி ஒரு அமைப்பினாலோ நிறைவேற்றக்கூடிய ஒரு செயற்பாடல்ல. எனவே இதற்கு உதவக்கூடியவாறு எமது மண்ணிலுள்ள விவசாயத்துறை சார்ந்த அனைத்து அரச,அரச சார்பற்ற நிறுவனங்களது செயற்பாடுகளும் அமைதல்வேண்டும்.

எமது விவசாயத்தறையில் ஒரு இறுக்கமானதும், தெளிவானதும், பொருண்மியத்தின் சகல துறைகளையும்வளர்க்கக்கூடியதுமான விவசாயக் கொள்கைஒன்றுஇன்றியமையாதது. அதன்போதுகிராமியஅபிவிருத்தினூடாகவளர்த்தெடுக்கப்படக்கூடியவாறு விவசாயத் துறையின் கட்டமைப்பு அமைய வேண்டும். மாகாணங்கள், மாவட்டங்கள், கிராமங்கள் ஆகிய பல்வேறு மட்டங்களிற் காணப்படும்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

> யாழ் மாவட்டத்தில் 68000 ஹெக்டர் விவசாய நிலம் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் நாம் 12000 ஹெக்டரில் நெல்லும், 8000 ஹெக்டரில் மேட்டுநிலப் பயிர்களும் மட்டுமே செய்கின்றோம். இது மூன்றில் ஒரு பங்காகும். மிகுதி மூன்றில் இரண்டு பங்கு நிலம் எங்கே?. எமது வளவுகளில் வீணே இதன் ஒரு பகுதி இருக்கக்கூடுமல்லவா?. எமது வளவுகளில் வீணே கிடக்கும் நிலத்தை நாம் ஏன் ஏதாவது ஒரு வகையில் விவசாயத்திற்குப் பயன்படுத்தக்கூடாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விவசாயச் சிறப்பிதழ்

# வளர்ச்சி பெற்றுவ

விவசாயத்துறையைமேம்படுத்த,

- கூடியநிலப்பரப்பில்பயிரிடல்.
- ஒரு ஏக்கருக்கான விளைவைஅதிகரித்தல்.



- ஒருஏக்கரில் ஒராண்டில் செய்யப்படும் பயிர்ப்போகங்களை அதிகரித்தல்.

போன்ற பல செயற்திட்டங்களைத் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்செயற்படுத்திவருகின்றது. தமிழீழப்பொருண்மியமேம்பாட்டு



நிறுவனத்தின்நடவடிக்கைகளால் வளர்ச்சிபெற்றுவரும்

## விவசாயப்பொருண்மியம்

ஆங்கிலேயரின் ஆட்சியின்பின்னர், 1948 இல்சுதந்திரம்அடைந்தஇலங்கையின் தமிழ்ப் பகுதிகள் தொடர்ச்சியாகவந்த சிங்கள அரசுகளால் திட்டமிடப்பட்டமுறையில் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் எமது வளங்கள் சரியானமுறையில் இனங்காணப்படாமலும், இனங்காணப்பட்டவைகள் எமது பகுதி மக்களுக்குப் பிரயோசனப்படக்கூடியவாறு ஒழுங்கமைக்கப்படாமலும் சிங்கள ஆட்சியாளர்களால் புறக்கணிக்கப்பட்டேவந்திருக்கின்றது.

"1990, 1991 காலபோகத்தில் மிகக்குறைந்த நிலப்பரப்பில் மிகக்குறைந்த விளைவும், ஒரு ஹெக்டருக்கான மிகக்குறைந்த விளைவும் என இருந்தநிலை மாறி,தற்போது பயிரிடும் நிலப்பரப்பு ஏறத்தாள 6000 ஹெக்டரினாலும், விளைவு 44 ஆயிரம் மெற்றிக் தொன்னாலும், ஒரு ஹெக்டருக்கான விளைவு ஒரு மெற்றிக் தொன்னாலும்அதிகரித்தது.

எமது பிரதேசங்களின் வளங்களைக்கொண்டு, எமது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவாறான நிர்வாகக்கட்டமைப்புக்களோ, திட்டங்களோ செயற்படுத்தப்படாமல், தென்னிலங்கையை, குறிப்பாகக் கொழும்பை மையமாகக்கொண்டே எமது தேவைகள் பூர்த்திசெய்யப்பட்டன.

## தன்னிறைவானதமிழீழம்

ஆனால் குறிப்பிடத்தக்க பல உற்பத்திகளில் தமிழீழம் தனது தேவைகளைவிட அதிகம் உற்பத்தி செய்கிறது. இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டு மூலம் உணர்ந்துகொள்ள முடியும்.

தமிழீழத்தின்மொத்தச்சனத்தொகைகிட்டத்தட்ட 25,00,000 (இருபத்தைந்து இலட்சம்) எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த மக்களுக்கான ஆண்டுக்கான மொத்த அரிசித் தேவை 2,50,750 மெற்றிக்தொன் ஆகும். இந்த அரிசியை 3,74,300 மெற்றிக்தொன்நெல்லில்இருந்துபெறமுடியும்.

உண்மையில் தமிழீழப் பிரதேசமாகிய இலங்கையின் வடக்கு– கிழக்குப்பிரதேசங்களில் 1990 ஆண்டு உற்பத்தியான மொத்த நெல்லின் அளவு6,09,000மெற்றிக்தொன்ஆகும்.

ஆகவே எமது பிரதேசத்தின் தேவையைவிட 1,57,000 மெற்றிக்தொன் அரிசியை நாம் சிறீலங்கா அரசுக்குவழங்கிவருகின்றோம்.

இன்னும்விரிவாகப்பார்ப்போமானால்,இவ்வாறான மிகை உற்பத்தி நிலையிலும் நாம் அரிசிக்காகக் கப்பலை எதிர்பார்த்திருக்கும் நிலையேதற்போது நிலவுகிறது.

இது ஒரு எடுத்துக்காட்டே. இவ்வாறாகப் பல விடயங்களிலும் நிலைமை உள்ளது. ஆட்சியும் அதிகாரமும் சிங்களவரிடம் இருந்தபடியாலேயே இந்த நிலைமை உள்ளது என்பது, வெளிப்படையானஒருஉண்மையே.

இதனை உணர்ந்துகொள்வதன் மூலந்தான் நாம் எமது வளங்களை,எமது தேவைக்கு ஏற்றவாறு பயன்படுத்திப் பூர்த்திசெய்ய முடியும் என்பதையும் உணர்ந்துகொள்ளமுடியும்.

## விவசாயத்துறையைமேம்படுத்தல்

தமிழீழத்தில் விவசாயத்துறை இரண்டாவது ஈழப்போர் தொடங்கிய காலம் என்று சொல்லப்படுகின்ற 1990 ஆம் ஆண்டைத் தொடர்ந்து அதற்கு முன்னர் இருந்த ஓரளவான நிலையினைவிட முற்றாகவே பாதிப்படையத் தொடங்கியது.

தொடர்ந்த இராணுவ நடவடிக்கைகளால் மக்கள் இடம்பெயர்ந்த காரணத்தால், விளைநிலங்கள் தரிசாகக் கைவிடப்பட்டநிலை, பொருண்மிய – எரிபொருட் தடையால் உள்ளீடுகள் பெறமுடியாது நீர் இறைப்புப் பாதிப்பு, உரங்கள் – கிருமிநாசினித் தட்டுப்பாடு, போக்குவரத்துப் பாதைகள் தடுக்கப்பட்டமையும், போக்குவரத்து வாகனங்களின் எரிபொருட் தட்டுப்பாட்டால் விளைபொருட்களை சந்தைப்படுத்தமுடியாத தன்மை எனப் பல்வேறு வகைப்பட்ட சிக்கல்கள் விவசாயத்துறைசார்ந்துஏற்பட்டன.

இதன் காரணமாகவே மேற்குறிப்பிட்ட அனைத்துச் சிக்கல்களையும் எதிர்கொண்டு, தமிழீழத்தின் முதன்மையான பொருண்மியத்துறையாக விளங்கும் விவசாயத்துறை தொடர்பாகப் பல்வேறு செயற்திட்டங்களைத் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செயற்படுத்திவருகின்றது.

விவசாயத்துறையை மேம்படுத்த, கூடிய நிலப்பரப்பில் பயிரிடல், ஒரு ஏக்கருக்கான விளைவை அதிகரித்தல், ஒரு ஏக்கரில் ஒரு ஆண்டில் செய்யப்படும் பயிர்ப்போகங்களை அதிகரித்தல் ஆகியவையே உகந்தவழிகள் எனக்கருதப்பட்டன.

கூடிய நிலப்பரப்பில் பயிரிடுதல் என்ற வகையில், பல்வேறு பகுதிகளிலும் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தீவிரமாகச் செயற்பட்டது. விவசாயத்தில் ஆர்வம் உள்ள பலருக்குக் காணி இல்லாத நிலையினை உணர்ந்து, அவர்களுக்குக் காணி வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

"எமது பிரதேசத்தின் தேவையைவிட 1,57,000 மெற்றிக் தொன் அரிசியைநாம்சிறீலங்கா அரசுக்கு வழங்கிவருகின்றோம்.எனினும்நாம்அரிசிக்காகக் கப்பல்களை எதிர்பார்த்திருக்கும் நிலையே தற்போதுநிலவுகிறது."

அத்துடன் பயனற்றவிதத்தில் இருந்த தரிசுக் காணிகளும் அடையாளங் காணப்பட்டன. அவற்றினைச் சீரானவகையிற் பிரித்து, வழங்கும் பணியும்மேற்கொள்ளப்பட்டது.

தரிசு நிலங்களாகக் காணப்பட்ட காணிகள் வறுமைக்கோட்டில் வாழ்ந்த நிலமற்ற விவசாயிகளுக்குத் தற்காலிக அடிப்படையில் வழங்கப்பட்டது.

இவ்வகையில் கிளிநொச்சிக் கோட்டத்தால் 17211.:.2 ஏக்கரும் வவுனியாக் கோட்டத்தால் 25321.:.2 ஏக்கருமாக மொத்தம் 4,254 ஏக்கர் தரசுநிலம் பகிர்ந்து வழங்கப்பட்டது. மேலும் முல்லை மாவட்டத்தில் 1990 – 1993 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 823 ஏக்கர் தரிசுக் காணியும் வழங்கப்பட்டு உள்ளது.




ஒரு ஏக்கருக்கான விளைவை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் இறங்கிய போது, உள்ளீடுகள் கிடைக்கவில்லை. எரிபொருள் தடைப்பட்டது. நவீன தொழில்நுட்பம் முற்றாகப் பயன்படுத்தமுடியாதநிலை.இவ்வேளையில்தான் பழையதோ,புதியதோஎன்றில்லாமல்காலத்துக்கு, இடத்துக்கு, வசதிக்கேற்ற தொழில்நுட்பம் அறிமுகமானது.

எமது கடந்தகால விவசாயச் சிந்தனைகள், செயற்பாடுகள், குடியேற்ற ஆட்சிக்குச் சாதகமானதாகவும், சிங்கள ஏகாதிபத்தியத்துக்குச் சாதகமானதாகவும் அமைந்ததை எவரும்மறுக்கமுடியாது.

நாம்ஒவ்வொருவரும்எமக்குத்தேவையானதை நாமே உற்பத்தி செய்யமுடியும். எமது பிரதேசம் வளமானது. நாம் பசியுடன் இருக்கவேண்டுமென்றில்லை.நெல்லையோ,சிறுதானியத்தையோ, கிழங்கையோ பயிரிட்டு சத்துணவும் ஊட்டமும் பெறலாம்எனவெளிப்படுத்தப்பட்டது.

இந்தச் சிந்தனையில்தான் சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு அடிபணியும் ஒரு பொருண்மிய முறையில் வாழமுடியாது என உணரப்பட்டு எமது வளத்தினூடாக, எமது உற்பத்திகளூடாக ஒரு சுயசார்புப்பொருண்மியஅமைப்பின்தேவை உருவானது.

"தேவைப்படும் காலத்தில் அரிசி எமக்குக் கப்பல்களில் வருவதைவிட, தேவையற்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ...ரும் விவசாயப் பொருண்மியம்

நெல்அறுவடைக்காலங்களில்,கப்பல்களில்அரிசி வருகின்றது. அரிசிக்கு மாத்திரம் இது பொருத்தமானது அல்ல. உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் யாவற்றுக்குமே இவ்வாறான நிலைமைதான்.'

இந்த நோக்கங்களையும், தேவைகளையும் இனங்கண்டு, எமது வளங்களை அறிந்து அவற்றினூடாக ஒரு சுயசார்புப் பொருண் மியத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமானால், சரியானதிட்டமிடலின்அவசியம்ஏற்படுகின்றது.
இந்த வகையில் வடதமிழீழத்துக்கான காலபோகப் பயிர்ச்செய்கைக் கருத்தரங்கு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் கிளிநொச்சியில் நடாத்தப்பட்டது. இதில் வடதமிழீழத்தில் பயிரிடவேண்டிய பயிர்களும், அவற்றின் விஸ்த்தீரணமும் எதிர்பார்க்கக்கூடிய விளைவுகளும், இவற்றுக்கான தேவைகளும் தீர்மானிக்கப்பட்டன. உண்மையில் இந்த இலக்குகளையும்விட,கூடுதலான பெறுபேறுகள் கிடைத்ததை அண்மைய ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.

### விவசாயத்துறையில்ஏற்பட்டவளர்ச்சி




இவ்வேளையில்,விவசாயப் பொருண்மியத்துறையில் ஏற்பட்ட மாற்றங்களை, வெளிக்கொணர்வது சிறப்புடையதாகும். மிகமுதன்மையான ஒரு அம்சமான காலபோக நெற்செய்கையை மட்டும் எடுத்து ஆராய்வோமாயின் எளிதாகப் பல உண்மைகளைஅவதானிக்கமுடியும்.

| காலபோகம் | பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு | பெற்ற விளைவு | ஒரு கெக்டரில் கிடைத்த சராசரி மெ.தொன் |
|---|---|---|---|
| | ஏக்கரில் | மெ.தொன் | |
| 1989-90 | 92244 | 108149 | 2.9 |
| 1990-91 | 75930 | 66728 | 2.1 |
| 1991-92 | 83725 | 105399 | 3.1 |
| 1992-93 | 90342 | 110908 | 3.03 |

மேற்படி அட்டவணையை அவதானித்தால், இவ்வட்டவணை காலபோகத்தில்,கடந்தநான்கு ஆண்டுகளில் வன்னியில் (இது கிளிநொச்சி, முல்லைத்தீவு,மன்னார், வவுனியா ஆகியவற்றை அடக்கியது.) நெல் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு, பெறப்பட்ட மொத்த விளைவு, ஒரு ஏக்கரின் விளைவுஆகியவற்றைக்காட்டுகின்றது.
1990.:1991 காலபோகத்தில் மிகக்குறைந்த நிலப்பரப்பில் மிகக்குறைந்த விளைவு பெறப்பட்டமை, ஒரு ஹெக்ட ருக்கான மிகக்குறைந்தவிளைவுகிடைத்தமைதெளிவாக உள்ளது. இந்தநிலை மாறி, தற்போது பயிரிடும் நிலப்பரப்பு ஏறத்தாழ 6000 ஹெக்டரினாலும், விளைவு 44 ஆயிரம் மெற்றிக்தொன்னாலும், ஒரு ஹெக்டருக்கான விளைவு ஒரு மெற்றிக் தொன்னாலும் அதிகரித்தது பெரிய ஒரு சாதனை எனக்கூறின்மிகையாகாது.
'கடந்தகாலங்களைவிடசிறுதானியச்செய்கையில் அதிகரிப்பு அவதானிக்கப்படுகின்றது. இது தங்குநிலைப் பொருண்மியத்தில் இருந்து விலகிச்சென்று சுயசார்புப் பொருண்மியத்தைத் தேடும்மாற்றத்தைக்காட்டுகின்றது.'

காலபோக நெற்செய்கை மட்டும்(முதன்மையான உணவுப்பொருள் என்ற காரணத்தால்,) ஆராயப்பட்டபோதும்,இதேபோன்று சிறுதானியச் செய்கை, மரக்கறிச்செய்கை ஆகியவற்றிலும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. இதேபோன்று சிறுபோக நெற்செய்கையும் கணிசமான பங்கைக்கொண்டுள்ளது.

### இலக்குகளும்பெறுபேறுகளும்1992–1993

காலபோகத் திட்டமிடல் கருத்தரங்கின் மூலம் முன்வைக்கப்பட்டஇலக்குகள்,எவ்வளவுதூரம் நிறைவேற்றப்பட்டன என்பதை ஆராய்வது பொருத்தமானதாகும். உண்மையில் முற்று முழுதாகப்புள்ளிவிபரங்கள் கிடைக்காதபோதும், எழுந்தமான எடுப்புக்களின் அடிப்படையில் சில இடங்களில் இலக்குகளைவிடக் கூடிய விளைவுகள் பெறப்பட்டமை நிரூபிக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சிக் கோட்டத்தில் 15,556 ஹெக்டரில் நெல்லும் 2,421 ஹெக்டரில் மேட்டுநிலப் பயிரும் செய்யப்படுவதாகத் திட்டமிடப்பட்டபோதும், இந்தஇலக்கு25,362ஹெக்டர்நெல்லாகவும்3232.5 ஹெக்டர் மேட்டுநிலப் பயிராகவும் அதிகரித்துள்ளது.

இது பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடவடிக்கைகளின் மூலம், பொருத்தமான உள்ளீடுகள் மற்றும் விவசாயத் தேவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு, மக்கள் கூடுதலாகத் தூண்டப்பட்டதைஎடுத்துக்காட்டுகின்றது.
இதேபோல, கடந்தகாலங்களைவிட சிறுதானியச் செய்கையில் அதிகரிப்பு அவதானிக்கப்படுகின்றது. இது தங்குநிலைப் பொருண்மியத்தில் இருந்து விலகிச்சென்று, சுயசார்புப் பொருண்மியத்தைத் தேடும் மனமாற்றத்தைக் காட்டுகின்றது.

### எதிர்காலம்

பொதுவாக விவசாயத்தை முதலாந்தரத் தொழிற்றுறையாகக்கொள்வர் பொருளியல் அறிஞர். முதலாந்தரத் தொழிற்றுறையான விவசாயம் தொடராக அபிவிருத்தியடைய, நாட்டுக்குத் தேவையான திட்டமிட்ட,நிலையான இரண்டாம், மூன்றாந்தரத் தொழிற்றுறைகள் அவசியமானதாகும். வேறு வகையாகச் சொன்னால், விவசாயத் துறையின் அடுத்த கட்டவளர்ச்சிக்காக விவசாய உற்பத்திகள் கைத்தொழிலாக்கம்பெறவேண்டும்.
விவசாயஉற்பத்திகள்பருவகாலத்துக்குரியவை. பருவத்தில் அதிக உற்பத்திகள் கிடைக்கின்றன. இவற்றைச் சேகரித்து, சந்தைப்படுத்தி, பதனிட்டு, வேறு உற்பத்திகளை உருவாக்கி, சேமித்து, சந்தைப்படுத்தக்கூடிய ஒரு நடைமுறை ஒழுங்கினைக்கொண்டதாக 2 ஆம், 3 ஆம் தரத் தொழிற்றுறைகள் தொடங்கப்பட்டேயாக வேண்டியஅவசியம்எழுந்துள்ளது.

திட்டமிட்ட நடைமுறை, ஊக்குவிப்புக்கள் ஆகியவை மூலம் பெரும் விளைவைப்பெற்று உற்சாகமடைந்துள்ள வேளையில் 2 ஆம் கட்ட தொழிற்றுறை, வளர்ச்சியடையாத காரணத்தால், தங்கள் உற்பத்திகளை சந்தைப்படுத்தமுடியாத நிலையில் விவசாயிகள் விரக்தியடைவதும்,



விவசாயச்சக்கரம் சுழலமுடியாமல் ஸ்தம்பிதமடையும் நிலை ஏற்படுவதும் தவிர்க்க முடியாததாகின்றது.
இந்நிலை ஆர்வத்தைக் குறைத்து உற்பத்திகளை எதிர்காலத்தில் வீழ்ச்சியடையச் செய்யக்கூடிய ஒரு நிலையை உருவாக்குகின்றது. இந்த நிலையைப்போக்க, தற்காலிகமாக சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதும்,



நிரந்தர நிலையான சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றன.
சற்றுப் பின்னோக்கிப் பார்த்தால், கடந்தகாலத்தில் நெல்லின் இரண்டாங்கட்ட வழிகள், மூன்று பாதைகளைக்கொண்டதாகஇருந்தன.
ஒருமட்ட விவசாயிகள், கொழும்புத் தேவைகருதி சம்பாநெல் வர்க்கங்களைப் பயிரிட்டு, கொழும்பில் சூடுபிடிக்கும் போது அதனை விற்றுப் பணம் சம்பாதித்தனர்.

இடைப்பட்ட ஒரு மட்டத்தினர், யாழ்ப்பாண ஆலை உரிமையாளர்களின் ஊக்குவிப்புடன், அவர்களுக்கு ஏற்ற நெல்லை உற்பத்தி செய்து வந்தனர்.
ஏனையோர் விலை வீழ்ச்சி ஏற்படும் போது, ஒருமட்ட விலையில் சந்தைப்படுத்தும் சபைக்கு நெல்லை வழங்கினர். இன்று இந்த மூன்று பாதைகளும்மூடப்பட்டுள்ளன.

இவ்வேளையில் நாம் இன்னமும் உற்பத்தியில் தன்னிறைவு பெறவில்லை. தன்னிறைவை விரைவில் பெறக்கூடிய முழுநம்பிக்கையும் தென்படுகின்றது.
தமிழீழத்தின் முழு நிலமும் எமது கட்டுப்பாட்டின்கீழ் வரும் போது, அரிசி தமிழீழப்பொருண்மியத்தின் முதன்மையான ஏற்றுமதி

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






**இன்றும்நாளையும்...**

பிரதேசத்தன்மைகளையும்,வளப்பரம்பலையும் கருத்திற்கொண்டதாக அது அமைதல்பொருத்தமானது.

அதனால்த்தான் 'அபிவிருத்திக்கான கூட்டுறவுவேலைத்திட்டம்'அடிமட்ட விவசாயிகள், முதியோர், பாடசாலை மாணவ மாணவியர் போன்றோர் பங்களித்துப் பயன்பெறக் கூடிய வகையில் எமது தமிழீழ விவசாயக் கொள்கைகள்அமைகின்றன.

வன்னிப்பகுதியில் உடைப்பெடுத்திருக்கும் குளங்களைப் புனரமைப்பதிலும், வீணே கடலிற் கலக்கும் ஆற்றுநீரைத் தேவைக்கேற்ப திசை திருப்புவதிலும், தரிசுக் காணிகளைத் திருத்திப் பயன்படுத்துவதிலும், நீர் தேங்கும்சேற்றுநிலங்களில்ஒழுங்கான வடிகால் அமைப்பினை ஏற்படுத்தி வெள்ள அழிவைக் கட்டுப்படுத்துவதிலும், இவ் வேலைத்திட்டம் வெற்றியளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எமது விவசாயிகளுக்கு, தமிழீழப் பரப்புப் பெறும் மழைநீரை சிக்கனமாக பயன்படுத்திக் கூடிய உற்பத்தியைச் செய்யப் பயிற்சியளித்தல் அவசியமாகிறது. குறைந்த உள்ளீட்டுச் செலவு, காலம், நிலப்பரப்பு என்பவற்றிற்கூடாக கூடிய விளைச்சலைத் தரக்கூடிய பயிரினங்களை அடையாளம் காண வேண்டியகட்டாயதேவையும்எம்மீது சுமத்தப்பட்டுள்ளது. இதற்காகப் பல நாடுகளிலிருந்து பல புதிய புதிய இனங்கள் பெறப்பட்டு பரீட்சார்த்தமாகப் பயிரிடப்பட்டு அவதானித்தலூடாக அவற்றின் விரிவாக்கநடைமுறைகள்ஆராயப்படுகின்றன.

இயற்கை மிருகக்கழிவுகளை உள்ளீடுகளாகப் பாவிப்பதன் ஊடாக, பல இலட்சம் ரூபாய்களை மீதமாக்க முடியும் என்ற நம்பிக்கை எம் மத்தியில் உறுதியாக ஏற்பட்டுள்ளது. இந்த நம்பிக்கையினை விவசாயிகள் மத்தியில் கட்டி எழுப்புவதற்காக பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் நிதியீட்டலுடனான விவசாயத்திட்டங்களில்இவ்உள்ளீடுகள்பரீட்சார்த்தமாகப் பாவிக்கப்பட்டுவருகின்றன.

தமிழீழப் பிரதேசத்தின் காலநிலையும், மண்வளமும், பழமரச் செய்கைக்கும் அதனோடு இணைந்த தேனீ வளர்ப்புக்கும் மிக மிகப் பொருத்தமானதாகஅமைந்துள்ளன.

'யாழ்ப்பாண மாம்பழம்' இந்த வார்த்தைகள் கொழும்புபுறக்கோட்டைச்சந்தையைக்கலக்கிய காலம் மறக்கக்கூடியதல்ல. யாழ்ப்பாண மாம்பழமும், சாவகச்சேரி, புதுக்குடியிருப்பு பலாப்பழமும், முழுங்காவில், நீர்வேலி வாழைப்பழங்களும் எமது பிரதேசத்திற்கு பணத்தைஅள்ளிவந்தசெல்வங்களாகும்.சுதந்திர தமிழீழத்திலும், இந்த பழமர உற்பத்திகள் அன்னியச்செலாவணியைஈட்டித்தரும்என்பதில் எமக்குஅசைக்கமுடியாதநம்பிக்கைஉள்ளது.

எனவே இடத்திற்கு ஏற்ற பழமரங்களைச் சிபார்சு செய்வதோடு, நல்லினப் பழமரங்களை உற்பத்தி செய்து வழங்குவது அவசியமானது எனும் கருத்தின் முதற்கட்டமாக, யாழ்ப்பாணத்தில் கோப்பாயிலுள்ள மேஜர் பிரதாப் செட்டி மாதிரி விவசாயப் பண்ணையில் நல்லினக் கனிமரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு மக்களிற்கு வினியோகிக்கப்பட்டுவருகின்றன.

**விவசாயம்சார்கைத்தொழில்**

தான் விவசாயத்துறை, விவசாயம் சார் கைத்தொழிற் துறையெனும் பரிணாமத்தைஎட்டுகிறது.

வட தமிழீழத்தில் ஆண்டு தோறும் 10,000 பேர் புதிதாக வேலையற்றவர்களாக வேலைப்படையினுள் பிரவேசிப்பதாக கல்வித் திணைக்களத் தகவல்கள் கூறுகின்றன. இன்றைய நிலையில் இவர்களை உள்வாங்கக் கூடிய பொருண்மியத்துறை விவசாயத்துறை மட்டுமே. எனினும் இத்துறையிலும் அடிப்படையிலேயே மூலவளங்கள் வரையறுக்கப்பட்டே உள்ளன. உதாரணமாக விவசாயம் செய்யும் நிலப்பரப்பு அதிகரிக்க மாட்டாது. எனவே பயிர்ச்செய்கை எனும் விடயத்தில் இவர்களை முற்றுமுழுதாக ஈடுபடுத்த இயலாது. எனவே விவசாயத்தின் அடுத்த படிநிலையான விலங்கு வேளாண்மைத்துறையும் விரிவுபடுத்தப்படல் வேண்டும்.

தமிழீழத்தைக் கட்டியெழுப்ப, இராணுவ ரீதிக்குச் சமாந்தரமாகப் பொருண்மிய ரீதியிலும் தமிழீழ மக்களாகியநாம்அனைவரும்போராட வேண்டும். இந்த நிலையினூடாக ஏற்படும் பாதுகாப்புத் தமிழீழ விவசாயிகளது தலைச்சுமைகளைப் பகிர்ந்து கொண்டு அவர்களுக்கு நம்பிக்கையினையும், உத்வேகத்தினையும் அளிக்க வேண்டும். அப்போதுதான், விவசாயி பற்றுணர்வுடன் தேசியத்துக்கான உற்பத்தியில்ஈடுபடுவான்.

இதனைச் சரியாகப் புரிந்து கொண்ட தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின்விவசாயப்பகுதியானது, தமிழீழ பொருண்மியத்தின் மேம்பாட்டிற்குஉறுதியானஅடித்தளம்ஒன்றினை அமைப்பதற்காக, தமிழீழ மக்களனைவரையும் ஒருங்கு திரட்டிக் கொண்டு தனது கால்களை உறுதியாகப் பதித்துக்கொள்கிறது.

> வதிவிடங்களை உச்சப் பயன்பாட்டில் கொண்டுவரவும், வருடம் முழுவதும் பயன்பெறவும், உற்பத்தி பெருகவும், மாற்றப்பட்ட வீட்டுத் தோட்டப் போட்டியின் வடிவமே, வதிவிட வேளாண்மைப் போட்டியாகும். கடந்த இரு வருடத்துள் 16000 பேர், வதிவிட வேளாண்மையைத் தொடங்கி உள்ளனர்.

வடதமிழீழத்தில், தற்போது பயன்தரும் மாமரங்களின் ஆண்டு அறுவடை 75,000 தொன் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இப்பிரதேச மக்களின் ஆண்டுக்கான மாம்பழத் தேவை30,000தொன்மட்டுமே.பலா,வாழைஆகிய பழங்களின் தரவுகளும் மேற்குறிப்பிட்ட நிலையினையே காட்டுகின்றன. இங்கே பழவகையில் நாம் மிகை உற்பத்தி நிலையிலிருப்பது புலனாகிறது. இம் மிகை உற்பத்தியானது ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். இன்றைய சூழலில் ஏற்றுமதி என்பது சாத்தியமில்லை.எனவேபதப்படுத்தும்முயற்சிகள் முன்னெடுக்கப்படுதல் அவசியம். இந்நிலையில்

## எதிரி திணித்த....

எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் காலத்திற்குக் காலம் நாம் பெரும் நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்கொண்டு வருகிறோம். பெரும் துன்ப துயரங்களுக்கும் முகம் கொடுத்து வருகிறோம். எமது மக்களின் உறுதிப்பாட்டை உடைத்து விட வேண்டும்என்றஒரேநோக்கில்,சிங்களப் பேரினவாதம் எமது மக்கள் மீது எண்ணற்ற கொடுமைகளை இழைத்து வருகிறது. பெரும் அநீதிகளைப் புரிந்து வருகிறது. இந்தக் கொடூரமான அடக்கு முறைகளை எல்லாம் மிகவும் துணிவுடனும்தளராதஉறுதியுடனும் வியக்கத்தக்க முறையிலும் எமது மக்கள் எதிர்கொண்டு வந்திருக்கிறார்கள்.

கடந்த நான்கு ஆண்டுகளாகத் தமிழீழத் தேசம் மீது ஒரு திட்டமிட்ட பொருண்மியத் தடையைச் சிங்கள அரசு திணித்துவருகிறது. தமிழீழ மக்களின் பொருண்மிய வாழ்வைச் சீர்குலைக்கும்நோக்கில் இத்தடைகள் விதிக்கப்பட்டன. தமிழினம் தனது காலில் தனித்து வாழ முடியாது. சிங்களத் தேசத்தில் தங்கிவாழ வேண்டும் என்ற நோக்கிலும் இந்தப்பொருண்மியப் போர் தொடுக்கப்பட்டது.

இந்தப் பொருண்மியத் தடை எமது மக்களின் வாழ்நிலையில் என்றுமில்லாத பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது என்பது உண்மை. போர் அனர்த்தங்களுடன் பொருண்மிய அழுத்தங்களுமாக எமது மக்கள் தாங்கொணாச் சுமைகளைத்தாங்கிநிற்கநிர்ப்பந்திக்கப்பட்டனர்.

எனினும் இந்தப் பெரும் பளுவின் விளைவாக எமது மக்கள்மத்தியில் ஒரு புதியவிழிப்புணர்வும் ஏற்படத் தவறவில்லை. தடைகளால் விளைந்த பாதிப்பும் அதனால் எழுந்த அந்தப் பற்றாக்குறையும்இந்தப்பற்றாக்குறையாற்பிறந்த தேவைகளுமாக ஒட்டுமொத்தத்தில் சுயசார்புப் பொருண்மியத்தின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் எமது மக்களுக்கு நன்கு உணர்த்தியது. அந்நியனின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து போகாது எமத மண்ணில், எமது மண்ணின் வளத்தில் நாம் தங்கி நிற்க வேண்டும் என்றதேவைகளையும்உணர்த்தியது.

இந்த விழிப்புணர்வு எமது மக்களின உழைப்பாற்றலை முனைப்புறச் செய்தது. உழைக்கும் மக்களின் உதிரத்தால் உரமூட்டப்பட்டு எமது தேசிய பொருண்மிய வாழ்வு என்றுமில்லாத மறுமலர்ச்சி கண்டது. நெல் உற்பத்தி,பனைவளஉற்பத்தி,கடல்வளஉற்பத்தி, கைத்தொழில் உற்பத்தியாக இன்று பல்வேறு துறைகளில் உள்ளூர் உற்பத்தி உயர்ச்சி கண்டு வருகிறது. எமது மக்களின் அயராத உழைப்பிற்கும் தளராத உறுதிக்கும் சான்றாக இன்று எமது தேசிய பொருண்மியம் தனது சொந்தக் கால்களில் எழுந்து நிற்க முனைகிறது. எதிரி திணித்துவிட்ட பொருண்மியத் தடைகள் எமது தேசத்தை முடக்கிவிடவில்லை. பதிலாக, எமது தேசத்தின் பொருளுற்பத்தியை முடுக்கிவிட்டிருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

எமது தன்னாட்சி உரிமைப் போராட்டம் தமிழீழத் தனியரசைநிறுவும்இலட்சியத்தைக்கொண்டது. இந்தத் தனியரசை நிர்மாணிப்பதற்கு ஒரு தன்னிறைவான பொருண்மியக் கட்டமைப்பு அவசியம்.எனவேதான் அரசியல் விடுதலை என்ற எமது குறிக்கோளுடன் பொருண்மிய விடுதலையும் ஒன்றிணைந்து நிற்கிறது. நாம் நிர்மாணிக்கப்போகும் நாடு தங்கு நிலையற்றதாக தன்காலில்தரித்துநின்றுவளர்ச்சிபெறக்கூடியதாக அமையப் பெறவேண்டும். அதற்கான அத்திவாரத்தை நாம் இப்பொழுதிருந்தே கட்டியெழுப்பவேண்டும்.

வேளாண்மையும் கைத்தொழிலுமே பொருண்மியக் கட்டுமானத்திற்கு அடித்தளமானது. இந்த இரு துறைகளையும் கட்டி வளர்ப்பதில் நாம் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். இந்த இலக்கில் எமது அமைப்பான 'தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்' ஆக்கபூர்வமான பல வேலைத்திட்டங்களைச் செயற்படுத்திவருகிறது.இந்தமுயற்சிகள்வெற்றி பெறஎனதுஆசிகள்.

உழைக்கும்மக்களைஊக்கப்படுத்திஅவர்களின் ஒத்துழைப்போடு உற்பத்தியைப் பெருக்கும் முயற்சிகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு முக்கிய அம்சமாக வேளாண்மைத் துறையிலும் போட்டியை நிகழ்த்தி 1993–1994 ஆம் ஆண்டிற்கான 'வேளாண் மன்னர்'களைத் தெரிவு செய்திருக்கிறது. எமது தாயக மண்ணில் பொன்விளைவித்து அபாரமான சாதனை ஈட்டிய உழவர்களுக்கு 'வேளாண் மன்னர்' விருதுகளைவழங்கிக்கௌரவிப்பதிற் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

## வளர்ச்சிபெற்றுவரும்...

களில் (அடுத்தது கடல் உற்பத்திகள்) ஒன்றாக அமையும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. அதேவேளை கிடைத்த விளைவை சந்தைப்படுத்த முடியாத ஒரு நிலையும் ஏற்படுகின்றது. இதனாலும் தன்னிறைவுக்கான பாதையிலே ஒரு பெரிய முட்டுக்கட்டைஏற்பட்டுள்ளது.

இவற்றுக்கானநிரந்தரவழியாக2ஆம்,3ஆம் கட்டத் தொழிற்றுறைகளை வளர்த்தெடுத்தலே, இன்றைய அவசியத் தேவையாக உள்ளது. இதனால் இன்றைய விவசாயப் பொருண்மியமானது,கைத்தொழில் மயமாக்கத்தை நோக்கியதாக அமையவேண்டிய ஒரு தேவையும்ஏற்பட்டுள்ளது.

www.tamilarangam.net



விவசாயச் சிறப்பிதழ்

# நீர்த் தாழைகள்

நீர்த்தாழை தன்னளவில் வேறும் பல பயன்களைத் தரவல்லது. இதை இலாபகரமான வகையில் பயன்படுத்தமுடியும்.சதுப்புநிலத்துநீர்த்தாழைகளினால் கூடியபயனைப்பெறமுடியும். இச்சூழலில் மீன் குஞ்சுகள், இறால்கள் வளர்ப்புக்குரியகேந்திரநிலையங்களாக மாற்றப்படலாம்.

நீர்த்தாழைகள் முதன்மையாக மண்டிக்குவியும் கடனீரேரிகளைச் சூழ்ந்தும் சதுப்பு நிலங்களிலும் காணப்படுகின்றன. நீர்த்தாழைகள் கரையோரப் பகுதிகளில் வாழ்பவர்களுக்குப் புதியனவல்ல. இலங்கையில் உள்ள நீர்த்தாழைகளின் மொத்தப்பரப்பளவு உறுதியாகத் தெரியவில்லை. எனினும் தனிநபர் ஆய்வின்படி ஏறத்தாழ 8000 இற்கும் 10000 இற்கும் இடைப்பட்ட ஏக்கரில் நீர்த்தாழைகள் உண்டென்று கணக்கிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் கடனீரேரியைச் சூழ்ந்த பகுதியான செம்பியன்பற்று, முல்லைத்தீவு, திருகோணமலை, கதிரவெளி, வாகரை, பனிச்சங்கேணி,வாழைச்சேனை, காரைதீவு, கோமாரி, பொத்துவில்,கின்தோட்டை,பிட்டிபன, புத்தளம், முகத்துவாரம், முத்துரஜவல என்பன நீர்த்தாழைகள் இனங்கள் பரவியுள்ள முதன்மைத்தானங்களாகும். ஆசியப்பிரதேசத்தில் இந்தியாவுடனும் மலேசியாவுடனும் ஒப்பிடும்போது, இங்குள்ள நீர்த்தாழை வகைகள் சிறப்பாக விருத்தியடையவில்லைஎன்றேகூறலாம்.

நீர்த்தாழைகளில் காணப்படும் தானின் காரணமாக இவற்றில் இருந்து பெறப்படும் மரம், பூச்சிகளின் தாக்குதலைத் தவிர்க்கும் தடைத்திறன் பெற்றவையாகக் காணப்படுகின்றன. எனவே நீண்டகாலத்திற்கு நின்று நிலைக்கக்கூடிய தளபாடங்களை இம்மரத்தினின்று தயாரிக்க முடியும். நீர்த்தாழை இனங்கள் யாவற்றிலும் நீண்டகாலம் நின்று நிலைக்கக்கூடியது.

உலகில் நீர்த்தாழை வகைகள் பற்பல இருந்தபோதிலும், இவற்றுள் 28 இனங்கள் இலங்கையில் இனங்காட்டப்பட்டுள்ளன. இருந்தும் அண்மைக் காலம்வரை இப்பிரதேசங்கள் தரிசுநிலங்களாகக் கருதப்பட்டு, பயிர்ச் செய்கைக்கும் குடியேற்றங்களுக்குமென நிலம் மீட்கப்பட்டது. எனினும் இன்று நீர்த்தாழைகள் சூழற்றொகுதி, உலகின் உயர்ந்த உற்பத்தியுள்ள சூழற்றொகுதிகளாகக் கருதப்படுகின்றது. இவை ஊட்டச்சத்துக்களை உருவாக்கி, நாள் தோறும் கடனீரேரிகளை வளப்படுத்துகின்றனஎன்றுகூறப்படுகின்றது.

## ஏனையபயன்பாடுகள்

நீர்த்தாழை தன்னளவில் வேறும் பல பயன்களைத் தரவல்லது. இதை இலாபகரமான வகையில் பயன்படுத்தமுடியும். சதுப்புநிலத்து நீர்த்தாழைகளினால் கூடிய பயனைப்பெறமுடியும். இச்சூழலில் மீன் குஞ்சுகள், இறால்கள் வளர்ப்புக்குரிய கேந்திர நிலையங்களாக மாற்றப்படலாம். இத்தகைய நீர்த்தாழைச் சதுப்பு நிலங்கள், தென்கிழக்காசியாவின் சில பகுதிகளில் ஏற்கனவே வர்த்தகத் தேவைகளுக்காக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.இத்தகையசதுப்புநிலத்தைச்சுற்றியுள்ள சாதாழை விளிம்பைத் தவிர்த்து, குறிப்பிட்ட தடாகங்களை அமைக்கும்போது சதுப்புநிலம் முற்றாக வெளியாக்கப்படுகிறது.ஏனெனில்இது கடலலைகளினால் ஏற்படக்கூடிய அழிவினின்று, தடாகத்தைப் பாதுகாக்க வல்லது. தாங்குவேர்களினாலும் மூச்சுவேர்களினாலும் ஏற்படுத்தப்படும் ஒன்றிணைப்பு அணைகள் அரிப்பைப் பெருமளவில் குறைப்பதற்கும் உதவுகின்றது.

## அடையாளங்காணல்

இலங்கையில் 28 நீர்த்தாழை இனங்கள் மட்டுமே காணப்படுவதால், சூழற்றொகுதிகளிலுள்ள இத்தாவரங்களை அடையாளங்காண்பது சுலபம். தாவரங்களுக்கும் நீர்வாழ் உயிரிகளுக்குமிடையே ஏற்படும் தொடர்பு, சூழலியலாளருக்குச் சிறந்த தளமாக அமையலாம். இதுதவிர அவற்றின் இனங்களுக்கும் தன்மைகளுக்கும் இணங்க, நீர்த்தாழைகள் பல்வேறுவழிகளில்பயன்படுத்தப்படலாம்.

## மரக்கரி

வேர்தாங்கி (Rhizophora) புறுகைறா (Brugaiera) என்பன மரக்கரி தயாரிப்பிற்குப் பயன்படுத்தப்படலாம். சீரியொப் (Ceriops) கூட மலேசியாவில் மரக்கரி செய்வதற்கு உபயோகிக்கப்பட்டுள்ளது. எனவே எரிபொருள் தட்டுப்பாடுள்ள இக்காலகட்டத்தில், மற்றுமொரு எரிசக்தி மூலமாக நீர்த்தாழைகள் அமையமுடியும். இவை மலேசியாவில் வர்த்தக அடிப்படையில் பயன்படுத்தப்படுகின்றன. இங்கு இது தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. எக்சோகேறியா அக்கலோச்சா (ExcoecariaAggalocha) வெளிப்படுத்தும் விரும்பத்தகாகத புகைகாரணமாக மரக்கரி தயாரிப்பதற்கு இது பொருத்தமுடையதல்ல எனலாம். எனினும் ஆராய்ச்சிகளின் உதவியுடன் இவ்வினத்தையும் மரக்கரி தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுவது எதிர்காலத்தில் சாத்தியப்படலாம்.

## உறுதிப்பாடு

நீர்த்தாழைகளில் காணப்படும் தானின் காரணமாக இவற்றில் இருந்து பெறப்படும்மரம், பூச்சிகளின் தாக்குதலைத் தவிர்க்கும் தடைத்திறன் பெற்றவையாகக் காணப்படுகின்றன. எனவே நீண்டகாலத்திற்கு நின்று நிலைக்கக்கூடிய தளபாடங்களை இம்மரத்தினின்று தயாரிக்கமுடியும். நீர்த்தாழை இனங்கள் யாவற்றிலும் நீண்டகாலம் நின்றுநிலைக்கக்கூடியது சீரியொப் இனத்தாழைகளேயாம். வீடுகள் அமைப்பதற்கும் புகையிரதத்தண்டவாளம், மட்டக்கட்டைகள், கருவிகளுக்கான பிடிகள் போன்றவற்றைத் தயாரிப்பதற்கும் உகந்தவை. வேர்தாங்கி புறுகைறா ஆகிய இவைகள், சீரியொப் இனத்தைப்போன்றுஉறுதிப்பாடு வாய்ந்தனவல்ல. எனினும் இவையும் வீடமைத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறைந்தளவு உறுதிப்பாடு தேவைப்படும் பொருட்களை அமைப்பதற்கு இவை சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றன.

லும்னிற்செரா (Lumnitzera), பெம்சிஸ் (Pemphis),அசிடியூலா (Acidula) சீரியொப் இனத்தைப்போன்று உறுதிப்பாடுடையன அல்ல. எனினும்பாலங்கள்அமைப்பதற்கும்கப்பற்றுறைக் கட்டிடங்களை அமைப்பதற்கும், கம்பங்கள், நங்கூர இணைப்புக்கள் போன்றவற்றைத் தயாரிக்கப்போதுமானதாகும். லும்னிற்சொரா ஆழிக்குடைப்பூச்சிகளை எதிர்த்துநிற்கும் தடைத்திறனை ஓரளவு பெற்றுள்ளது. உறுதிவாய்ந்த கெரிற்றியேரா லிட்டோராலிஸ் (HritieraLittoralis) இது வீட்டிற்கான தூண்கள், தந்திக்கம்பங்கள, படகுப்பாய்மரங்கள், வள்ளங்கள் ஆகியவற்றிற்குப் பயன்படும் பலகைகள் போன்றவற்றைத் தயாரிக்க உபயோகப்படுத்தலாம். இதன் லேசான தன்மைகருதி டொலிச்சன்ட்றீன்ஸ் தபகீஸ் (Dolichandrene Spathaccs) ஜாவாநாட்டு மீனவர்கள் தமது வலைகளுக்கான மிதப்புக்களாகப் பயன்படுத்துகின்றனர். பிலிப்பைன்ஸ் நாட்டில் மிதியடி (பாதணி) தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

## போத்தல்தக்கைகள்

மலைவேம்பைக்கொண்ட தன்மையுடைய சைலோகாரபஸ் மொல்யூகென்சிஸ் (Xylocarpus Moluocensis) உயர்தரம்கொண்ட தளபாடங்கள் தயாரிப்பதற்கும்பில்லியற்கோல்கள்தயாரிப்பதற்கும் மிக்பொருத்தமானது. இந்தியாவின் சொனரெட்டியா (Sonnetetia) இனத்தின் மூச்சுவேர்கள் போத்தல் தக்கைகள் செய்வதற்கு சேகரிக்கப்படுகின்றன.

## பிறபயன்கள்

வேர்தாங்கி இனங்களே தானியனைத் தயார்செய்வதில் சிறந்தவை. சீரியொப் புறுகைறா வகைகளும் கணிசமான அளவில் தானின் தயாரிப்பன. ஆகவே பலவகையான சாயங்களைத் தயாரிப்பதற்கு இந்த இனங்கள் பயன்படுத்தப்படலாம். தோல்களைத் தாவரப் பொருட்பட்டைகளினால் பதனிடுவதற்கும் இவற்றைப் பயன்படுத்தலாம். சரியான பிரித்தெடுக்கையின் மூலம் இந்நீர்த்தாழை வகைகளில்இருந்து'கச்'உற்பத்திசெய்யமுடியும். இந்தியாவிலும்சிலஆசியநாடுகளிலும்நீர்த்தாழைத் தானின்கள், மீன்வலைப் பேணிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் ஒட்டுப்பலகை ஒட்டிகள்,காட்போர்ட்தயாரிப்பு,புடவைச்சாயங்கள் உற்பத்தி மற்றும் வேறு தேவைகளுக்குப் பயன்படுகின்றது. அடர்சேற்று நிலங்கள் பயனற்ற பாழ்நிலம் என்று கருதாமல், நீர்த்தாழைகளின் உபயோகத்தைப் பயன்படுத்தவேண்டும். நாம் எக்கோணத்தில் பார்த்தபோதும் நீர்த்தாழைகளும் அவற்றின் அடர்சேறும் பயனற்ற பாழ்நிலங்கள் என்று கருதப்படவேண்டியனவல்ல. நீர்த்தாழைகள்தாராளமாகக்கிடைப்பதினால்,ஆர்வமிக்க ஒரு முயற்சியாளர் நீர்த்தாழைகளை மிகலாபகரமாகப் பயன்படுத்தமுடியும்.

நிபா ப்ருட்டிகன்ஸ் (Nypa Fruticans) மிகப்பயனுள்ள நீர்த்தாழைத் தாவரங்களுள் ஒன்றாகும். எனினும் இது மிகச்சிறிய அளவே பயன்படுத்தப்படுகின்றது.எடுத்துக்காட்டாக இது மலேசியாவில் பெரியளவில் பயிரிடப்பட்டு, அதிகளவில் நன்மையடையக்கூடியதாக இருக்கின்றது. இதிலிருந்து குடைகள், வெயிற் தொப்பிகள், மழைக்கோட்டுக்கள், சொரசொரப்பான உடைகள், பாய்கள், பைகள்போன்றவற்றைஇழைப்பதற்கு இதன் இலைகள் பயன்படுத்தப்படுகின்றன. பீடி செய்வதுபோன்று புகைத்தல் பொருளுக்கு இதன் துளிர்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த இலைகளைக் கடலில் மிதக்க விடுவதன்மூலம், மீன்கள் கவரப்படுவதனால், மீன்பிடிற்றொழில் எளிதாகின்றது. எனவே கவனிப்பாரற்றுக் காணப்படும் நீர்த்தாழைகளை இனங்கண்டுபயன்பெறலாம்.

## மருத்துப்பயன்கள்

நீர்த்தாழைகளில் சில மூலிகைகளாகப் பயன்படுகின்றன. முள்ளி (Acanth-usilicitalius) இலைகளும் வேர்களும் தலைமயிர் வளர்ச்சிக்கு (சம்பூ) பயன்படுகின்றன. இடித்து மாவாக்கப்பட்ட விதைகள், கொப்பளங்களுக்கு மருந்தாகப் பயன்படுகின்றது. புறுகைறோ இனங்களின் பழங்கள் வயிற்றோட்டம், வயிற்றுளைவு போன்றவற்றைக் கட்டுப்படுத்தும். (Corbera) இனங்களின் விதைகளிலிருந்து பெறப்படும் எண்ணெய் சிரங்கு. சலதோசம், ஆகியவற்றிற்கு நிவாரணியாகவும் இதன்பட்டைகள் பேதிமருந்தாகவும்பயன்படுகின்றன.

சொனரோட்டியா, கசோலேரிஸ், எக்சோகேறியா, அக்கலோச்சா அவிசீனியா, மீனா ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட கூழிலிருந்து யப்பானிய நிறுவனங்கள், புடவைத் தயாரிப்புக்கு வேண்டிய சொலொ:பன், ரெயோன் ஆகியவற்றை வெற்றிகரமாக உற்பத்திசெய்துள்ளன.

நீர்த்தாழைச் சூழலில் உண்ணத்தக்கதாயுள்ள சிப்பியினம் உற்பத்தியைப் பெருக்கமுடியும். கூடநீர் தேங்கிநிற்கும் சேற்றுப் பிரதேசங்களில்கிரசொற்றியாகுருலற்றா (Crossostrea Cucullate) சிப்பி வேர்தாங்கி இனங்களினதும் கொளோய்னா கூக்சன்ஸ் (Coloina Cooxans) மட்டி வேர்களில் காணப்படுகின்றது. மெரேட்றிக்ஸ் கஸ்டா (Meretrix Casta) என்பது நீர்த்தாழைக் கூட்டங்களை அண்மியுள்ள மணற்கடனீரேரிகளின் அடியில் பருவகாலங்களில் காணப்படும் சிப்பி உயிரினமாகும். இவை சுண்ணாம்புத் தயாரிப்பிற்குப்பயன்படும் சிப்பிகளாகும். இவைகள் தாழைநீர்ச் சேர்க்கையில் விளைகின்றன.

நீர்த்தாழைச் சிப்பிகளை வளர்க்கக்கூடிய சாத்தியக்கூறுகளை ஆராய்வதில்சியராலியோன்,கியூபா,போட்டோரிகா ஆகிய நாடுகளில் வெற்றிகரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஜாவாவிலும் மலேசியாவிலும் நீர்த்தாழைச் சூழலில் நண்டும் பாலை மீன்களும்நன்குவளர்க்கப்படுகின்றன. எனவே தாழை வளர்ப்பை ஊக்குவிப்பதன் மூலம் இரட்டிப்புப் பலனைப்பெறலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




சிறுகதை

# எதிர்கொள்ளல்



-இணுவையூர்-
சிதம்பர திருச்செந்திநாதன்

முழுநிலவின் வெண்ணொளி கண்ணு க்கெட்டிய தூரம் வரை வியாபித்திருந்தது நீண்டுவிரிந்திருந்த வயல்வெளியெங்கும்வெறுமை.

பூவரச மரங்கள் சுமந்து நின்ற துலாக்கள் பயம் காட்டின. எல்லையோரத்தில் விழி இமைக்காது காவல்காக்கும்இளம்போராளிகள்போல தூரத்தில் பனை மரங்கள் இருள் மதில் கட்டியிருந்தன.

அறுவடை முடிந்திருந்த வயல்கள் பொன்னையாவிற்கு ஏக்கத்தினை ஏற்படுத்தி யிருந்தன. நெல் அறுவடை முடிந்த பின்னர் இந்த வயல்களை ஏன் இப்படி வெறுமையாக விட்டிரு க்கின்றார்கள்?

ஒரு சிலர்தான் மீண்டும் ஏதாவது பயிர் செய்யமுனைந்திருந்தனர். ஏனையோர் மதகுகளில் குந்தியிருந்து வம்பு பேசத்தொடங்கியிருக்க வேண்டும்.

வெகுகாலத்திற்கு முன்னர் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க இந்தியா வருமா வராதா என்று கதைத்தார்கள். இப்போது...

மாரி காலத்தில் சல சலத்து ஓடும் வழுக்கியாறு இப்போ மடி வற்றிப் போயிருந்தது. அதன் செழிப்பும், நளினமும், கனிவும் காணாமற் போயிருந்தன.

ஆற்றிற்குஅப்பால்வயல்வெளிகளைத் தாண்டி பனைகளுக்கு மத்தியில் புதிதாய்முளைத்திருந்த பொன்னையா வின் சிறு குடிலில் குப்பி விளக்கொன்று துடித்துக்கொண்டிருந்தது.

சொந்த இடத்தை விட்டு இடம் பெயர்ந்து வந்தது ஒரு கனவு போலத்தான் நடந்தது. வாழ்வு தந்த தோட்டம்: ஆறுதல் தரும் சொந்த வீடு எல்லாவற்றையும் விட்டு விட்டு ஓடி வந்து இந்தப் பனை வளவுக்குள் குடி புகுந்தாயிற்று.

அகப்பட்டதைக் கொண்டு கொட்டில் போட்டுநான்குபிள்ளைகளும்அவனும் மனைவியுமாக புதிய வாழ்க்கையை எதிர்கொள்ளத்தயாரானார்கள்.

கையிலிருந்த எச்ச சொச்சங்கள் சில மாதங்கள் கஞ்சிக்கு வழி சொன்னன. மண்வெட்டி பிடித்துப்பிடித்து கன்றிச் சிவந்துகாய்ந்தகைகள்உழைப்பினை த்தேடிப்பரபரத்தன.

எனினும் குடியிருக்கத் தான் நிலம் கிடைத்தது.கொத்திப்புரட்டிப்பயிர்செய்யநிலம்?

சொந்தக் கிராமங்களை விட்டு இடம் பெயர்ந்தவர்கள் நிவாரணங்களை மட்டும் நம்பிக்கொண்டிருக்கையில் பொன்னையா மட்டும் மாதம் எத்தனை தடவை நிவாரணம் கிடைக்கும்என்று அலையாமல்பயிர் செய்யநிலம் தேடினான்.

இராணுவத்தால்ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்கள் போல பற்றைக் காடுகள் மண்டிக் கிடந்த எத்தனையோ வளவுகள் வளவுக்காரர்களின் பெருமை மிகு மனங்களால் யாருக்கும் பயன்படாமல் கிடந்தது போலவே பொன்னையா வுக்கும்பயன்படவில்லை.

பொன்னையா நிலம் கேட்ட பின்னரே தாங்களும் தோட்டம்செய்யப்போவதாகப்பாவனைபண்ணிக் கொண்டு ஆள்வைத்து வளவுகளைத் துப்பரவு செய்யத்தொடங்கினார்கள்பலர்.

பொன்னையா தலை நிமிர்ந்து வானத்தைப் பார்த்தான். அழகு மயமான வானத்தில் நட்சத்திரங்கள்புன்னகைத்தன.

வயல் வெளிக்கூடாக சண்டிலிப்பாய் சந்திக்கு வளைந்து வளைந்து செல்லும் பாதையூடாக மாட்டுவண்டிஒன்றுசென்றுகொண்டிருந்தது. இனிமை மிகு அந்த நள்ளிரவில் அந்த வண்டில் மாடுகளிலிருந்து பிறந்த நாதம் செவிக்கு இதமாக இருந்தது.

வழுக்கியாற்றோடு தொட்டுக்கொண்டு சென்ற அந்த வயற்துண்டு இப்போது பொன்னையாவை வாவாஎன்றுஅழைப்பதுபோலிருந்தது.

எத்தனையோ கஸ்டங்களுக்கு மத்தியில் கணபதிப்பிள்ளையிடமிருந்து அந்த வயலைத் தற்காலிகமாகப் பயிர் செய்கை செய்ய ஒப்புதல் பெற்றான்.

அடுத்த வயல் விதைப்பிற்கு முன்னர் காணியை அவரிடம் மீண்டும் ஒப்படைக்க வேண்டும் என்பதற்கும்சம்மதம்தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பக்கத்தில் வயல் செய்யும் அனேகமானோர் போலவே கணபதிப்பிள்ளையும் வசதியான வர்தான்.

தங்களது பாரம்பரியக் காணிகளில் உரிமையை நிலைநாட்ட மட்டும் வயல் செய்து கொண்டு ஏனைய காலங்களில் எதைப்பற்றியும் அக்கறை காட்டாமல் 'சிங்கள அரசாங்கம் ஒண்டையும் அனுப்பாட்டி இஞ்சே உள்ளவ என்ன செய்யிறது' என்றுதனக்குள்கதைத்துகாலம்கழிப்பார்கள்.

பொருண்மியத்தடை வந்து என்ன பொருட்கள் தடைப்பட்டும் என்ன அவர்களில் பலர் மாறவில்லை.

யாருடையநல்லகாலமோகணபதிப்பிள்ளைபெரிய மனதுடன் தற்காலிகமாகத் தனது காணியைப் பயிர்செய்யக்கொடுத்தார்.

அக்கம் பக்கத்து வயற்காரர்கள் கணப திப்பிள்ளையை விரோதமாகவும் பொன்னை யாவை வினோதமாகவும் பார்த்துக் கொண்டார்கள். பின்னர் தான் புரிந்தது மழையை மட்டும் நம்பியிருக்கும் கணபதிப்பிள்ளையின் வயலில் ஏனைய வயல்களைப் போல கிணறு இல்லை.

உற்சாகத்துடன் எழுந்த மனம் வெடித்து சிதறும் நிலைஅடைந்தது மனம்பரபரக்கஅந்தவயலைச் சுற்றிச் சுற்றிப் பல தடவை நடந்தான். பயிர் செய்வதாயின்தண்ணீருக்குஎங்கேபோவது?

அக்கம் பக்கத்து வயல்களில் கிணறுகள் இருக்கின்றன. அவற்றுள் தண்ணீரும் உண்டு ஆனால்கிடைக்குமா?

நிலமே தர மறுத்தவர்கள் தண்ணீர் தருவார்களா? ஆண்டாண்டு காலமாக அன்னியரிடம் மொத்தமாக அடிமைகளாக வாழ்ந்து கொண்டு தங்கள் தங்கள் வளவுகளை சுதந்திர கோட்டைகளாகக் கருதி பக்கத்து வளவு க்காரரின் நிழல் கூட படவிடாதவர்கள் எப்படி உதவி செய்வார்கள்?

'இப்படியே இருந்தால் என்னப்பா செய்யிறது' என்று இயலாமையுடன் கேட்கும் மனைவியை அவன் சோகம் ததும்பும் விழிகளுடன் பார்த்தான். அடுத்த வேளைக்கு என்ன செய்வது என்று தெரியாத நிலையில் அவள் என்னசெய்வாள்.

பதில் சொல்ல வார்த்தைகள் வரவில்லை. அவளுக்கு எதைச் சொல்வது? எப்படிச் சொல்வது? என்றாலும் நம்பிக்கை இழக்கவில்லை.ஒன்றுக்கும்வழியில்லாவிட்டால் விறகாவதுகட்டி இழுக்கலாம்தான்.

அவனுக்குதெரியும்உள்ள எல்லாவற்றையும்விட அவன்நம்பும்மண்அவனைக்கைவிடாது.

எத்தனையோ தலை முறையாக தன்னகத்தே வாழ்பவர்களை வாழவைத்து வரும் மண் ஒரு போதும் கைவிடாது என அவன் மனம் சொன்னது.

புளுதி மணலில் விளையாடிய பிள்ளைகளைப் பார்த்தான்.நாளை இந்தப்பிள்ளைகளுக்கும்இந்த மண்தான்எல்லாமே.

அந்நிய தேசங்களுக்குச் சென்றவர்களுக்கு அந்த மண் உதவலாம். ஆனால் இந்த மண்ணில் இருப்பவர்களுக்கு இந்த மண்ணை விட்டால் வேறு என்ன வழி? இருந்த இடத்தை விட்டு பொன்னையா எழுந்தான் வெற்றுடம்பு இரவுக் காற்றால்சற்றுக்குளிர்ந்தது.

தான்பயிர்செய்யஉள்ளவயலையும்வெறுமையாய் வளைந்து வளைந்து சென்ற வழுக்கி ஆற்றையும்பார்த்தான்.

வரம்பினை விட்டு வழுக்கியாற்றில் இறங்கினான். சமனற்றுக்கிடந்ததரை கால்களைச்சித்திரவதை செய்தது.

மாரி காலத்தில் தண்ணீரால் போர்த்தி இருக்கும்ஆற்றிற்கு இப்போது என்ன நடந்தது.

'ஆறே ஏன் வரண்டு போனாய் – நீ மீண்டும் வரம்பை அரித்துக்கொண்டு பாயத் தொடங்கினால் நான் பயிர் செய்யலாமே என்று மனதுக்குள் கேட்டான்.

அடி வானத்தில் மின்னல் ஒன்று ஓடி மறைந்தது. பொன்னையாவின் மனத்திலும்ஒருஎண்ணம்!

விரைவாக வீட்டுக்குப் போனான். பிள்ளைகள் ஆழ்ந்த நித்திரையில் இருக்க மனைவி குப்பி விளக்கில் கிழிந்த சேலையைத் தைத்துக் கொண்டிருந்தாள்.

'என்னப்பா..'என்றாள்அவள்.

'ஒண்டுமில்லை'

'இந்த நேரத்தில அங்கை என்ன செய்யிறியள்' என்று கேள்வியைத் தொடங்கினாள்.

'ஒண்டுமில்லை. ஒரு சின்ன அலுவல்' என்றபடி கொட்டில்கரையோரம்கிடந்த மண்வெட்டியைத் தூக்கிக் கொண்டு நடந்தான்.

நிமிர்ந்து வானத்தைப் பார்த்துவிட்டு வழுக்கியாற்றின் ஒரு இடத்தை வெட்டத்தொடங்கினான்.

உடலில் வியர்வை கசியத் தொடங்கி யது.வானத்து நட்சத்திரங்கள் போல அந்த வியர்வைத் துளிகள் பூக்கத் தொடங்கின. நிலவொளியில் அவை முத்துக்களாகப்பிரகாசித்தன.

அமைதி கொலுவிருந்த அந்த இரவில் அவன் வழுக்கியாற்றினை வெட்டும் சத்தம்மாத்திரம்சீரான தாளலயத்துடன் கேட்டது.

இதுவரை காலமும் நெஞ்சை அழுத்திக் கொண்டிருந்த பாரம் இலேசாகி வருவதைப் போன்ற உணர்வு பொன்னையாவுக்கு ஏற்பட்டது.

வெட்டி வெட்டி மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டு இருக்கும் போது வெட்டும் சத்தத்தில் வித்தியாசம் ஏற்படுவதையும், கால்களுக்கு இடையில் அகப்படும் மண்ணில் ஈரக்கசிவு உண்டாவதையும் கண்டான்.அவன் கண்களில் கண்ணீர் முளைவிட்டது.

நிலவு அடி வானத்திற்கு சரிந்திருந்தது. புன்னகைத்திருந்த நட்சத்திரங்கள் கரைந்துபோயிருந்தன.காலைபுலரும் ஆரவாரங்களை பறவைகள் மெருகூட்டின. இலேசாக குங்குமம் சிந்தினாற்போல் வானத்தின் கிழக்குக் கோடி இருந்த அதேவேளையில் பொன்னையாகளைத்திருந்தான்.

மனம் வெகு உற்சாகமாக இருந்தது. எதிர்பார்த்ததைப் போல அவன் வெட்டிய அந்தக் குழியில் தண்ணீர் எட்டிப் பார்த்தது. இன்னும் சற்று ஆழமாக்கினால் போதும். அவன் பயிர் செய்யப் போகும் நிலத்திற்கு இந்தத் தண்ணீர்பெரிதும்உதவிசெய்யும்.

குடிசைப்பக்கம் இருந்து அவன் மனைவி கையில் சிறு 'கேற்றி'லோடு வந்துகொண்டிருந்தாள். இரவு நடந்ததை அவள் உணர்ந்திருக்க வேண்டும்.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அரசியலமைப்பு

## ஜேயாரால் ஜேயாருக்காக ஜேயாருடைய

'அரசியலமைப்பு: ஜேயாரால் ஜேயாருக்காக ஜேயாருடைய' என்ற நூலின் இறுதி அத்தியாயமே இது.சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதிகளில் ஒருவரான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா,தன்னை ஒரு சக்கரவர்த்தியாக்க உருவாக்கிய,"சனநாயக சோசலிசக்குடியரசு யாப்பு" என்பதில் குறிப்பிடப்பட்டுள்ள ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்களை விளக்கும் இந்நூல்,'பொதுசன ஐக்கிய முன்னணி' ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக எழுதப்பட்டு 10.8.94 இல் தமிழீழத்தில் வெளியிடப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

அத்தியாயம் - 9

**புதிய நிலைமைகளின் கீழ், ஜே. ஆரின் அரசியலமைப்பு உள்நாட்டு யுத்தம்தான் வழியா?**

கட்டுரையின் இறுதிப் பகுதி

மூன்று சனாதிபதிகளின் கீழ்ப்பதினேழு ஆண்டுகளாக, இவ்வரசியலமைப்பு நடைமுறையிலிருந்து வருகிறது. இக் காலகட்டத்தில் ஒரே கட்சி ஆனால் மூன்று சனாதிபதிகள் பதவி வகித்துள்ளனர். நாடாளுமன்றத் தேர்தலும் சனாதிபதித்தேர்தலும் நிகழ வேண்டிய இக்கால கட்டத்தில் அரசியல் கொந்தளிப்புக்கள் பெரிதும் ஏற்பட்டுள்ளன. ஐ. தே. கவிற்கெதிரான உணர் வலைகளே அதிகமுள்ளதாக அபிப்பிராய வாக்கெடுப்புக்களும், அரசியல் அவதானிகளின் கூற்றுக்களும் உள்ளன. பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றி பெறும் என்று பொதுவாகக் கூறப்படும் அதே வேளையில் அறுதிப் பெரும்பான்மையை அது பெறாமல், தொங்கு நாடாளு மன்றத்துக்கான வாய்ப்புக்களே உண்டு என்றும் அபிப்பிராயக் கணிப்புக்கள் கூறுகின்றன.

இத்தகைய பின்னணியில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி (பொ. ஐ. மு ) தான், நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டியதும் இந்த அரசியலமைப்பை மாற்றப் போவதாகவும் சனாதிபதி முறையை உடனடியாகக் கலைத்து வெஸ்ற் மினிஸ்ரர் பாணியிலான நாடாளுமன்ற முறையைக் கொண்டுவரப் போவதாகவும் அறிவித்துள்ளது. ஐ. தே. க தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தான் தேர்தலில் வெற்றியீட்டியதும் நேரடியாக மக்களால் தெரிவு செய்யப்படும் நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதியை உருவாக்கப் போவதாக அறிவித்துள்ளது. இதன்படி தெரிவு முறைதான் வேறுபடுமேதவிர, சனாதிபதிமுறை மாறாது.

இச்சூழலில் அரசியலமைப்பை உருவாக்கிய ஜே. ஆர். "இந்து" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், "இவ்வரசியல மைப்பை யாரும் இலகுவில் மாற்றியமைத்துவிட முடியாது" என்று கூறியுள்ளார். இத்தகைய பின்னணியில் நடைபெறக்கூடியது என்ன? என்பதை இங்கு ஆராய்வோம்.

அரசியலமைப்பு சார்ந்த சட்ட வரம்புகளின்படியும், நாட்டின் அரசியல் யதார்த்தத்தின்படியும் இதைப் பரிசீலிப்போம்.

அரசியலமைப்பின்படி சனாதிபதி முறையில் அதாவது மாற்றம் அல்லது திருத்தம் கொண்டுவர வேண்டுமாயின், இரண்டு நிபந்தனைகளை நிறைவேற்றியாக வேண்டும்.

(1) நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பலத்தை நிரூபிப்பது.

(2) மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பில் மக்களின் சம்மதத்தைப் பெறுவது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் கீழ் எந்தவொரு கட்சியும் மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மை பெறமுடியாது என்பதை தேர்தல் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. இரு பெரும் கட்சிகளும் ஒன்று சேர்ந்தால்தான் இதை மாற்றலாம். ஐ. தே. க சனாதிபதி முறையில் சிறுதிருத்தம் செய்யத் தயாராயிருக்கிறதே தவிர மாற்றம் செய்யவில்லை. எனவே மாற்றத்துக்காக ஐ. தே. க, பொ. ஐ. மு உடன் இணைந்து வாக்களிக்காதவிடத்து மாற்றம் சாத்தியப்படாது. இப்படி வாக்களிக்காவிட்டால் திருத்தமும் சாத்தியப்பாடாது. இப்படியாக இரண்டுமே இரு கோணங்களில் நிற்கும்போது அரசியல் திட்டம் தன்னியல்பாகவே நெருக்கடிக்குள்ளாகும்.

பொ. ஐ. மு வெற்றி பெறுவது என்பது ஊர்ஜிதமானது போல ஒரு நிலை தோன்றுகிறது. இதனால் பொ. ஐ. மு வெற்றி பெற்றதும் கட்சியின் உபதலைவியாகிய திருமதி சந்திரிகா குமாரணதுங்க பிரதமராக நியமிக்கப்பட வேண்டும் என சுதந்திரக் கட்சியின் செயலாளர் தோழமைக் கட்சியின் கையெழுத்துடன் சனாதிபதிக்கு அறிவித்துள்ளார். சனாதிபதி இதில் எப்படி நடந்துகொள்ளக்கூடிய நிலைமை உண்டு என்பதைப் பார்ப்போம்.

43ஆம் சரத்து 3ஆம் பிரிவின்படி சனாதிபதி அவரது கருத்துப்படி பாராளு மன்றத்தின் எந்த உறுப்பினரும் நாடாளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெறுவதற்கு அதிகம் வாய்ப்புள்ளவராக இருக்கிறாரோ அந்த உறுப்பினரை முதலமைச்சராக நியமித்தல் வேண்டும்என, உள்ளது. இதன் படி பார்த்தால், நாடாளு மன்றத்தில் பெரும்பான்மை ஆதரவைப் பெறுகின்ற ஒருவரை முதலமைச்சராக்க வேண்டும்என்பதில்லை. அதுவும் சனதிபதி நாடாளு மன்றத்தில் நம்பிக்கை பெறக்கூடி ஒருவர் எனத்தாம் கருதும் ஒருவரைப் பிரதமராக நியமிக்கலாம். இதில் பெரும்பான்மைக்குப் பதிலாக நம்பிக்கை என்ற சொல்லும் சனாதிபதியின் கருத்துப்படி என்ற சொல்லும் முக்கியமானவை. அமெரிக்க நிலைமை ஒன்றினை உதாரணமாகக் கொண்டு இதை விளக்க முற்படுவோம்.



அமெரிக்க சனாதிபதி, பாதுகாப்புச் செயலர் என அழைக்கப்படும் பாதுகாப்பு அமைச்சரை நியமிக்கும் உரிமையுடையவர். ஆனால் அந்த நியமனத்தை கொங்கிரஸ் வாக்கெடுப்பின் மூலம் நிராகரித்தால் அது செல்லுபடியற்றது என அரசியலமைப்புக் கூறுகிறது. ஜோர்ஜ் புஷ் நியமித்த பாதுகாப்புச் செயலாளர் விவகாரத்தில் நடந்தது இது. ஆனால் இலங்கையில் சனாதிபதி நியமிக்கும் ஒருவரை மறுக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு இல்லை.

அரசியலமைப்புத் திட்டத்தின்படி, சனாதிபதி எந்தக் கட்சிக்காரரையும் பிரதமராக்கலாம். சனாதிபதியானவர் பதவியிலிருக்கும்போது அவர்தான் மந்திரி சபையின் தலைவர். அவர் மந்திரி சபையின் தலைவர் மட்டுமல்ல, மந்திரி சபையில் அமைச்சர்களுக்கான பதவிகளை வகிக்கக்கூடியவர். சிலவேளை மக்களை ஏமாற்றுவதற்காக அரசியல் சூழலை அனுசரித்துப் போவதற்காகவும் சனாதிபதி பொ. ஐ. மு சார்ந்த ஒருவரை பிரதமராக நியமிக்கலாம். (இதில் எழக்கூடிய வேறு சிக்கல்களைப் பின்னர் பார்ப்போம்). அப்படி நியமித்தால் ஐ. தே. க சனாதிபதியின் கீழ் பொ. ஐ. மு அமைச்சர்கள் இருக்கவேண்டும். அமைச்சரவைக் கூட்டத்துக்கு சனாதிபதிதான் தலைமை தாங்குவார். இதுதான் அரசியல் திட்ட எற்பாடு. இதனை பொ. ஐ. மு ஏற்கப்போவதில்லை. எனவே அரசியல் கொந்தளிப்பு ஏற்படக்கூடும். பொ. ஐ. மு இற்கு மூன்றின் இரண்டுபங்கு பெரும்பான்மை கிடைக்காத பட்சத்தில் அவர்கள் சனாதிபதி ஆட்சியை அரசியல் திட்ட ரீதியாகக் கலைக்கும் முயற்சிகளைச் செய்யமுடியாது. அப்படித் தன்னிச்சையாக சனாதிபதி ஆட்சியை அவர்கள் இல்லாமற் செய்வதாக பிரகடனம் செய்யுமிடத்து அரசியலமைப்பின் பொதுகாவலர் என்ற வகையில் சனாதிபதி அதற்கெதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகாரமுடையவர். ஐ. தே. க நிலைமைக்கேற்ப தானாக ஒதுங்கினாலேதவிர இதற்குரிய சாத்தியக் கூறுகள் குறைவு.

ஐ. தே. க இதில் தான் தோற்கக் கூடுமாயினும் பல திசைதிருப்பங்களையும் குழப்பங்களையும் ஏற்படுத்த முனைகிறது. ஒருபுறம் பொ. ஐ. மு வெற்றி பெற்றாலும் பிரதமராக பொ. ஐ. மு யைச் சேர்ந்தவரை நியமிக்கவேண்டிய சட்டரீதியிலான கடமை சனாதிபதிக்கு இல்லையானாலும், மக்கள் மனதிற் குழப்பத்தை உண்டாக்க அப்படியொரு நியமனத்தைச் செய்வதற்கான நிலை ஒரு புறமும் பொ. ஐ. மு விற்குள் சிக்கல்களை உருவாக்க சந்திரிகாவிற்குப் பதில் சிறிமாவைப் பிரதமராக நியமிக்கும் எண்ணமும் ஐ. தே. க மிடம் உள்ளது போல்தெரிகிறது.

1915இல், இரண்டாம் உலகயுத்தம் முடிந்ததும் நிகழ்ந்த பிரித்தானிய நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் பதவியிலிருந்த சேர்ச்சில் தலைமையிலான அரசாங்கம் தோற்கடிக்கப்படவே, தொழிற்கட்சி பாரிய வெற்றியைப்பெற்றது. இதில் தொழில் கட்சியில் இரு தலைவர்கள் முன்னணியில் நின்றனர். ஒருவர் பெவின் (Bevin) மற்றவர் அட்லி (Attlee)மொத்தம் 393 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 247 ஆசனங்களை அறுதிப் பெரும்பான்மையுடன் தொழில் கட்சி வென்றிருந்தது. இந்த வெற்றிக்குத் தலைமை தாங்கியவர் பெவின். இவர் தொழில் கட்சியில் தீவிர நிலைப்பாடுகளைக் கொண்டவர். கட்சிக்குள் அட்லியை விடச் செல்வாக்குள்ளவர். இந்த நிலையில் பெவினைப் பிரதமராக்குவதற்குப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தை தொழில்கட்சி கூட்டியது. தொழிற்கட்சியின் பாராளுமன்றக் குழுத்தலைவராக பெவின்தான் தெரிவு செய்யப்படுவார் என்ற நிலையிருந்தது. ஆனால் அதற்கிடையில் சேர்ச்சில் சதித்தனமான ஒரு முடிவுக்கு வந்தார் பிற்பகல் இரண்டு மணிக்கு பாராளுமன்றக் குழுக்கூட்டம் கூட இருந்த வேளை அதற்குச் சில மணித்தியாலங்களிற்கு முன்பு சேர்ச்சில், மகாராணியைச் சந்தித்து கூட்டம் கூடி பெவினைத் தலைவராகத்தீர்மானிக்க முன்பு மிதவாதியும் தம்முடன் ஒத்துப்போகக் கூடியவருமான தொழிற்கட்சியின் மற்றொரு தலைவரான அட்லியை பிரதமராக நியமிக்குமாறு ஆலோசனை கூறினார். மகாராணியார் அவ்வாறே செய்தார். இது கூட்டம் கூட்டப்பட்ட சில நிமிடங்களிற்கு முன்பு நடந்தது. அட்லி பிரதமராக நியமிக்கப்பட்டார். ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குகளின்படி கூட்டம் ஆரம்பமாகியது. அவ்வேளை கூட்டத்துள் நுழைந்த அட்லி தன்னை மகாராணியார் பிரதமராக நியமித்துவிட்டதை அறிவித்தார். இதே மாதிரி சிறிமாவை பிரதமராக நியமிக்க விஜேதுங்க யோசிக்கிறார் ஆயினும் தொழிற்கட்சி விட்டபிழையை பொ. ஐ. மு விடவில்லை. அது தனது பாராளுமன்றக் குழுத்தலைவராக சந்திரிக்காவை அறிவித்துள்ளது. ஆனால் விஜேதுங்கா கட்சித்தலைவியைத்தான் பிரதமராக்கப் போவதாகக் கூறுகிறார். இதில் சட்டம் , சம்பிரதாயம் இரண்டும் இல்லை. விஜேதுங்கா வாய்ப்புக்களைப் பயன்படுத்தி நிலைமையைக் குழப்ப முயற்சிக்கிறார்.

ஐ. தே. க. நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்தாலும் விஜேதுங்க பொ. ஐ. மு. மின் அமைச்சரவையைத் தான் அமைக்கவேண்டும் என்பதில்லை. ஆனால் அவர் இப்பொழுது பொ. ஐ. மு. மின் அமைச்சரவையை அமைக்கப் போவதாகக் கூறுவது தமக்கேற்பட்டுள்ள பலவீனத்தின் மத்தியில் குழப்பம் ஒன்றை உண்டாக்குவதற்கான உத்திதான்.

பொதுத்தேர்தல் முடிவடைந்ததும் காபந்து அரசு உடனடியாகத் தன்னியல்பாகக் கலைந்துவிடும் அப்பொழுது புதிய நாடாளுமன்றத்திலிருந்து அமைச்சர்களை சனாதிபதி நியமிக்க வேண்டும். இக்கட்டத்தில் சனாதிபதி பொ. ஐ. மு மினரை அமைச்சர்களாக நியமித்து அதற்கு அவரே தலைமைதாங்குவதை பொ. ஐ. மு எற்காது. அரசியல் அமைப்பின்படி 43 ஆவது சரத்தின் 2ஆம் விதி பின்வருமாறு கூறுகிறது. சனாதிபதி அமைச்சரவையின் ஒரு உறுப்பினராக இருத்தல் வேண்டும் என்பதுடன் அமைச்சரவையின் தலைவராய் இருத்தலும் வேண்டும். இதனை பொ. ஐ. மு எப்படி ஏற்கும்?

**தமிழீழத்திலிருந்து**
**மு.திருநாவுக்கரசு**

இவ்வாறு பொ. ஐ. மு விலிருந்து பிரதமரையோ ஏனைய அமைச்சர்களையோ நியமிக்காது, ஐ. தே. க விலிருந்து அமைச்சர்களை நியமிக்க அரசியலமைப்பு இடங்கொடுப்பதால் விஜேதுங்க தனது பதவிக்காலம் வரையிலும் ஐ. தே. க வினரை அமைச்சர்களாக நியமித்தால், பொ. ஐ. மு கிளர்ச்சியில் ஈடுபடக் கூடும். இத்தகைய ஒருநிலைமையில் பொ. ஐ. மு எப்படி செயற்படப்போகிறது என்பது அதன் வலிமையிலேயே தங்கியுள்ளது.

அரசியலமைப்பானது இப்படிப்பட்ட போராட்டத்திற்கு வழி வகுத்துள்ளது என்பதில் சந்தேகமில்லை. அரசியலமைப்பின் திட்டத்தைக் கொண்டுவந்தது. ஐ. தே. கவின் ஒத்துழைப்பின்றி பலாத்காரமாக ஒரு அரசியலமைப்பைக் கொண்டுவந்தால் அது இலங்கையின் அரசியலமைப்பு மரபை மீறிய ஒன்றுதான்.

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# உளத்தில்...

## கும்பிட்டு வாழ மாட்டோம்

— கவிஞர் சோ.பத்மநாதன்

வெள்ளைக்கொக்குகள்காலைப்பொழுதிலே
வீதிஓரமாய்மெல்லநடந்தன!
கள்ளமற்றசிரிப்பில்அச்சூழலே
கலகலத்தது,கையைஅசைத்துத்தம்
பிள்ளைகள்நடைபயிலும்அழகிலே
பெற்றவர்தம்கவலைமறந்தனர்
'பள்ளிசெல்லுகின்றார்கள்தம்பாடங்கள்
படிப்பர்,நாளைஅவர்களுடையது!'

புத்தகப்பைமுதுகில்சுமந்தவர்,
போத்தல்தோளில்அசையநடந்தவர்,
சித்திரத்துக்குரியதாள்,தூரிகை,
தீட்டும்வண்ணக்கலவை,சிமிழுடன்
கொத்துப்பூக்கள்செண்டாகப்பிடித்தபூங்
கொத்துக்கள்வாய்பிளந்தசெம்மாதுளை
முத்தைஏந்தியபால்மணம்மாறிலா
முறுவலர்,அடிபெயர்த்துமுன்போயினர்!

ஊழிக்காற்றுஅத்திசையினைநோக்கியே
ஓர்நொடிக்குள்நெருங்கியதாமெனப்
பேரிரைச்சல்—வான்முகடிரண்டாகியே
பிய்ந்துகீழேவீழ்ந்ததுமாதிரி!
சூழல்யாவும்புகையும்கரியுமாய்ச்
சுக்குநூறுபட,நெடும்ஆலொன்று
வேரோடும்தரைசாய்ந்தது!பாதகர்
வீசுகுண்டுஇத்தனையும்புரிந்தது!

வெள்ளைச்சீருடைசெந்நிறமாயது
வீதிஎங்கும்குருதிமணத்தது
பள்ளிப்பைஒருபற்றையில்தொங்க,ஓர்
பாதரட்சைதனித்துத்தவித்தது
'தள்ளிச்சற்றுக்கிடந்ததுமானிடத்
தலை'என்றேயொருசெய்திபறந்தது
பிள்ளைப்பிஞ்சுநடந்தஅம்மண்ணிலே
பெரியதோர்குழிவாயைப்பிளந்தது!

பத்துவருஷம்பறந்தோடிவிட்டாலும்
பெற்றவயிற்றின்பிரலாபம்ஓய்ந்திடுமா?
குஞ்சுசிறகுமுளைத்துப்பறந்ததுவோ!
கோழிஅதைப்போட்டுக்கொத்தித்துரத்தியதோ!
எங்கோதொலைவில்இருந்தேஅவன்எழுதும்
வானஞ்சல்கூடவழிமாறும்என்கின்ற
'ஞானம்'தளர்ந்தஉடலைநலிவுறுத்தும்!
பெற்றமனத்தின்ஏக்கம்உணராதோர்
கற்பழித்தபின்னர்அனுப்பும்கடிதங்கள்
வந்தாலும்வராதொழிந்தாலும்ஒன்றென்றே
நொந்தஒருதாய்கொழும்புநகர்நோக்கிப்
போகப்புறப்பட்டாள்.போய்ஒருகால்போனில்
'நான்சாகமுன்னர்உன்'ரைசடங்குக்கு
ஒருமுடிவுசொல்!'என்றுகேட்கத்துணிந்து!

வெண்ணிலவுவீச,விரிகடலின்அலைஎற்ற
தண்ணீர்கிழித்துத்தவழும்படகுகளோ
ஒன்றன்பின்ஒன்றாய்கிளாலிஇருந்துநல்லூர்
சென்றுவரும்பாதை,திசைசரியாய்த்தெரியாது!
பாதிவழிகடந்தமகிழ்ச்சிநிலைக்கவில்லை
நேவிவெள்ளங்கள்நிலையாய்ஒளிபாய்ச்சி
வந்துமறித்துவயதானவர்என்றோ,
குஞ்சுகுழந்தைஎன்றோபாராமல்குத்திவெட்டி,

சுட்டுப்படகோடுஎரித்துவெறியாடி
எட்டுப்பிணங்கள்அறுவடைசெய்தேகினராம்!
'கோல்'எடுத்துப்பேச,கொழும்புசென்றபொன்னம்மா
நீலக்கடலில்நினைவாகிப்போய்விட்ட
கொடுமையினால்நெஞ்சுகுமைகிறான்அன்புமகன்!

ஓடுகிறஊர்திகளைநிறுத்திஉள்ளே
இருக்கின்றதமிழரைஒவ்வொருவராக
தேடி,அவர்களுக்குள்ளேயேபுலியைக்கண்டு
சிலிர்த்துஉணவுவிடுதிகளைத்தடவி,மற்றும்
வீடுகளில்வந்தவிருந்தினரைஅள்ளிக்
கொண்டுபோய்விடுவிக்கலஞ்சம்கோரும்
கேடுகெட்டஅரசுக்குக்கொடியேன்? ஆல
வட்டமேன்? குடையேன்? செங்கோல்தான்ஏன்,
ஏன்?

வடக்கில்ஒருவரிப்புலியைஆளவிட்டோம்!
மலையகத்தைகிழப்புலிக்குத்தாரைவார்த்தோம்!
கிழக்குஎமதுகைக்குள்என்றோம்ஆனால்காடு
கிடுகிடுக்கும்உறுமல்களைக்கேட்டுநொந்தோம்!
இடைக்கிடையேஎல்லைகளைத்தாக்கிஎம்மை
ஈடாடவைக்கின்றார்என்றேஓடி
கடற்பரப்பில்நின்றாலும்கண்ணிவைக்க
கலங்குகிறோம்!'எனப்புலம்பும்கயவர்முன்னே—

கும்பிட்டாநிற்பான்இத்தமிழன்? தங்கக்
கூட்டுக்குள்அடைபட்டாகிடப்பான்? அல்ல!
நம்பிக்கைஇழந்தவனாய்நாட்டைவிட்டு
நாலுதிசையும்திரிந்துதொழும்புசெய்து
கும்பிக்குவழிதேடும்கூட்டமாக
குனிந்ததலைநிமிராதுகூனிக்கூனி
வெம்பிப்போய்நடைப்பிணமாய்வீழ்வானோடா?
விடுதலையைவிட்டெழுந்துவாழ்வானோடா?

செம்பாட்டுக்கைகால்கள்சிதறிப்போக
சிறிசுகளைஷெல்ஏவிக்கொன்றுதீர்த்தும்
அம்பிட்டபேரைநடுக்கடலில்,ஆண்பெண்
மூப்பு,இளமைபாராதுசுட்டுக்கொன்றும்
கும்பிட்டகைகளையும்வாளால்வெட்டிக்
குவிக்கின்றகொடியரையும்மனிதர்என்று
நம்பிப்போய்அவர்க்கேவல்செய்து,பிச்சை
நச்சுகிறகூட்டமாய்வாழமாட்டோம்!

சிங்களர்தம்தாயகம்இந்நாடுவந்த
செந்தமிழர்க்கிடமில்லைபெளத்தமார்க்கம்
எங்களதுதனிஉடைமைமாநாயக்கர்
திருவுள்ளக்குறிப்பறிந்துநடந்துகொள்வோம்!
சங்கடங்கள்ஏற்பட்டால்வழிகாண்டற்குத்
தம்மபதம்துணையாகும்!ஐயமில்லை
எங்கெழிலென்ஞாயிறெமக்கு!'என்றுபேசும்
இவரைப்போய்க்கும்பிட்டாவாழ்வதையா?

மாவில்லை,மருந்தில்லை,சீனிஇல்லை,
மண்ணெண்ணெய்இல்லை,காய்கறிகள்எல்லாம்
தேவர்தம்உலகுவரைஉயர்ந்தபோதும்
செயலற்றுத்தமிழர்குலம்இருந்ததில்லை!
கோயில்கள்விழாக்கள்கலைநிகழ்ச்சிக்கேதும்
குறைவில்லை!எமதுதலைகுனிந்ததில்லை!
சேவல்தன்சிறகடித்துக்கூவக்கேட்டோம்:
'திருநாடுமீளும்!'அதுவொன்றேவேட்டாம்!

## விருந்து

அன்றுவியாழக்கிழமை!

சகோதரன், கிட்டுவைப் பார்ப்பதற்குச் சென்றிருந்தேன். தூக்கிக் கட்டிய சாரத்துடன், கிட்டு சமையலறையில் மும்முரமாகச் சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.வதக்கியபொரியல்மணம்வானம்வரைஎட்டியது.

'வாங்கோண்ணை' 'வாங்கோண்ணை' என்ற வழமையான கலகலப்புடன் உள்ளேயழைத்த அவர், 'கொஞ்சம் பொறுங்கோண்ணை! நான் 'ஜில்மால்' சமைக்கிறேன்.சாப்பிடலாம்என்றார்.

நான் சமைப்பதில் மிகவும் ஈடுபாடுடையவன். விருந்தினருடன் உட்கார்ந்து விண்வலம்வருபவன்.இருந்தும்எனக்குத்தெரியாதஒருபுதியவகைச்சாப்பாடாக இருக்குமோஎன்றுஎண்ணியபடி,'ஜில்மாலா?என்றுவிழிகளைவிழித்தேன்.

அவர்,தான்சமைத்தஉணவில்ஒருபகுதியைஒருதட்டில்இட்டுஎடுத்துவந்தார். நன்றாகக்கருகிப்பொரித்து,வெண்காயத்தில்வதக்கியஅசல்மாமிசம்.

நான்வியாழன்வெள்ளிகளில்மாமிசம்உண்பதைத்தவிர்க்கஎத்தனித்ததவக்காலம் அது!

இருப்பினும்கிட்டு அன்புடன் ஆசையாக எடுத்து வந்ததை மறுக்கும்நிலையில் நான் இருக்கவில்லை. எடுத்துச் சுவைக்கத் தொடங்கினேன். 'ஜில்மால்' ஒரு சாதாரண பொரியல்தான் என்று அவர் சிரிப்புடன் சொன்ன போதும்கூட, கிட்டுவின்

## அமுதம்

அன்புணர்வுடன்கலந்துஅதுபுதுச்சுவைபெற்றிருந்தது.

தலைவரின் தாயுள்ளம்பற்றியும், சமையலும் விருந்தோம்பலும், பாசறை வாழ்வில் எத்தகைய பெரிய இடத்தைப் பெற்றுள்ளது என்பது பற்றியும் கிட்டு உளம்விட்டு அடிக்கடிஉரைத்துள்ளார்.

அன்பையும், நட்பையும், நம்பிக்கையையும், உள்ளத்து உணர்வுகளின் சங்கமிப்பையும் ஏற்படுத்தும் ஓர் மரபுச் சாதனமாக இந்த விருந்தோம்பலும், பகிர்தலும், பரிமாறலும் இருப்பதையும் ஒரு தனிமனிதனின் கரும ஒழுங்காற்றலையும் பொறுப்புணர்வையும் பிரதிபலிக்கும் ஒரு வெளிப்பாடாக அவரது விருந்தோம்பல் சார்ந்த நடவடிக்கைகள் துலங்குவதையும் அவர் நம்புவதைநான்அவதானித்துக்கொண்டேன்.

நாம் எமது மாவீரர் விழாக்களுக்கும், மற்றும் எழுச்சி விழாக்களுமான ஒத்திகைகளில் ஈடுபடுகின்ற வேளைகளில், கிட்டு நமக்கு என்ன விதத்திலாவது எதையாவது உண்ண வசதி செய்வதோடு, தாமும் எம்முடன் கலந்து பகிர்ந்து கொள்வார்!

ஒருநாள்எனக்குஒருபார்சல்வந்தது!

புலவர்அண்ணைக்கு!

அன்புடன்கிட்டு,

என்ற வாசகத்துடன் வந்த அந்தப் பார்சலில் இனிப்புப் பெட்டியொன்றிருந்தது. அந்தக் கனிந்த நெஞ்சத்தின் நெகிழ்வில், நிழல்கண்டு உட்கார்ந்தது எனது நெஞ்சம்! நெஞ்சைப் பிளக்கும் நீள்கரங்களே, அன்புடன் இடப்படும் கஞ்சியும் கூழும் என நாம் நம்பவேண்டும். உள்ளத்தின் ஓவியமே விருந்தோம்பற் கலையாகும்.

— புலவர் சிவநாதன்

'அன்பிலார் இட்ட அமுது' என்ன செய்யும் என ஒளவையார் கூறியிருக்கிறார். அன்புடையாரின் வலிமை பற்றிவள்ளுவன்வலியுறுத்தியுள்ளார்.

அன்பு கலந்து இடப்படுவதும், அன்புணர்வோடு பெறப்படுவதுமே விருந்தாகும். முகமும் அகமும் கோணாது, உள்ளத்தூறும் உவகையுடன் பரிமாறப்படுவதே விருந்தாகும்.

நொந்து கொண்டு நொடிந்து கொண்டு, வந்தாரை வைது கொண்டு இடப்படும் விருந்திருக்கிறதே,அதுநஞ்சிடுதற்குஒப்பானதாகும்!

வீட்டுக்கு வந்தோரையெல்லாம் 'விருந்து' என்று குறித்துச் செல்கிறான் பொய்யா மொழியோன்!

'விருந்துபுறத்ததாத்தானூண்டல்'என்னும்போதும்,

'செல்விருந்து ஓம்பி, வருவிருந்து காப்பான்' என்னும் போதும், வீட்டிற்கு வருவோரையும், வந்து போவோரையும் 'விருந்து' எனக் குறித்து எமது மரபுக்கு மாலையிடுகிறான்,வள்ளுவன்.

எதற்கு வருகிறார்கள்? என்ற கேள்வி கடந்து, வீட்டில் அடியெடுத்து வைப்பவர்களையெல்லாம் 'விருந்து' என்றழைக்குமளவிற்கு, நம்மிடையே நிறைவானஉள்ளங்கள்இருந்திருக்கின்றன.

மரணவீட்டிலும்மணவீட்டிலும்விருந்தோம்பல்விளையாடுவதுண்டு!

'உண்ணீர்!உண்ணீர்'!எனஊட்டும்பண்புஊறிப்பாய்ந்திருக்கிறது.

"அவித்துக் கொட்டுவது" என்று அலுப்புடன் கூறுபவர்கள் ஒன்றை நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

விருந்தினைச்சமைப்பதும்ஒருகலை!விருந்தினைப்படைப்பதும்ஒருகலை!

விருந்தினரைஅழைப்பதும்ஒருகலை!

விருந்தினரைஉட்காரவைத்துப்பரிமாறுவதும்ஒருகலை!

'உண்ணீர்,உண்ணீர்என்றுஉபசரியார் இல்லத்தில்உண்ணாமைகோடிபெறும்' என்பதும்மதியாதார்முற்றம்மிதியாதே'என்பதும்நம்மக்கள்வெளிப்பாடு.

"காணக் கண்கூசுதே கையெடுக்க நாணுதே, வீணுக்கென் என்பெலாம் பற்றியெரிகிறதே"! எனஒளவைப்பாட்டிஅன்பிலாளிட்டஉணவின்விளைவுகளை மிகவும்அழகாகவும்ஆழமாகவும்வெளிப்படுத்தியுள்ளார்.

அவித்துக்கொட்டினால்மட்டும்,அதுவிருந்தாகமாட்டாது.

நமது நாட்டில் நமது முதியவர்கள் அவித்துக் கொட்டுவதில்லை. சமைத்துப்

தொடர்ச்சி 17 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பரிமாறுகிறார்கள்! உணவை மட்டுமல்ல! உணர்வுகளையும்! முகம்பார்த்து, அகம்பார்த்துப் பரிமாறிப் பூரிக்கிறார்கள். ஒரு பொக்கைவாய்ப் பாட்டியின் கையிலிருந்து கிடைக்கும் இடித்த வெற்றிலை பாக்கிருக்கிறதே, அது இன்பதேவதையின் இனிய வரமென எண்ணுபவன் நான்! விருந்தினரின் விருப்பமறிந்து, அவரது உள்ளமறிந்து விருந்து தருதலே நிறைந்ததாகக் காணப்பட்டிருக்கிறது,நமது அகராதியில்!

இவற்றையெல்லாம் நான் எழுதும் போது, உங்கள் மனத்திரையில்எழும்மௌனமான'மறுப்புரைகளை' நான் கேட்காமலில்லை. நாம் எந்த மண்டலத்தில் வாழ்கிறோம்? இவர் எந்த மண்டலத்தில் சஞ்சரிக்கிறார்? அட.... ஆபத்துக்குக் கதவைத் திறந்தாலும்.... ஆபத்தைத் தான் வரவேற்க வேண்டியிருக்கும் ஒரு சூழலில், வருவோரையும், வந்து போவோரையும் 'விருந்து' என்று அழைக்க, நமக்கென்னவிசரா? எனவினவுவோரைநான்புரிந்து கொள்ளத்தான்செய்கிறேன்!

# கலைகள்

காலையில் எழுந்து, மாலைவரை ஆபத்துக்களையே எதிர்நோக்கிய மனநிலையில் உலவிவிட்டு, உறங்கப்போகும் போதும், ஒன்றுக்கு ஐந்துமுறை கதவுகளையும் சாளரங்களையும் "பூட்டினோமா? பூட்டவில்லையா? சாத்தினோமா? சாத்தவில்லையா?" என்று பரிசீலித்துக் கொண்டு படுக்கையிற் சாய்பவர்கள் நாம். ஒரு சிறிய ஓசை கேட்டாலும், யாரோ? எவரோ? என... இருளில் விழிபிதுங்கப் படுக்கையில் எழுந்து அமர்ந்து கொள்ளும் 'கொலை–கொள்ளை' நாகரீகத்தின் தொட்டிலில் நாம் மூச்சுவிட்டுக் கொண்டிருக்கிறோம்.

இவ்வாறான சூழலில், விருந்தாவது...மருந்தாவது என விம்மும் நம்மவர்களை நான் சந்திக்காதவனில்லை. பல ஆண்டுகளாக, நானும் இந்தச்சக்கரத்திற்குள்சுழல்பவன்தான்!

இருப்பினும், 'Barbeque', 'Pint for a pint' என்ற வெள்ளைநாட்டார் விருந்தோம்பலை மட்டும் நாம் மிக வேகமாகப் பிடித்துக் கொள்ள முடியுமெனில், அதுமட்டும் நமக்குப் போலியான ஓர் அந்தஸ்தைத் தருவதாக நாம் எண்ணிக் கொள்ளமுடியுமெனில், நமது விருந்தோம்பலை விட்டுச் செல்வதற்கு மேற்கூறிய காரணங்கள் சரியாக அமைய முடியாதென்பதே எனது தாழ்மையான அபிப்பிராயமாகும்!

நமக்கு முன்பின் தெரியாத ஒருவரையோ, அன்றேல் நமது உளஞ்சார்ந்த நம்பிக்கைக்கு அப்பாற்பட்ட ஒருவரையோ, வீட்டுக்குள் அழைத்து வில்லங்கத்தை விலைக்கு வாங்கும்படியான ஒரு சூழலைநான்விரும்பவில்லை.

நமக்குத் தெரிந்தவர்கள், அன்றேல் நம்முடன் ஏதோ ஒரு விதத்திற் தொடர்புள்ளவர்கள் நமது இல்லங்களுக்கு வரும்போது, ஒரு தேநீர் கொடுப்பதற்கும் இணக்கமற்றவர்களாக நாம் மாறுவதே, நம்மை மனிதநேயமற்றவர்களாக ஓர் சுயநலப்பாதைக்குச் சுருட்டியிழுத்துச் செல்லும் என்பது எனது அபிப்பிராயமாகும். 'Mother'sday', 'Father's day', 'Valentine's day' உடன் நாம் நின்றுவிட முடியாது!

'எனது பிள்ளை, எனது சுற்றம்! என்பதோடு மட்டும் எமதுஉணவுநின்றுவிடும்நிலைமை.இன்று,புலம் பெயர்ந்த நாடுகளில் வலுப்பெற்று வருகிறது! சமுதாயஉணர்வு செத்துக்கொண்டுபோகிறது!யார் செத்தால் நமக்கென்ன? எனும் போக்கு அதிகரித்துவரும், வீட்டுக்குள் அடைபட்ட விலங்குகளாக நம்மவர்கள் மாறிக் கொண்டு செல்கிறார்கள்! பிறருள்ளம் புரியா சடங்குகளாக உருவெடுத்துள்ளார்கள்.

'சாப்பிடுங்களேன்'! என்று கேட்பது, ஓர் அநாகரீகம் என்றும் நினைக்கும் நிலைமையெழுந்து கொண்டிருக்கிறது.'இன்னும்கொஞ்சம்போடவா? என்று கேட்பது அநாகரீகமாம். வரும்போது சொல்லிவிட்டா வந்தார், சமைத்துப்போட! என்று கேட்கப்படுவதுண்டு.

சூடாக்கியுண்ணலும் சுயநல வலயத்தில், உணர்வுகள் உறைந்து கொண்டு போகின்றன. கலகலப்புடன் வரவேற்கும் மனித உள்ளங்களை, இன்றெல்லாம் தமிழர் இல்லங்களிற் சந்திக்கமுடிவதில்லை. காரணம்... நாமெல்லோரும் உழைக்கிறோம். ஓடி ஓடி ஒன்பது வேலை பார்க்கிறோம். யாரை ஒறுத்தும், உழைத்தாற் போதுமென நிற்கிறோம். நமக்கே உண்ண நேரமில்லை. பிறர்க்கு உணவூட்ட எப்படி நேரம் வரும்? என்றுநினைக்கிறோம்.

ஒரு குடும்பமாக இருந்துண்ண முடியாத அளவுக்கு ஓடியோடி உழைத்தும், கடனாளிகளாகவும், நாணயமிழந்தவர் களாகவும்நாம்வாழ்ந்துகொண்டிருக்கிறோம். பணந்தேடிக்குவிப்பதாகப்பகற்கனவும்கண்டு கொண்டிருக்கிறோம். கம்பளத்திற்கடியிலும், அடுக்களையிலும், அழுக்கும் பழைய பண்டமும் புழுத்துக் கிடக்கும் பணமுதலாளிகளெனஅங்லாய்த்துநிற்கிறோம். வீடெல்லாம்அழுக்குஉடைகள்பரவிக்கிடக்க, 'விருந்தினரேவேண்டாம்'என்றும் விரதம் பிடிக்கிறோம். முகமும் அகமும் கறுத்து, முனகிக் கொண்டும் முணுங்கிக் கொண்டும் முகவரியற்ற மனித மிருகங்களாக அலைகிறோம். 'சோம்பேறி' வாழ்க்கையைச் சொத்தாக்கிக் கொள்கிறோம். எதற்கும் பஞ்சிபிடித்தவர்களாக மாறிக் கொண்டிருக்கிறோம்.

புலம்பெயர்ந்தநிலங்களில்,எமது குழந்தைகள், உணர்வற்ற ஓர் அறிவு வலயத்தினுள் அகப்பட்டு நிற்கிறார்களென நான் முன்னரும் குறிப்பிட்டிருக்கிறேன். இவர்களுக்கு அன்பை வெளிப்படுத்தும் வழிமுறையை அறிமுகப்படுத்துவதுஎமதுகடமையாகும்.

அன்பு வெளிப்பாடு என்பது மனிதநேயத்தின் ஒரு பிரதான அங்கமாகும்! இந்த அன்பு வெளிப்பாட்டின் வடிகால்களில் ஒன்றே விருந்தோம்பல்என்றால்அதுமிகையாகாது.

"Pleaseyourself"என்றவகையிலும்,"Come andget it" என்ற ஒரு 'நாய்'மொழி வகையிலும் விருந்தோம்பல் வெள்ளையரிடம் உண்டு. இதனை, நம்மவரும் சிக்கெனப் பிடித்துக் கொள்கின்றனர். 'வெள்ளை' முதலாளிக்குப் பொதிகட்டிச் செல்லும் விருந்தோம்பலுடன் நின்றுவிடுகின்றோம். தன்னம்பிக்கையற்றவனுக்கு ஓர் உதாரணம் கேட்டால், 'வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழன்' என்று கூறினாலும்ஆச்சரியப்படுவதற்கில்லை.

தம்மீது நம்பிக்கை கொண்டவர்களாலேயே தமதுதனித்துவங்களைப்பேணமுடியும்.தான் 'மணப்'தாகத் தனக்குள்ளே நம்புபவன், எவ்வாறு ஏனையோர் முன்னிலையில் உலவுவான். தனது மொழி, பண்பாடு, கலை தாழ்வானதெனத் தனக்குள்ளே தீர்மானித்துவிட்டவன் எவ்வாறு அனைத்துலக இனங்களின் முன்னே தன்னை இனங்காட்ட முடியும்?

மண்ணையும் மரபையும் எப்போது நாம் இழக்கத் தயாராகிறோமோ, அப்போதே நாம் மக்கள் வரிசையிலிருந்து விலகிவிடுகிறோம். தன்னம்பிக்கையற்ற, தாழ்வுள்ளம் கொண்ட தனிமனிதர்களாகி விடுகிறோம். வரலாற்றையும் வாழ்க்கையையும் பிரித்துவிட முடியாது. மரபுகளைப் பேணுதல், மரபுவழியான சிந்தனைகளுடன் செயற்படுதல் பிற்போக்கானதல்ல!மரபுகள்போற்றும்மகத்தானதமிழர் தலைமை ஈழத்தில் உயர்ந்து நின்று உவகை தருகிறது. உலகத் தமிழர்கள் உறுதியுடனும், உற்சாகத்துடனும்உலவக்கூடியஉதயகாலம் ஈழத்தில்உருவாகியிருக்கிறது.

நாம் ஒரு சுதந்திர இனம் என்ற பேரோசை எழுந்து இன்று உலகெலாம் கேட்கத் தொடங்கியிருக்கிறது.

நாம் இந்த உலக உருண்டையில் ஒட்டிக்கொள்ளுவதற்காக, வல்லரசுகளையும், வல்லாதிக்க இனங்களையும் வருடிக்கிடந்து கொண்டு, எமது மரபுகளைத் தூக்கி எறிய வேண்டுமென இனியும் எண்ணிக் கிடத்தல் மடைமையிலும் மடமை. நாம் இனியும் கூசத் தேவையில்லை. குனியவும் தேவையில்லை. நாம் ஒரு தேசிய இனம் என்பதை நாம் நம்பியே ஆகவேண்டும்.எமது முன்னோரின் சிந்தனைகள் நேற்று. இன்று, நாளையென முக்காலத்திற்காகவும் முகிழ்ந்தவை. அவை என்றும்தோற்றுப்போவதில்லை.

நேற்றொரு நாள், எமது வீரம் செத்துவிட்டதாக ஒப்பாரிபாடினோம்.

இன்றைய தினம், அதுவே மாவீரமாக மறுபிறப்பெடுத்துள்ளது.

எமது முன்னோரின் நம்பிக்கைகள் அழிவில்லாதவை.

எனவேதான்,நாம் அந்நியநிலங்களில் வாழநேர்ந்த போதும் நமது மண்ணையும் மரபுகளையும் போற்றவேண்டியதேவையைக்காண்கிறோம்.

ஒருமனித உள்ளத்திற்கு,நம்பிக்கையும்நேயமும் வெளிப்பாடும் அவசியம் என்பதில் நம்மக்கள் மிகவும் அக்கறையுடனிருந்திருக்கிறார்கள்! இதனாலேயே அரவணைக்கும் சிந்தனை நம்மவரிடம்நிறைந்துகாணப்பட்டுள்ளது.

மேலைத்தேயமக்களிடம், அன்பு வெளிப்பாட்டின் குறைபாடுகளினால் ஏற்படும் தாக்கங்கள் பற்றி அறிஞர்கூறவும்எழுதவும்அறிகிறோம்.

சுயநலச் சாக்கடையில், சுரண்டும் கிருமிகளாக புலம் பெயர்ந்த நிலங்களில் நாம் தாழ்ந்து விடாதிருக்க வேண்டுமாயின், நாம் எமது மண்ணையும் மரபையும் மக்களையும் மறந்துவிடக்கூடாது.

நாம் உழைப்பதும், சேகரிப்பதும் எமது நாளைய செல்வங்களுக்காகவே அந்த நாளைய செல்வங்களை இவற்றை அனுபவிக்கும் தகைமையுடன்வாழவைப்பதேஎமதுதலையாய நோக்கமாகும்.

பகிர்ந்துண்டு வாழும் பண்பும், விருந்தோம்பிக் கூடிக் குலவியிருக்கும் மேம்பாடும் எமது குழந்தைகளுக்குநாம்காட்டிச்சொல்லவேண்டிய வாழ்க்கைநெறிகளில்முக்கியமானவை.

வாழ்க்கை நெறியற்றவர்களாக, ஆத்ம பலமற்றவர்களாக, மேலைத்தேய அழிவுச் சிந்தனைத் தீயில் வீழ்ந்து பொசுங்கும் புற்றீசல்களாக நமது பிள்ளைச் செல்வங்கள் முடிவடைந்துவிடக்கூடாது.

இங்கிதமற்ற இயந்திரப் பிண்டங்களாகப் பாசம் பரிவற்ற, அறம் நீதியறியாத அரக்கர்களாக நமது நாளையசந்ததியினர்நடமாடக்கூடாது.

ஆத்மீக உளவியல் விவகாரங்களைப் பொறுத்தமட்டில்,எமதுமரபுசார்ந்தசிந்தனைகள், உலகசமுதாயத்திற்குஉறுதியூட்டவல்லனஎன்ற தன்னம்பிக்கை நம்முட் பிரவாகமெடுக்க வேண்டும். அப்போதுதான், நாம் எமது பிள்ளைகளுக்குவழிகாட்ட முடியும்!

எமது குழந்தைகளுக்கு, மனித நேயக் கலைகளையும்உளவியல்வெளிப்பாடுகளையும், பரிமாறல்களையும் பழக்கப்படுத்துவதற்கான முதற்படியே, 'விருந்தோம்பல்' என்பது எனது கருத்தாகும்.

# நாய் வால்?

நாய்வாலைநாமேதான்நிமிர்த்தினாலும்
சாய்வாகித்தன்வசமாய்ச்சரிந்தேயாகும்
ஆய்வாறுசெய்வதென்றுஆர்வந்தாலும்
நோய்மாறும்என்றுதடம்பதிக்கலாமா?

நாமென்னநடைபயிலும்குழவிக்கூடா
நாலுமுறைசந்திரனைக்காட்டியூட்ட?
தாய்பூமிவிடுதலைக்காய்தங்கங்க(ள்)ளை
தாரைவார்த்ததலைநிமிர்ந்தவேங்கைக்கூட்டம்

கோவேறுகழுதைகளாய்அலைந்தகோலம்
குறியுள்ளதலைமகனால்நிமிர்ந்துபோச்சு
கச்சானாகாய்கறியாசமரசப்பேச்சு?
காச்சலோடுதலைவலியாதமிழர்க்கிங்கே?

பாய்போட்டுப்படுத்திங்கேஉறங்கவில்லை
பாழ்பட்டுப்போனதினால்பதறுகின்றோம்
தடைகள்பலபோட்டாரேதயங்கினோமா?
தார்மீதுபொருண்மியத்தாற்குறைந்தாபோனோம்?

வளம்போச்சுஎன்றுசொல்லிவந்தாநின்றோம்?
குறைநிரப்புஎன்றுகூறிக்குளறினோமா?
குண்டுமழைபொழிந்துடலைக்குதறினாரே
கதறிவந்துகாலைநக்கிக்கழுவினோமா?

விழுந்தஉடல்மீதினிலேசத்தியத்தை
குனிந்தெடுத்துவழிநடந்தோம்விழிப்புக்கண்டோம்
விழுந்தடித்தஓடுவதும்உன்படைதான்
விடாப்பிடியாய்நிற்பதுவும்உன்குடைதான்

உள்வீட்டுப்பிரச்சினைக்குஉபதேசத்தை
ஊர்வழியேகேட்கின்றாய்அறிவுகெட்டோய்
உன்வளர்ப்பைதிருத்தாததாயாய்நீயும்
உலகத்தில்பேரெடுத்துவாழப்போறாய்

மக்கள்தந்தஆணைகளைமறந்தவிட்டு
சறுக்குக்கம்பில்காலைவைத்துஏறுகின்றீர்
அறுக்கஇனிமுடியாதுஅரவணைப்பை
இறங்கிவந்தால்இடர்குறையும்என்றுகாணீர்.

– ம.கேதீஸ்வரமோகன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எமது சமூகத்தின் தேவைகளை இன்றைய கல்வி பூர்த்தி செய்கின்றதா?




கல்வி என்பது மனிதமேம்பாட்டின் முழுமுதற்காரணியாக விளங்கும் ஓர் உயரிய கருவூலம் ஆகும். இது சமூகத்தையும் தனி மனிதனையும் அறிவாற்றல்,பொருள்வளம்,மனிதநேய விழுமியங்கள் என்ற முழு நிலைகளிலும் விருத்தி அடைய வைக்கும் ஒரு பரிபூரண தேவையாக எக்காலத்திலும் விளங்கி வருகின்றது. ஒரு தேசமோ, பிரதேசமோ முழுமையாக அபிவிருத்திபெறுவதற்கும்அந்த தேச அல்லது பிரதேச மக்கள் சமூகம் உயர்வடைவதற்கும் ஏற்ற வகையில் அந்தத் தேசங்களிலோ, பிரதேசங்களிலோ கல்விமுறை அமைக்கப்பட வேண்டும் என்பது கல்வித்தத்துவ அறிஞர்களின் கருத்து. அதாவது அந்தச் சமூகத்திலிருந்து கல்வியறிவு பெறுகின்றவர்களாலேயே அந்தச் சமூகம் முழுமையாகப் புனரமைக்கப்பட வேண்டும். அத்தகையவர்களாக அந்தக் கல்வியாளர்கள் உருவாகக் கூடியவாறு கல்வி வழங்கப்படல்வேண்டும்.

இந்த நிலையில் இப்பொழுது இங்கே பேணப்படும் கல்வி முறையானது, இத்தகைய நோக்கங்களை நிறைவேற்றுகின்றதா? உயர்மனிதநேய விழுமியங்கள் கொண்ட கல்விமான்களை உருவாக்குகின்றதா? இவர்களால் எமது சமுதாயம் வளர்ச்சி அடைகின்றதா? என்றவினாக்களுக்கு விடைதேட முயன்றால்,திருப்திகரமாக இல்லை என்ற விடையையே நாம் வேதனையோடு பெறவேண்டியுள்ளது.

இதற்கு எமது கல்வியாளர்களைக் குறை கூறுவதிலும் பார்க்க, உருவாக்கும் பொழுதே அவர்களை அடிப்படை நோக்கத்திலிருந்து தவற வைத்துவிடும் காரணி எதுவென்று ஆராய்ந்தால் அது எமது கல்வி முறையைத்தான் குறை கூற வைக்கின்றது.

கல்வியாளர்களை உருவாக்கி அதன் மூலம் சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக்கூடிய நிலையை உருவாக்க வேண்டிய நேரத்தில், சமுதாயத்திலிருந்து விலகிக் கற்றவர்கள்தமக்குள்ளேயே ஒரு சமூகமாகி அல்லது தான் வாழும் சமூகத்தில் இருந்து ஒதுங்கி வாழும் ஒரு நிலையை இன்றைய கல்விமுறை உருவாக்கி இருக்கின்றது. இதன் மூலம் தனது அடிப்படை நோக்கிலிருந்தே அது விலகி விடுவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

கனடா நாட்டுப் பேராசிரியர் ஒருவரிடம், எமது பிரதேசக் கல்வியாளர் ஒருவர் இலங்கையின் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களில் வழங்கப்பட்ட பட்டங்களை ஏன் நீங்கள் ஏற்றுக் கொள்வதில்லை என்று கேட்ட பொழுது, "உங்கள் பல்கலைக் கழகங்களில் இருந்து திறமைசாலிகள் உருவாகலாம், ஆனால் உங்கள் கல்விமுறையின்படி அற்புதமான மனனம் செய்யுமாற்றல் பெற்றவர்களே பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகின்றார்கள், இங்குள்ள பிரச்சினைகளை அவர்கள் மனனம் செய்து கொள்வதால் எமக்கு எந்தத்தீர்வும் கிடைக்கப்போவதில்லை. பிரச்சினைகளைச் செயல்ரீதியாக, யதார்த்த பூர்வமாக அணுகுபவர்களே எமக்குத் தேவை. அத்தகைய திறன் படைத்தவர்களாக அவர்கள் இருந்தாலும் கூட, உங்கள் கல்விமுறை மூலம் எம்மால் அதை உறுதிசெய்து கொள்ள முடியாதுள்ளது. அதனாலேயே அவர்கள் மீண்டும் இங்கு கல்வி பயில வேண்டியுள்ளது" என்றாராம்.

அந்தப் பேராசிரியரின் இந்தச் சில வார்த்தைகளூடாகவே நாம் இந்தச் சமுதாயத்தில் பேணப்படும் கல்வி முறையிலுள்ள அடிப்படைக் குறைபாட்டை இனங்காணக் கூடியதாக இருக்கின்றது. இந்தக் கல்வி முறையானது உயர்கல்வி பெற்றுக் கல்வியாளனாக விளங்கப்போகும் ஒருவனைத் தெரிவதிலேயே தவறு விட்டுவிடுகின்றது. செயற்திறன், சமூகசிந்தனை, நல்லொழுக்கம், படைப்பாற்றல் போன்ற இன்னோரன்ன மனித சமூக உய்விற்கு அத்தியாவசியமான, பண்புகளைக் கொண்டவனை இனங்காண எமது கல்விமுறை உதவவில்லை என்பதைவிட இத் தகைய சிறப்புத் தகைமைகள் பொருந்தியவனை உருவாக்கத் தவறி விட்டது என்பதே மிகவருத்தத்திற்குரிய உண்மையாகும்.

இன்று எமது சமூகத்தில் கல்வியால்

> **'பட்டப் படிப்புக்களுக்காகவும் மட்டுமல்ல, ஆய்வுகளுக்காகவும் வெளி நாடுகளுக்குச் செல்லும் உயர்கல்வியாளர்களில் பெரும்பான்மையோர், இந்த இக்கட்டான சூழலிலும், நிரம்பிய தேவைகளுக்கும் மத்தியில் தாயகத்திற்குத் திரும்ப மறுக்கின்றார்கள் என்றால், இவர்களை இவ்வாறு உருவாக்கிய கல்வி முறையே நிராகரிக்கப்பட வேண்டியதொன்று'**

உயர்ந்து, பதவிகளை வகித்துவரும் எத்தனைபேர் எந்த வகையிலும் சமூகத்தைபாதுகாப்பவர்களாகஅதன் மேன்மைக்கு பாடுபடுபவர்களாக இல்லாமல் இருப்பது மட்டுமல்ல, அவர்களே அதிகார துஸ்பிரயோகம், மோசடிகள் போன்ற சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவதையே நாம் காண்கின்றோம்.இந்தநிலையில்எமது சமூக நலனை இந்தக் கல்வி முறை பேணவில்லை, இன்றைய சமூகத்திற்கு பொருத்தமாயில்லை என்பது தெளிவாகின்றது.

இவ்வாறான குறைபாட்டைப், பூரணமற்ற தன்மையை, நோக்கை அடையாதிருக்கும்நிலையைஏன் எம் கல்விமுறை கொண்டுள்ளது என ஆராய்ந்தால், எமது கல்விமுறையில் உள்ள குறைபாடுகள் அனைத்துமே புலனாகும். அடிப்படைக்கல்வியறிவைப்பெரும்பான்மையானமக்கள் பெற்றுக் கொண்டுள்ள பொழுதும், இன்றும் எமது சமூகத்தில் சமூக ஒடுக்குமுறைகள், மூடநம்பிக்கைகள், வறுமை, பொதுநலனில் ஆர்வ மின்மை, கடும்சுயநலம், ஒழுக்கக் குறைபாடுகள் பாரிய மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டிய அளவில் உள்ளன. இந்தச் சீரழிவுகளிலிருந்து எமது சமூகம் அசைவதற்கு ஏற்ற வகையில் எமதுகல்வியபன்படவில்லை.

மாறாகக் கற்றவர்களே மிகப் புத்திசாலித் தனமாக இச்செயல்களில்ஈடுபடுகின்றார்கள். எமது கல்வி முறையானது மாணவர்களைக் குறுகிய மனப் பாங்கு கொண்டவர்களாக, சமூகச்சிந்தனை அற்றவர்களாக மாற்றுகின்றது. ஆண்டு ஐந்தில் புலமைப் பரிசில் தேர்விற்காக ஓடத் தொடங்கும் மாணவன், தன் சக நண்பனையே விரோதியாக, தனது சந்தர்ப்பத்தைப் பறிக்க முயலும் ஒருவனாக இனங்காண்கின்றான். அந்த இளம் வயதிலேயே சுயநல சிந்தனையை எமது கல்விமுறை, அவனுள் வெற்றிகரமாக விதைத்துவிடுகின்றது. கல்வி அறிவு உயர உயர வட்டங்களைச் சிறிது சிறிதாகக் குறைத்து உயர்கல்வியாளர்கள் தமது குடும்பம் என்ற நிலைக்குள் மட்டுப்படுத்தப்பட்டு விடுவதற்கு, சகல மட்டங்களிலும், ஆண்டு ஐந்திலிருந்து பல்கலைக் கழகத் தேர்வுகள் வரை எமது கல்வி அமைப்பு கொண்டுள்ள போட்டித் தேர்வுகளே பெரிதும் காரணமாகின்றன.

ஆண்டு ஐந்தில் ஓடத் தொடங்கும் மாணவர்கள் சமூகத்தின் பக்கம் தம்மைத் திருப்பாது, திரும்பிப் பார்க்காமலேயே ஓடுகின்றனர். சந்தையிற் கூட பொருள்களை விற்பனை செய்வோர் ஒரு பொதுவிலையை நிர்ணயித்துப் பாவனையாளர்களுக்கு வசதி செய்கின்றார்கள். ஆனால் எமது கல்விச் சந்தையோ ஒரு புள்ளி இரண்டு புள்ளிக்காக ஒரு ஜீவமரணப் போராட்டத்தையே நடாத்தவைக்கின்றது. போட்டித் தேர்வில் பெறும் அல்லது பெறமுடியாத ஒரு புள்ளி ஒரு மாணவனை 'சுல்தானாக அல்லது பக்கிரியாக' மாற்றிவிடும் கல்வி முறையே இன்று எமக்கு நடைமுறையிலுள்ளது. இந்தப் பந்தயத்தில் வெற்றி பெறுவதற்காக நாம் திரும்பிப் பார்க்காது ஓட வேண்டியுள்ளது. திரும்பிப் பார்க்காமலேயேஓடிப்பழகியநாம்இலக்கை அடைந்தாலும் சரி, அடையாவிட்டாலும் சரி சமூக த்தைத் திரும்பிப் பார்ப்பதை நிறுத்திவைத்து விடுகின்றோம். இந்த வகையில் மாணவர்களைச் சமூகத்திலிருந்து விலகியே சிந்திக்க வைக்கின்றது எமது கல்விமுறை. இந்தவகையில் அடிப்படை நோக்கில் எமது கல்விமுறை தவறி விட்டமையை இலகுவாகச் சுட்டிக் காட்டக் கூடியதாகவுள்ளது.

பட்டப் படிப்புக்களுக்காகவும், ஆய்வுகளுக்காகவும் வெளிநாடுகளுக்குச் செல்லும் உயர்கல்வி யாளர்களில் பெரும்பான்மையோர், இந்த இக்கட்டான சூழலிலும், நிரம்பிய தேவைகளுக்கும் மத்தியில் தாயகத்திற்குத் திரும்ப மறுக்கின்றார்கள் என்றால் அவர்களை அவ்வாறு உருவாக்கிய கல்வி முறையே நிராகரிக்கப்பட வேண்டியதொன்று.

அது மட்டுமன்றிக் கீழைத்தேய நாடுகளிலுள்ள திறமைசாலிகளைப் புலமைப்பரிசில் என்ற போர்வையில் தம்மிடம் அழைத்து, பின் அங்கேயே வளமான வாழ்க்கையை அமைத்துக்கொடுத்து, அவர்களின் திறன்களை உறிஞ்சிவிடும் மேலைநாடுகளின் கொள்கைக்கு ஏதுவாக இருப்பதும் எமது கல்வி முறையிலுள்ள பாரிய குறைபாடாகும். இதுவும் எம் உயர்கல்வியாளர்கள் எம் தேசத்திற்கு, சமூகத்திற்கு பயன்படாமைக்கு ஒரு காரணமாகும்.

அடுத்து எமது கல்விமுறையானது, மாணவர்களுக்குப் போதிய செயற்திறனை வழங்குவதில்லை.சகல விடயங்களையும் அவன் தத்துவரீதியாகவே அறிகின்றான். அவற்றைச் செயல்ரீதியாக அணுகும் பொழுது ஏற்படும் சிக்கல்களுக்கு அவன் முகம் கொடுக்க முடியாமல் விலகிவிடுகின்றான். இதனால் அவனால் முழுமையாகச் சமூகத்திற்குப் பயன்பட முடிவதில்லை. இந்தச் சிக்கலை நகைச்சுவையாகப் பலர் விளக்கியுள்ளார்கள்.

ஒரு மாணவன் சமையற்கலை வகுப்புக்குச் சென்றான். அங்கே விதம் விதமான உணவுப் பொருட்களைத் தயாரிக்கும் குறிப்புக்களை மட்டும் ஆசிரியர்கள் வழங்கினார்கள். இந்த குறிப்புக்களை வைத்துக்கொண்டு அந்த மாணவன் பொங்கல் அன்று பொங்கத் தொடங்கினான். குறிப்பின்படி செயற்பட்ட அவன் பொங்கி முடியும் தறுவாயை அடைந்தபொழுது, குறிப்பைப் பார்க்க 'இறக்கும் பொழுது ஏலம் போட்டு இறக்கவும்' என்றிருந்தது.

சிறிதுநேரம் சிந்தித்த அவன் குறுக்கும் நெடுக்குமாக நடந்து முதலாம் முறை பொங்கல் இரண்டாம்முறை பொங்கல் மூன்றாம் முறை பொங்கல் என்று உரத்துக்கூவி விட்டுப் பாத்திரத்தை இறக்கினானாம். எமது கல்வி முறையிலுள்ள பாரிய இன்னொரு குறைபாட்டை, அதனால் சமுதாயத்திற்கு ஏற்படும்சிக்கலை இலகுவாக இச்சம்பவம் மூலம் புரிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. எமது கல்வி முறையானது, மாணவர்களின் திறன்களை இனங்கண்டு, அவற்றை வளர்த்து அதன்மூலம் சமூகம் அவனது பயன்பாட்டைப் பெறவும், அவன்தன் ஆற்றலை வளர்த்து ஆளுமை பெறவும் வழி சமைக்காது, மாறாக வெறும் ஏட்டுக்கல்வி அறிவு கொண்டவர்களையே உருவாக்குகின்றது. இவர்களால் சமூகத்திற்குச் சேவை செய்ய விரும்பினும், திருப்திகரமாகச் செய்வதற்கு ஏற்ற வகையில் கல்வி அவர்களைஉருவாக்கவில்லை.

மனிதநேய விழுமியங்களை, அறப்பண்பு களை உருவாக்க வேண்டியமதக்கல்வியும்,எமதுமண், எமது பிரதேசம், எமது மொழி, எமது சமூகம் என்ற பாசப்பிணைப்புக்களை ஏற்படுத்த வேண்டிய வரலாற்றுச் சமூகவியல் கல்வியும் தமது இலக்கிலிருந்து நேர்மாறாக விலகிமத, பிரதேச கலவரங்களைத் தூண்டுவதிலும்ஒரு மொழிபேசும்மக்களையே பிரதேச, சாதிய ரீதியாக பிளவுபட வைத்தும்இருக்கின்றது.

இன்று நடைமுறையிலுள்ள கல்வியானது வருமான இலக்கை அதுவும்சொற்பவருமானமுள்ளஅரச பதவிகளை நோக்கியே வழங்கப்படுகின்றது. இதனாலேயே அரச பதவிகளிலுள்ள கல்வியாளர்கள் சமூக விரோத முறைகளில் பொருளீட்ட முனைவதும், கல்வி யாளர்கள் அரச பதவிகளை இலக்காகக் கொள்வதும் தொடர்கின்றது. மாறாக சகல துறைகளிலும் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடக்கூடிய திறன் மிகுந்தவர்களை உருவாக்குவதன் மூலமே சமூகம் பயன் பெறமுடியும். ஆனால் அதை இந்தக் கல்விமுறை பூர்த்திசெய்யவில்லை.

தொழில் துறை சார்ந்த கல்வியானது ஒரு சமூகத்தின் அவசிய தேவை ஆகும்.ஆனால்இங்கு தொழில்நுட்பக் கல்வி வழங்கும்மையங்களும்மனனம் செய்வித்தலையும் அதன் மூலம் அரச சேவைகளையும் பரிச்சயப் படுத்துகின்றன. ஒருவர் சுயமாக ஒரு தொழில் முயற்சியில் ஈடுபட்டு வெற்றி அடைவதற்கு வழிகாட்டக்கூடிய கல்வி எமது கல்விமுறையில் அறவே காணப்படவில்லை. தனித்தோ, கூட்டாகவோ உற்பத்தி சார்ந்த தொழில்களில் ஈடுபட்டு அதன் மூலம் உயர்ச்சியை மட்டுமே அளிக்கக்கூடிய துறைகளில் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கான தகுதியை வழங்கக்கூடிய வகையில் எமது கல்வி அமைப்பில் மாற்றங்கள் ஏற்படுதல் அவசியமானது.

இறுதியாக எமது கல்வி அமைப்பை அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பேணப்படும் நவீன விஞ்ஞான தொழில்நுட்ப கல்வி முறைகளோடு ஒப்பிடும் பொழுது நாம் எத்தனையோ தலைமுறைகள் பின்தங்கியுள்ளமை தெளிவாகப் புலப்படும். இதுவும் கால ஓட்டத்தில் எம் சமூகம் மீது பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும் ஒரு காரணியாகமாறும்.

எனவே எம் சமூகத்திற்கு எந்த வகையிலும், திருப்திகரமாக அமையாத பலதரப்பட்ட குறைபாடுகள் கொண்ட இந்தக் கல்வி முறையை மாற்றி, சமூகத்திற்கு நூற்றுவீதமும் பயன்படக் கூடிய திறனும், பண்பும் பொருந்திய கல்வியாளர்களை உருவாக்கக் கூடிய வகையில், எமது கல்விமுறை மாற்றி அமைக்கப்பட்டு நவீன மயப்படுத்தப்பட்டுக் காலத்தின் — சமூகத்தின் முழு நிலைகளிலும் பயன்படக்கூடிய ஒன்றாக்கப்படல் ஒரு யுக மாற்றத்தை எதிர் நோக்கி நிற்கும் எமது சமூகத்தின் தாமதிக்க முடியாத உயிர்உயர்பிரச்சினைகளில்ஒன்றாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் (பிரித்தானியக் கிளை)

# வருடாந்த உதைபந்தாட்டப் போட்டி – 1995



தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வெற்றிக் கிண்ணத்திற்கான ஐந்தாவது வருடாந்த உதைபந்தாட்டப் போட்டி, சென்ற 15ஆம் நாள் (15-04-95) இலண்டன் தென் விம்பிள்டனிலுள்ள ரட்லிஸ் பாடசாலை (Rutlish School) மைதானத்தில் நடைபெற்றது. காலை 9.30 மணியளவில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கொடியேற்றத்துடனும், மௌன வணக்கத்துடனும் தொடங்கியமேற்படி போட்டியானது மாலை 7.30 மணிவரை நடைபெற்றது.

இப்போட்டியில் பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளிலிருந்து வருகைதந்த கழகங்களுடன், இலண்டனிலுள்ள முதன்மைத் தமிழ்க் கழகங்களுமாக மொத்தம் 16 கழகங்கள் பங்குபற்றி மிக விறுவிறுப்புடன்மோதிக்கொண்டன. உதைபந்தாட்டத்தின் இறுதிப் போட்டியில் பங்கெடுத்த சேபிற்றன் (Surbiton) கழகம் 2:1 என்ற கோல் (Goal) வித்தியாசத்தில் பிரான்சிலிருந்து வந்த சன்றைஸ் (Sunrise) கழகத்தை வென்று, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் '95' ஆம் ஆண்டிற்கான வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது. இரண்டாவது இடத்தை பிரான்ஸ் சன்றைஸ் கழகமும், மூன்றாவது இடத்தை இலண்டன் புளூஸ் (Blues) கழகமும் பெற்றுக் கொண்டன. இப்போட்டியில் சிறந்த விளையாட்டு வீரனாக சேபிற்றன் கழகத்தைச் சேர்ந்த திரு. நீகன் சற்குணதேவா என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். போட்டியின் இறுதியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் இவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.



தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரித்தானியக் கிளை 1991இல் ஆரம்பித்த மேற்படி போட்டியானது, இன்று பெரும் முன்னேற்றத்துடன் ஐந்தாவது ஆண்டை அடைந்துள்ளது. இதன் மூலம் கிடைத்த அனுபவங்கள் காரணமாக, இப்போட்டியானது ஒழுங்காக நடாத்தப்பட்டதுடன்பங்கெடுத்துக் கொண்ட கழகங்களும் மிகவும் கட்டுப்பாட்டுடன் விளையாடித் தமது திறமைகளை வெளிப்படுத்திக் கொண்டன. அத்துடன் அறுபதுக்கும் மேற்பட்ட தொண்டர்களும், நூற்றுக்கணக்கான கழக ஆதரவாளர்களும்,நடுவர்களுமாகப் பங்கெடுத்துக்கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பமாகவும் இப்போட்டி அமைந்தது.

இப்போட்டியின் மூலம் பெறப்பட்ட நிதியானது தமிழீழத்திலுள்ள "வாழ்வகம்" திட்டத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இதேபோன்று ஆண்டுதோறும் நடைபெற்ற போட்டியில் சேர்க்கப்பட்ட நிதியும் புனர்வாழ்வுக் கழகத்தின் பல்வேறு வேலைத்திட்டங்களுக்கு அனுப்பப்பட்டது. சென்ற ஆண்டு 5000பவுண்கள்அனுப்பிவைக்கப்பட்டமைகுறிப்பிடத்தக்கது.

விளையாட்டுப் போட்டியுடன் இணைவாக அன்றே நடாத்தப்பட்ட குழந்தைகளுக்கான விளையாட்டு, மாலை நிகழ்ச்சியான இசைமாலை-95, அதிர்ஸ்ட இலாபச் சீட்டிழுப்பு போன்ற நிகழ்வுகள் மூலம் கிடைத்த நிதியும் வாழ்வகத்திற்கே அனுப்பிவைக்கப்படும்.

மாலைநிகழ்ச்சியானஇசைமாலை-95 இலண்டன் றெயின்போ (Rainbow) இசைக்குழுவின் இன்னிசையில், 20 பாடகர்கள் கலந்துகொண்ட சிறந்ததோர் இசைப்போட்டியாக நடைபெற்றுள்ளது.

இப்போட்டியில் சிறந்த பாடகராகத் தெரிவுசெய்யப்பட்ட திரு.டேவிற் பாக்கியம் என்பவர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். இசைமாலை நிகழ்ச்சியின்போதே அதிர்ஸ்ட இலாபச்சீட்டிழுப்பு நடைபெற்றது. இதில்பின்வரும்இலக்கங்கள்அதிர்ஸ்டஇலக்கங்களாகத்தேர்ந்தெடுக்கப்பட்டன:-

1. 2306 (பரிசில்.. இருவருக்கான பரீஸ் சென்று திரும்பும் விமான பயணச்சீட்டு )
2. 2229 (பரிசில்.. CD-Player)
3. 1375 (பரிசில்.. Microwave)

எமது தாயகத்தில் கண்பார்வை இழந்தோரை முழு மனிதராக வாழவைக்க முயன்றுவரும் வாழ்வகம் அமைப்பிற்கு, மேற்படி நிகழ்வுகள் மூலம் திரட்டப்படும் நிதியானதுஅதன் செயற்பாடுகளை மேலும் ஊக்குவிக்க உதவும். அதன்வேலைத்திட்டங்கள்வெற்றிகரமாக அமையவேண்டுமென வாழ்த்தும் அதேவேளையில், இந்நோக்கத்திற்காகப் பங்களிப்புச் செய்த அனைவருக்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் (பிரித்தானியக் கிளை) தனது நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றது.

# ஏன்பூநகரி....

எதிர்ப்புணர்வும் மக்களிடம்-அவர்களை அறியாமலே-ஏற்பட்டு வருகின்றது. இவையெல்லாம் சேர்ந்து தமிழீழ தேசாபிமான உணர்வையும் மக்களிடம் புகுத்தி வருகின்றது. இவ்விதம் சிங்கள அரசுக்கெதிராகத் தமிழர்களிடம் பெருகிவரும் உளவலுவை வளர விடாது தடுக்க, சிங்கள அரசும் இராணுவத் தலைமையும் விரும்புகின்றது. இத்தகைய உள் நோக்கங்களுக்காவும் பாதையைத் திறக்கஅதுவிரும்புகின்றது.

இவ்விதம் இராணுவம் இருக்கத்தக்கதாகப் பூநகரிப் பாதையைத் திறந்துவிடுவதில், இரண்டு முக்கிய விடயங்களை அரசும் இராணுவத் தலைமையும் சாதிக்கப் பார்க்கின்றன. வடதமிழீழமக்கள் பெற்றுவரும் உளஉறுதியை-அரசு மீதான எதிர்ப்புணர்வை-வளரவிடாமல் தடுப்பது ஒரு நோக்கம். இரண்டாவது, தேவை ஏற்படும் போது, இதுவரை நிறைவேறாதிருக்கும் குடாநாடு மீதான ஆக்கிரமிப்புப் போரை விட்ட இடத்திலிருந்துதொடங்குவது. பூநகரியில் இராணுவம் நிலைகொண்டிருக்கத்தக்கதாக ஒரு பாதை திறப்பிற்குப் புலிகள் இயக்கத்துடன் ஒரு உடன்பாட்டைக் கண்டுவிட்டால், அரசிற்கு இன்னுமொரு நன்மை காத்திருக்கின்றது. அதாவது, புலிகள் இயக்கத்தின் அனுமதியுடன், இராணுவ கேந்திர முக்கியத்துவம்வாய்ந்தஇந்தப் பகுதியில், தாக்குதற் பயமின்றி ஒருபடைமுகாமைத்தொடர்ந்து பேணலாம். அப்படி ஒரு உடன்பாடு வந்தால் இரண்டாயிரம் போர்வீரர்களால் பாதுகாக்கப்படும்இந்தப்படைத்தளத்தை ஒரு நிரந்தர இராணுவமுகமாக என்றைக்கும் நிலைநிறுத்தி விட முடியும். இராணுவ ரீதியாக இந்த முட்டாள்த்தனத்தை புலிகள் இயக்கம் ஒருபோதும் செய்யமாட்டாது.

பூநகரிமுகாமைஅப்புறப்படுத்தஅரசும் இராணுவத் தலைமையும் மறுத்து வருவதற்குரிய உண்மையான காரணிகளை மேலே சொல்லி உள்ளோம். ஆனால், அந்த உண்மைகளை மறைத்துவிட்டு இராணுவத் தலைமை கூறும் காரணங்கள் வேடிக்கையாக இருக்கின்றன. இதுபற்றி இராணுவத் தளபதிஜெரிடி.சில்வாவிளக்குகையில், 'பூநகரி முகாமை முற்றாக எடுத்தால்அதைப்புலிகள்பாதையாக்கி, வன்னிப் பெருநிலப்பரப்பினுள் புகுந்து மன்னார், வவுனியா, மணலாறு முகாம்களைத் தாக்குவார்கள். அத்துடன் திருக்கோணமலை, மட்டக்களப்பிலும் பெரிய தாக்குதல்களை மேற்கொள்வார்கள்' எனக் கூறியுள்ளார்.

குடாநாட்டிற்கும் வன்னிப் பெருநிலத்திற்குமானபிரயாணத்தைப்பொறுத்தளவில், புலிகள் இயக்கத்திற்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. இது எமது மக்களுக்குத் தெரியும். சிங்கள இராணுவத்திற்கும் தெரியும். புலிகளின் விசைப்படகுகள் அரைமணியில் கிளாலிக்கடலைக்கடந்துவிடுகின்றன என்பதை, உலகச் செய்தியாளர்களே கண்டு அனுபவித்துச் சொல்லியிருக்கிறார்கள். சங்குப்பிட்டிப் பாதையூடாக வன்னிப் பெருநிலப்பகுதியின் ஓர் இடத்திற்குச் செல்வதற்கும், கிளாலிக் கடலைக் கடந்து அதே பகுதிக்குச் செல்வதற்கும், புலிகள் இயக்கத்தைப் பொறுத்தளவில் ஒரேயளவு நேரமே எடுக்கும். அத்துடன், பூநகரிப் பாதையூடாகக் கொண்டுசெல்ல வேண்டியபடையணிகளையும்படைக்கலங்களையும், கிளாலிக் கடலூடாகவும் கொண்டு செல்ல முடியும். பூநகரிச் சமரை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். நாகதேவன்துறையில் கடற்படை நிலைகொண்டிருக்கத்தக்கதாகவே, பல்லாயிரம் புலிவீரர்களையும் கனரக ஆயுதங்களையும் கிளாலிக் கடலூடாகவே புலிகள் கொண்டு சென்று-வந்தனர்.அத்துடன்பூநகரிப் பாதை திறந்தவுடன் புலிகள் திருக்கோணமலையிலும்-மட்டக்களப்பிலும் பெரிய தாக்குதல்களை நடாத்திவிடுவார்கள், அதனால்தான் பூநகரி முகாமை மூட மறுக்கிறோம்' என்று இராணுவத் தளபதி புலம்புவது, உண்மையில்பொருந்தாத ஒரு சாட்டு. பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேண்டும்! பூநகரி இராணுவ முகாமை மூடினால், திருக்கோணமலையிலும் மட்டக்களப்பிலும் பாரிய தாக்குதல்களைப் புலிகள் செய்வார்கள் என்பது,வேடிக்கையாகஇல்லையா?

இது ஒரு புறமிருக்கட்டும். 'போரை இராணுவம் வியாபாரமாக்கப் பார்க்கின்றது' என்று, கடுமையான தொனியில் தனது இராணுவத்தையே குற்றம் சாட்டிய சந்திரிகா அம்மையார், எங்ஙனம்அதேபடையின்தளபதிகளை எடுக்கலாமா? விடலாமா? என ஆலோசனைநடாத்தியிருக்கமுடியும்! ஒன்றுக்கொன்று முரணான இந்த இருசெயல்களும்-சில அரசியல் அவதானிகள் கூறுவதுபோல-சந்திரிகா அம்மையாரின் அரசியல் முதிர்ச்சியின்மையைக் காட்டுகின்றதா? அல்லதுதமிழரின்தேசியஇனப் பிரச்சினையைப் பேரினவாதிகள் நோக்குவதுபோல, இராணுவக் கண் கொண்டு சந்திரிகா அம்மையாரும் நோக்கத் தொடங்கியுள்ளார் என்பதைக் காட்டுகின்றதா?

இப்பொழுது நாங்கள் ஒரு முடிவுக்கு வரமுடியும். பூநகரியில் இராணுவம் இருக்கத்தக்கதாகப் பாதையைப் திறப்பது தமிழ் மக்களுக்கு நன்மை பயக்குமா? அல்லது ஆபத்தாக முடியுமா? நிச்சயம் ஆபத்தில்தான்முடியும்.


தமிழீழ விடுதலைப்புலிகளால் (சுவிஸ் கிளை) ஒழுங்கு செய்யப்படும்

## மாபெரும் மேதின ஊர்வலங்கள்

சர்வதேசத் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு,சுவிஸ் வாழ் தமிழ்த் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து திரண்டெழுந்து எமது தேசிய விடுதலைப் போராட்டத்தினைத் தாயகத்திலே வெற்றிபெறச் செய்திட அணிவகுக்க அறைகூவல் விடுக்கின்றோம்.

காலம்: 01-05-95 திங்கட்கிழமை

இடம்: 1. சூரிச் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்
முற்பகல் 10.00 மணி

2. ஜெனிவா புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்
பிற்பகல் 2.00 மணி

அனைத்து சுவிஸ் வாழ் தமிழீழ தேசபக்த மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.


# வயற் செய்கைக்கும் அனுமதி வழங்க மறுப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்புறத்தில்இருக்கும்தமிழர்களின்வயல் நிலங்களில்சிங்களவர்களேசெய்கையில் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இவ்வயல் நிலங்களில் வேலைக்காக வரும்தமிழர்கள்படையினரால்திருப்பி அனுப்பப்படுகின்றனர். எல்லைப்புறக் கிராமங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களிலும் தமிழர்கள் விவசாயச் செய்கையில்ஈடுபடுவதைப்படையினர் கட்டுப்படுத்திவருவதுதெரிந்ததே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கலி

சுண்ணத் தரைகிண்டிச் சோதித்து,
மண்புரட்டிச்
சின்னஞ் சிறுநாற்றைச் சீட்டுவைத்தான் -
கண்ணின்
ஆழத்தால் காணா... அடிநீரை
மோந்தெடுத்து
பாலாய்ப் பயிர் வாயில் பாய்ச்சிவிட்டான் -
கேளா,
வெயிலில் வியர்த்தான். விழுநீரை
வேரிடையே
உயிரின் விலையென்றே ஊற்றிநின்றான் -
பயிரும்,
அந்தோபார்...! ஆஹா... அழகாக
'ஆடி' வரும்,
பந்திக்காய்ப் பச்சைபடைக்கிறது!
சிந்திப்பான்,
காலை, அயலூரின் 'கந்தன்' மணி...
எழுப்ப
மேலேமுடிந்த முடிச்சுடனே... காளை...,
அவிழ்த்து அணிவகுப்பான்! அந்த
ஒலிகிளம்பிப்
புவிக்கு இசைகூட்டப் புல்லரித்து - கவிதை
வாய்விட்டு நூறுவடித்து, பயிரணைத்து,
'நோயென்ன!' கேட்பான் நோகாமல் -
மேய்கின்ற
மாட்டைத் தடவிமனம் போல
மேயென்பான்!
தோட்டத்தைக் காலைகுளிப்பாட்ட...
பாட்டோடு
ஏறித் துலாவில் ஏகாந்தம் பேசி, நெற்றி
பீறும் வியர்வைபிளிர்த்தெறிந்து - 'சோறை'
நாளைதரவல்ல நாற்றுக்களைக்
காதலிப்பான்!
நீளும் நிழலில் அயர்ந்து - கூழை,
பாணிப்பினாட்டோடு... - பல்லினிக்கத்
தின்றுவிட்டுக்
காணிமுழுதுங் கருத்தோடு - நாணி இருள்
திண்டும் வரைக்குந் திகட்டாமல்
மெய்சிலிர்த்து
மீண்டும் அதே நினைவில் மூழ்கிடுவான்.
யாண்டும், இந்தச்சுகமெல்லாம்...
எம்மண்ணில்நேற்றுவரை
வந்த சுவர்க்கத்தின் வாரிசுவே! 'வந்த'
வெளிநாட்டுக் காசெங்கள் வீடெல்லாந்
தேங்கியதால்
பொலிவிழந்துபோச்சின்றெம் ஊர் - வலிமை
கெட்டுக் களைத்து - 'கூப்பனிநாற்'
சோம்பலுற்றுப்
பட்டுப் பொசுங்கிற்றெம் பயிர்! - சுட்டு
நிவாரணங்கள் எம்மைநிமிராமற்
செய்ததனால்
சுவாசிக்கச் சோர்ந்திற்றெம் உயிர்!
'அவாவில் ஆடி அயல் தேடி
'ஆதாரம்' விட்டதனால் காடாகிப்போச்சாம் 'கலி'

-த.ஜெயசீலன்



U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
Gold Gasse-8, 7000 Chur
SWITZERLAND
Tel/Fax: 077-816609

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943

Printed by Observer Group Newspapers,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்